

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | செப்டம்பர் 4, 2014 | புரட்சி 13 | முழக்கம் 34 | விலை: ரூ.3.00


## மதத்தை அரசியலாக்காதே; விநாயகன் ஊர்வலத்தை எதிர்த்து

# பெரியார் கைத்தடி ஊர்வலம்

**சென்னையில் செப்.7 இல்**

- *பதட்டத்தை உருவாக்கக்கூடிய விநாயகன் சிலை ஊர்வலம் என்பது மத ஊர்வலம் அல்ல; மதத்தின் பெயரால் நிகழும் அரசியல் ஊர்வலம்.*
- *சென்னை நகரில் 'மிலாது நபி' ஊர்வலம் இஸ்லாமிய அமைப்புகள் நீண்டகாலம் நடத்தி வந்தன. அமைதியாக மக்களுக்கு எந்த இடையூறும் இன்றி அந்த ஊர்வலம் ஆண்டுதோறும் நடந்து வந்தது. இதற்குப் போட்டியாக மதவாத அரசியல் சக்திகள் 'விநாயகன்' சிலை ஊர்வலத்தை அதற்குப் பிறகுதான் தொடங்கின.*
- *தி.மு.க. ஆட்சி காலத்தில் இந்த ஊர்வலங்களால் பதட்டம் உருவாக்கப்படுவதைத் தவிர்க்க இரண்டு ஊர்வலங்களையும் தவிர்த்துவிடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆட்சியின் கோரிக்கையையேற்று, இஸ்லாமியர் அமைப்புகள் மீலாது நபி ஊர்வலத்தைக் கைவிடுவதாக அறிவித்தன. அது முதல், நபிகள் நாயகம் பேரணி, சென்னையில் நடக்கவில்லை. ஆனால், விநாயகன் ஊர்வலத்தை கைவிட மதவாத அரசியல்வாதிகள் மறுத்து விட்டனர்.*

  *அடுத்து ஆட்சிக்கு வந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சி, விநாயகன் ஊர்வலம் நடத்த அனுமதியே தந்துவிட்டது. இப்போது விநாயகன் ஊர்வலங்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன.*
- *2004 ஆம் ஆண்டு பெரியார் திராவிடர் கழகம் இராசயன பூச்சு பூசப்பட்டு, விநாயகன் சிலையை கடலில் கரைப்பதால் சுற்றுச்சூழல் மாசுபடுவதோடு கடல் வாழ் உயிரினங்களுக்கு ஆபத்து ஏற்படுவதை சுட்டிக் காட்டி வழக்கு தொடர்ந்தது. இரசாயன சிலைகளை கரைக்க உயர்நீதிமன்றம் தடைவிதித்தது. கடலில் 500 மீட்டர் தொலைவில்தான் சிலைகளை கரைக்க வேண்டும் என்றும் கூறியது. ஆனால், நீதிமன்றம் விதித்த நிபந்தனைகளை ஏற்று விநாயகன் சிலைகள் தயாரிக்கப்படுவது இல்லை; வண்ணப்பூச்சுகளில் இரசாயனம் கலக்கப்படுகிறது. அவை கண்காணிக்கப்படுவதும் இல்லை.*
- *போக்குவரத்துக்கு இடையூறாக 1800 இடங்களில் விநாயகன் சிலைகளை வைக்க சென்னை காவல்துறையே அனுமதி வழங்கியிருக்கிறது. பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு ஒரு சில இடங்களில் மட்டுமே 'கெடுபிடி'களுடன் அனுமதி தரும் காவல்துறை, விநாயகன் சிலை ஊர்வலங்களுக்கு மட்டும் விதிகளை மீறி சிலைகளை வைக்க அனுமதிக்கிறது.*
- *குஜராத்திலிருந்து தொடரப்பட்ட வழக்கில் உச்சநீதிமன்றம் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட கோயில்களை அகற்றிட வேண்டும் என்று கூறியுள்ளதோடு, மாநில அரசுகளிடம் நடைபாதைக் கோயில்கள் பற்றிய விவரங்களைக் கேட்டது. தமிழ்நாட்டில் 70,000 கோயில்கள் போக்குவரத்துக்கு இடையூறாக அமைக்கப்பட்டுள்ளன என்ற தகவலை தமிழக அரசின் தலைமைச் செயலாளர் உச்சநீதிமன்றத்தில் தெரிவித்தார். ஆனால், அந்தக் கோயில்களை அகற்ற எந்த நடவடிக்கையும் தமிழக ஆட்சியாளர்கள் எடுக்கவில்லை. இந்த நிலையில் 1800 இடங்களில் விநாயகன் சிலைகளை அமைக்க காவல்துறை அனுமதி தந்து வருகிறது.*
- *விநாயகன் சிலை ஊர்வலம் சென்னையில் இஸ்லாமியர் மசூதி பகுதி வழியாகவே போக வேண்டும் என்று இந்து முன்னணி தலைவர் இராம. கோபாலன், ஊர்வலம் நடக்கும்போது ஒவ்வொரு ஆண்டும் பிரச்சினைகளை உருவாக்கி வருகிறார். அவரை சில மணி நேரம் தடுத்து வைத்து பிறகு விடுதலை செய்வதை ஆட்சியாளர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். வழக்குகள் பதிவு செய்வதில்லை. இப்போது காவல்துறை அனுமதித்த இடங்களைவிட மேலும் கூடுதலான இடங்களில் சிலைகளை அமைப்போம் என்று அறிக்கை விடுகிறார்.*
- *வீடுகளுக்குள் பக்தர்கள் நடத்தும் 'விநாயகன் வழிபாடு' அவர்களுக்கான உரிமை. ஆனால், வீதிகளில் நடக்கும் இந்த ஊர்வலம் மத நிகழ்வு அல்ல; மத வெறி அரசியலை மதத்தின் போர்வையில் திணித்து, பதட்டத்தை உருவாக்கும் முயற்சியேயாகும்.*

*வீதிகளில் காட்சிப் பொருள்களாக நிறுத்தப்படும் இந்த வண்ண வண்ண விநாயகன் உருவங்கள், கோயில்களில் உள்ளதைப்போல் பார்ப்பன புரோகிதர்கள் 'வேத மந்திரம்' ஓதி, சக்தியூட்டப்பட்டவை அல்ல என்பதாலும், நமது ஒடுக்கப்பட்ட சமுதாய மக்கள் உருவாக்கிய சிலைகள் என்பதாலும் அவைகளை நீரில் மூழ்கடித்துவிட வேண்டும் என்று கூறி - அதற்கு 'விசர்ஜனம்' என்று பெயர் சூட்டி விட்டார்கள். இப்படி ஒரு அவமானத்தை நாமே போய் தேடிக் கொள்ளலாமா என்று சிலைகளை நிறுவும் நமது சொந்தங்களான, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சகோதரர்கள் சிந்திக்க வேண்டும் என்பதே நமது உரிமையான வேண்டுகோள்!*

*மதத்தின் பெயரால் சமூகத்தில் பதட்டத்தையும் கலவரத்தையும் திணிக்கும் மத அரசியலையும் அதில் அடங்கியுள்ள சட்ட மீறல், சுற்றுச் சூழல்கேடு, தமிழின இழிவுகளையும் மக்களுக்கு எடுத்துரைக்க எதிர்ப்பைப் பதிவு செய்வதை சமுதாயக் கடமையாகக் கருதுகிறோம்.*

*எந்தப் பெரியார் - இந்த இழிவுகளுக்கு எதிராக தமிழினத்துக்காகப் போராடினாரோ அந்தப் பெரியாரின் கைத்தடியை குறியீடாக்கி, பெரியார் கைத்தடிகளுடன் திராவிடர் விடுதலைக் கழகம் ஊர்வலமாகப் புறப்படுகிறது!*

**நாள் : 7.9.2014, ஞாயிறு மாலை 3 மணி**

**திருவல்லிக்கேணி அய்ஸ்அவுஸ் காவல் நிலையம் அருகிலிருந்து .**

**தலைமை : இரா. உமாபதி**
**(சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகச் செயலாளர்)**

**அணி அணியாய் திரண்டு வாரீர்!**

## தோழர்கள் முயற்சி வெற்றி: சென்னையில் சட்ட விரோதக் கோயில் இடிப்பு

இந்தியா முழுதும் நடைபாதைக் கோயில்களை அகற்ற வேண்டும் என்று குஜராத் மாநிலத்திலிருந்து தொடரப்பட்ட ஒரு வழக்கில் உச்சநீதி மன்றம் உத்தரவிட்டிருந்தது. ஒவ்வொரு மாநிலத்திலும் சட்டவிரோதமாக போக்குவரத்துக்கு இடையூறாக அமைக்கப்பட்டிருந்த கோயில்கள் பற்றிய விவரங்களையும் உச்சநீதி மன்றம் கேட்டது. தமிழக அரசின் தலைமைச் செயலாளர் தமிழ்நாட்டில் 70,000 கோயில்கள் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளன என்று உச்சநீதிமன்றத்தில் பதில் மனு தாக்கல் செய்தார். அந்தக் கோயில்களை அகற்ற உச்சநீதிமன்றம் விதித்த 'கெடு' முடிந்த நிலையிலும் கோயில்கள் அகற்றப்பட வில்லை. இந்த நிலையில் மேலும் புதிய சட்ட விரோதமான கோயில்களைக் கட்டுவது உச்சநீதிமன்றத் தீர்ப்பை அவமதிக்கும் நடவடிக்கையாகும். அதையும் மீறி ஆங்காங்கே பொது இடங்களை ஆக்கிரமிக்கும் நோக்கத் தோடு கோயில்கள் எழுப்பப்பட்டு வரு கின்றன. இந்த முயற்சிகளை வாய்ப் புள்ள இடங்களில் எல்லாம் கழகத் தோழர்கள் தலையிட்டு தடுத்து வருகிறார்கள்.

சென்னை மந்தைவெளி பகுதியில், மந்தைவெளி தொடர்வண்டி நிலையம்

(4 ஆம் பக்கம்)



**தலையங்கம்**

## குரு–உத்சவ்

‘சமஸ்கிருத வாரத்தை’த் திணித்த பா.ஜ.க. ஆட்சி, இப்போது ஆசிரியர் நாளை ‘குரு-உத்சவ்’ என்று சமஸ்கிருதத்தில் பெயர் மாற்றம் செய்து மனிதவள மேம்பாட்டுத் துறை ஆணையிட்டுள்ளது. இந்தியாவை “சமஸ்கிருத மயமாக்கும்” முயற்சிகள் தீவிரமாகி வருகின்றன. ஆண்டுதோறும் செப்டம்பர் 5 ஆம் நாள் முன்னாள் குடியரசுத் தலைவர் இராதாகிருஷ்ணன் நினைவாக ஆசிரியர் நாளாக பின்பற்றப்பட்டு வருகிறது. இதன் பெயரை இப்போது சமஸ்கிருதமாக்கப்பட வேண்டிய அவசியம் என்ன? வாஜ்பாய் ஆட்சி காலத்திலேயே நடந்த “திருப்பணிகள்”தான் இப்போது மீண்டும் தூசி தட்டி அமுல்படுத்துகிறார்கள். அப்போது ‘வித்யா பாரதி’ என்ற ஆர்.எஸ்.எஸ். அமைப்பு அரசு நிதி உதவியோடு நாடு முழுதும் ‘இந்துத்துவ’ கல்வித் திட்டத்தை செயல்படுத்தியது.

‘வித்யா பாரதி’யின் பொதுச் செயலாளராக இருந்த தீனானாத் பட்டா என்பவர், இந்துத்துவ கலாச்சாரத்தின் அடிப்படையிலான ஒரு மாற்றுக் கல்வி முறையை உருவாக்குவதுதான் இதன் நோக்கம் என்று வெளிப்படையாகவே அறிவித்தார். ‘வித்யாபாரதி’ நாடு முழுதும் நர்சரி முதல் கல்லூரி வரை, 14000 கல்வி நிறுவனங்களை நடத்துவதாக தீனானாத் பட்டா அறிவித்தார். அப்போது மனித வளத் துறை அமைச்சராக முரளி மனோகர் ஜோஷி, கல்வி அமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டி, ‘இந்துத்துவா’ அடிப்படையிலான பாடத் திட்டங்களை மாநில அரசுகள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றார். வேத உபநிஷத்துகளை பாடத் திட்டத்தில் இணைத்து மூன்றாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை சமஸ்கிருதத்தை கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இப்படிப் பாடத் திட்டங்களை மதவாத சிந்தனைக்குள் கொண்டு வருவதே பா.ஜ.க. ஆட்சியின் கடந்தகால செயல் திட்டம். அப்போது நடந்த கல்வி அமைச்சர் மாநாட்டில் ‘சரசுவதி வந்தனம்’ – சமஸ்கிருதப் பாடல் பாடப்பட்டதை எதிர்த்து, மாநாட்டிலிருந்து வெளி நடப்பு செய்தார், அன்றைய கல்வி அமைச்சர் பேராசிரியர் அன்பழகன், இவையெல்லாம் கடந்தகால வரலாறு. மீண்டும் அவற்றிற்கு உயிரூட்டுவதற்கான முயற்சிகள் தொடங்கியிருக்கின்றன.

வித்யார்த்தி கல்வி நிலையங்களில் மகாபாரதம் எழுதிய ‘வியாசர் ஜெயந்தி’ தான் ஆசிரியர் நாளாக கடைபிடித்தார்கள். குழந்தைகள் நாளை நேரு பிறந்த நாளுக்கு பதிலாக ‘கிருஷ்ண ஜெயந்தி’ அன்று பின்பற்றினார்கள். சமஸ்கிருதம்தான் இந்தியாவின் பொது மொழிக்கு தகுதியானது என்பதே அவர்களின் கொள்கை.

“மொழிப் பிரச்சினைக்கு ஒரே தீர்வுதான் இருக்கிறது. சமஸ்கிருதம்தான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். சமஸ்கிருதம் அந்த இடத்துக்கு வரும்வரை வசதிக்காக இந்தியை ஆட்சி மொழியாக வைத்திருக்க வேண்டும். ஆங்கிலம் அறவே ஒழிக்கப்பட வேண்டும்” என்று ஆர்.எஸ்.எஸ்.சுக்கு கொள்கைகளை வழங்கிய தனது நூலில் (Bunch of thoughts) கோல்வால்கர் எழுதியிருக்கிறார்.

அந்த அடிப்படையில்தான் அனைத்துப் பள்ளிகளிலும் சமஸ்கிருதத்தைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்றும், அதைப் பின்பற்றாத பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அரசு அனுமதியை நீக்க வேண்டும் என்றும் ஓம் பிரகாஷ் என்ற பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர், கடந்த ஜூன் 6, 2014 அன்று நாடாளுமன்றத்தில் தனி நபர் மசோதா ஒன்றைக் கொண்டு வந்துள்ளார்.


ஆசிரியர்களை மீண்டும் ‘குரு’வாக மாற்றுவதே இப்போது வந்துள்ள ‘குரு உத்சவ்’ என்ற பெயர் மாற்றத்துக்குப் பின்னால் பதுங்கியிருக்கும் பார்ப்பனிய சூழ்ச்சியாகும். வகுப்பறைகள் மாணவர்களுக்கு தோழமையையும் கருத்துப் பகிர்வுகளையும் தன்னம்பிக்கையையும் உருவாக்குவதாக இருக்க வேண்டும் என்று கல்வியாளர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். வேத காலத்தில் நிலவிய “குரு-சிஷ்யன்” என்ற கல்வி முறை “ஆண்டான்-அடிமை” தத்துவத்தில் உருவானது. வேத காலத்தில் கல்வி என்றால் வேதத்தைப் படிப்பது மட்டும்தான்! எனவே ‘குரு சிஷ்ய’ கல்வி அமைப்பில் பார்ப்பனர்கள் மட்டுமே வேதம் படித்தனர். கைவினைஞர்களுக்கும் வணிகர்களுக்கும் தேவையான கலை, அறிவியல் கல்வியை அவரவர்களே பாரம்பரியமாக மூத்த தலைமுறையினரிட மிருந்து கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது.

‘குரு-குல’ பார்ப்பனக் கல்வி முறைக்கு மாற்றாக பள்ளிக்கூடம், வகுப்பறை பாட நூல், பாடத் திட்டம், ஆசிரியர்கள், கரும்பலகை என்ற கல்வி அமைப்பு முறையைக் கொண்டு வந்ததே பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் மெக்காலேதான்! மாறி வரும் சமூகச் சூழல்களை மாற்றங் களை புறந்தள்ளிவிட்டு, மீண்டும் வேத காலத்துக்குப் போய் ஆசிரியர் களை குருவாக்கும் பார்ப்பனிய சிந்தனைகளை திணிக்க முயல்வதே இத்தகைய பெயர் மாற்றங்களுக்குப் பின்னால் உள்ள சூழ்ச்சி.

உடனடியாக இந்த பெயர் மாற்றத்துக்கு தமிழ்நாட்டில் தலைவர்கள் எதிர்ப்புகளைப் பதிவு செய்திருப்பது நல்ல நம்பிக்கையை தருகிறது. இந்த உணர்வுகளை ஒருங்கிணைத்து மதவாத அரசியலை முறியடிக்க அணியமாவோம்!

**குறிப்பு:** இந்தத் தலையங்கம் அச்சேறும்போது ‘குருஉத்சவ்’ என்ற பெயரில் கட்டுரைப் போட்டி மட்டுமே நடத்தப்படும் என்றும், ‘ஆசிரியர் தினம்’ பெயர் மாற்றம் செய்யப்படவில்லை என்றும், மத்திய அமைச்சர் ஸ்மிருதி இராணி அறிவித்துள்ளார்.

# சிரிக்க வைத்தார்: மக்களை சிந்திக்க வைத்தார்



திரையுலகில் ஜாதி ஒழிப்புப் பகுத்தறிவுக் கருத்து களைப் பரப்புவதையே இலட் சியமாகக் கொண்டவர் கலை வாணர் என்.எஸ்.கிருஷ்ணன். ‘நாகரிகக் கோமாளி’ என்று தன்னை அவர் அடை யாளப் படுத்தினாலும் அதற்குள்ளே சமுதாய மறுமலர்ச்சிக்கான சிந்தனைகளே மணம் வீசிப் பரப்பின. அவரது திரைப்படத் திலிருந்து சில காட்சிகள்.

காமெடியன் என்ற ஆங்கிலச் சொல்லுக்குக் கோமாளி என்று பொருள். கலைவாணரும் தன்னை ஒரு கோமாளி என்றே ஒப்புக் கொண்டார். ஆனால் அவர் வெறும் கோமாளி என்று தன்னைக் கூறி கொள்ளவில்லை., “சிரிக்க வைத்து நாட்டைச் செழிக்க வைக்கும் சீர்திருத்தக் கோமாளி வந்தேனய்யா” என்று கூறிக் கொண்டார். இது அவர் ‘நல்ல தம்பி’ என்ற திரைப்படத்தில் கோமாளி வேடம் புனைந்து நடிக்கும்போது பாடுகின்ற பாடல். ஆம்! அவர் ஒரு சீர்திருத்தக் கோமாளிதான்.

பழைமைக் கொள்கைகள், கடவுள், மதம் பற்றிய கண்மூடிப் பழக்க வழக்கங்கள் ஆகியன குறித்துப் பகுத்தறிவு இயக்கத்தினர் மேடையேறிப் பேசிய நேரத்தில் பக்த கோடிகள் சீற்றம் கொண்டு பலத்த எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டிருந்த காலம் அது. ஆனால் கலைவாணர் அதே கருத்துக்களை நயம்பட கலைத் துறை மூலம் புகுத்தியபோது கண்டவர்களும் கேட்டவர்களும் சீற்றம் கொள்ளவில்லை; ஆனால் சிரித்து மகிழ்ந்தார்கள். கல்லால் அடிக்கவில்லை; ஆனால் கை தட்டிக் களிப்பினைப் புலப்படுத்தினார்கள். பிள்ளையாருக்கு ஆனைமுகம் ஏன்? பானை வயிறு ஏன்? அவருக்குக் கொழுக் கட்டை படைப்பதேன்? கலைமகள் பிரம்மாவின் நாவில் குடியிருப்பதாகக் கூறுவது அறிவுக்குப் பொருந்துமா? - இவையெல்லாம் பகுத்தறிவு கேள்விக் கணைகள். இப்படிக் கேட்டதற்காகப் பக்திமான்கள் பகுத்தறிவு இயக்கத்தவரைப் பார்த்து, “கடவுளை நிந்திக்கும் கயவர்கள் இவர்கள்” என்று கண்டனம் தெரிவித்த துண்டு. ஆனால் இதே கருத்துக்களைக் கலைவாணர் திரைப்படக் காட்சியில் நடித்துக் கொண்டே புகுத்தினார். ஒரு படத்தில் டேப் அடித்துக் கொண்டு லாவணி பாடும் காட்சியொன்றினை அமைத்து அதில்,

> “அந்தக் கணபதிக்குத் தொந்தி
> பெருத்த விதம்
> என்ன? என்ன?”

என்று வினா தொடுத்தார். இந்த வினாவிற்கு விடையாக அமைந்த பாடல் என்ன தெரியுமா?

> “அந்தக் கணபதிக்குத் தொந்தி
> பெருத்தவிதம்
> கொழுக்கட்டைத் தின்னதினால்
> அண்ணே அண்ணே”

என்பதாகும்.

அடுத்து, கலைமகள் எங்கே இருக் கிறாள் என்று வினா தொடுக்க, எதிர்கட்சிக் காரர் “அவள் பிரம்மாவின் நாக்கில் குடியிருக்கிறாள்” என்று கூறுகிறார். உடனே கலைவாணர்,

> “மறையவன் நாவில் அவள்
> உறைவது நிஜமானால்
> மலஜலம் கழிப்பது எங்கே? எங்கே?”

என்று பாடுகிறார்.

ஞானசம்பந்தர் சமயகுரவர்களிலே ஒருவர். பார்வதி தேவியார் தந்த ஞானப் பால் உண்டதால் பச்சிளம் வயதிலேயே பாடல் எழுதும் ஆற்றல் பெற்று நாளும் இன்னிசை யால் சைவத் தமிழ் பரப்பினார் ஞான சம்பந்தர் என்று கூறப் படுகிறது. இவர் விளைத்த அற்புதங்களிலே ஒன்றாகக் கூறப்படுவது இவர் எலும் புருவைப் பெண்ணாக்கியது பற்றிய கதையாகும். இக்கதை “பூம்பாவை” என்ற பெயரில் படமாக்கப்பட்டது. இதில் கலைவாணர் ஞானசம்பந்தர் பற்றிக் கூறப்படும் மகத்துவத்தின் அடிப் படையையே ஆட்டங்காண வைக் கின்றார், அப்படத்தில் வரும் ஒரு காட்சி மூலம். நண்பர்கள் சிலர் கலைவாணரிடம் வந்து ஞானசம்பந்தரைத் தரிசிக்க அழைக் கிறார்கள். கலைவாணர் ஞானசம்பந்தர் யார்? அவரை ஏன் தரிசிக்க வேண்டும்? என்று கேட்கிறார். நண்பர்கள் ஞான சம்பந்தர் ஆண்டவனின் அருட் பிரசாதம் பெற்ற அடியவர் என்றும், அதனால் பச்சிளம் வயதில் பாடல் எழுதும் ஆற்றல் பெற்று “தோடுடைய செவியன்” என்று தொடங்கும் பாடலைப் பாடினார் என்றும் கூறுகிறார்கள். கலைவாணரோ, பச்சிளம் சிறுவன் இத்தகைய பழுதற்றப் பாடலைப் பாடியிருக்க முடியாது. எனவே அந்த மகத்துவத்தை நம்ப முடியாது என்று கூறுகிறார். நண்பர்கள் விட்ட பாடில்லை. “அவராகப் பாட முடியாதுதான். ஆனால் பார்வதி தந்த பால் குடித்ததால்தானே பாடினார்” என்று மறுப்பு கூறுகிறார்கள். இதுவும் ஒரு கட்டுக் கதை என்பதை எள்ளி நகையாடும் முறையில் “பார்வதியா? யாரு, நம்ம பக்கத்து வீட்டிலே இருக்காங்களே ஒரு பார்வதி அந்த அம்மாவா பால் கொடுத்தாங்க?” என்று கேட்கிறார். நண்பர்களோ தாங்கள் கூறும் பார்வதி பரமசிவக் கடவுளின் மனைவி என்று கூறுகிறார்கள். உடனே கலைவாணர், “இதோ பாருங்க, சின்னப் பையன் இவ்வளவு நல்ல பாடலை சொந்தமாப் பாடியிருப்பாங்கறதை முதல்லே நான் நம்பத் தயாராயில்லே. பாடினது தான் பாடினான், அதென்ன தோடுடைய செவியன்? சிவபெருமான் செவிக்குத் தோடு எதற்கு? அப்படிப்பட்ட ஞான சம்பந்தனை நான் பார்க்க வர முடியாது என்று மறுத்து விடுகிறார். இந்த உரையாடலிலே உள்ள கிண்டலும் கேலியும் ரசிகர்களைச் சிரிக்கத் தூண்டுவதோடு புராணக் கதைகளில் உள்ளவை எத்துணைப் பொருந்தாக் கூற்றுகள் என்பதையும் உணர்த்துகின்றன.

‘சாலிவாகனன்’ என்ற படத்தில் நகைச்சுவை மன்னர் சாதி ஒழிப்புக் கொள்கையைப் பாமரரும் புரிந்து கொள்ளும் வண்ணம் மிகப் பக்குவமான காட்சி மூலம் சித்திரித்துக் காட்டினார்.

கலைவாணர் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணைக் காதலிக்கிறார். அவருடைய தாயாரோ மிகவும் வைதீக உணர்வு உள்ளவர். எனவே கலப்புத் திருமணத்திற்குக் கடும் எதிர்ப்பு தெரிவிக்கிறார். ஆனாலும் கலைவாணர் அந்தப் பெண்ணை மனைவியாக ஏற்றுக் கொண்டு தன் வீட்டிற்கே அழைத்து வந்து குடும்பம் நடத்துகின்றார். அன்று முதல் கலைவாணரின் தாய் அதே வீட்டில் தனக்கு மட்டும் தனியே உணவு தயாரித்து உண்டு தனிக் குடித்தனம் செய்து வருகிறார். ஒரு நாள் கலைவாணர் தன் தாயிடம் வந்து, “அம்மா, இப்படி வாயேன்” என்று அழைக்கிறார். தாயார் வரத் தயங்கியதும் அவரே தாயின் கைகளைப் பற்றி சமையல் அறைக்குள் கூட்டி வந்து விடுகிறார். அங்கே அந்தத் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பெண் அம்மியின்

(4 ஆம் பக்கம்)

# தூக்குத் தண்டனை: சட்ட ஆணையம் மறு ஆய்வு

19 பேர் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக உச்சநீதிமன்றம் குறைத்ததைத் தொடர்ந்து, சட்ட ஆணையம் இந்தியாவில் தூக்குத் தண்டனையை மறுபரிசீலனை செய்யும் செயல்பாடுகளில் இறங்கியுள்ளது. இதற்காக பொது மக்கள் கருத்துகளைக் கேட்டுள்ள சட்ட ஆணையம், தூக்குத் தண்டனை குறித்து ஆவணம் ஒன்றையும் வெளியிட்டு, மக்கள் பதிலளிக்க வேண்டிய வினாக் களையும் தயாரித்துள்ளது. 2001 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை ஆண்டுக்கு சராசரியாக 132 தூக்குத் தண்டனைகளை விசாரணை நீதிமன்றங்கள் விதித்துள்ளன. இதே காலகட்டத்தில் உச்சநீதி மன்றத்தால் உறுதிப் படுத்தப்பட்ட தூக்குத் தண்டனை ஆண்டுக்கு 3 அல்லது 4 மட்டுமே! சுதந்திரத்துக்குப் பிறகு தூக்கில் போடப் பட்டவர்கள் எண்ணிக்கை 54 பேர். 2012இல் அஜ்மல் கசாப், அப்சல் குரு ஆகிய இருவரும் தூக்கிலிடப்பட்டனர். தூக்குத் தண்டனை தேவையா, இல்லையா என்பது குறித்து "ici-dia@nic.in" என்ற முகவரிக்கு மின்னஞ்சலில் கருத்துகளைப் பதிவு செய்யலாம் என்று சட்ட ஆணையம் தெரிவித்துள்ளது.

### காஞ்சி ஜெயேந்திரனை காப்பாற்றும் முயற்சி

சங்கர்ராமன் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஜெயேந்திரன், விஜயேந்திரன் உள்ளிட்ட 24 பேரும் விடுதலை செய்யப்பட்டு விட்டனர். புதுவை மாவட்ட விசாரணை நீதிமன்றம் தீர்ப்பை 2013, நவம்பர் 27 ஆம் தேதி வழங்கியது. கொலை செய்யப்பட்ட சங்கர்ராமன் மனைவி, மகன் உள்ளிட்ட 83 சாட்சிகள் மிரட்டப்பட்டு பிறழ் சாட்சிகளாக்கப்பட்டனர். மிரட்டலுக்கு பயந்து சாட்சியத்தை மாற்றி சொல்ல வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டோம் என்று சங்கர்ராமன் மனைவி, மகன் ஆகியோர் வெளிப்படையாகவே கூறினர். 187 சாட்சிகளில் 83 சாட்சிகள் பல்டி அடித்தனர். ஜெயேந்திரன் நீதிபதியுடன் லஞ்சம் தருவது குறித்து நடத்திய தொலைபேசி உரையாடல்களும் வெளி வந்தன. இவ்வளவுக்குப் பிறகு, வழக்கை மேல்முறையீடு செய்யும் முடிவு நீண்ட தாமதத்துக்குப் பிறகே எடுக்கப்பட்டது. இந்த வழக்கில் முழு விசாரணை நடத்தியது தமிழக காவல்துறை. அந்த அடிப்படையில் வழக்கை சென்னை உயர்நீதிமன்றத்துக்கு மேல்முறையீடு செய்ய தமிழக அரசு சட்ட நிபுணர்களுடன் கலந்து ஆலோசித்து முடிவு செய்து அதை புதுவை அரசுக்கு தெரிவித்தது. அதைத் தொடர்ந்து புதுவை அரசு மேல்முறையீடு செய்வதற்கான அரசாணையை வெளியிட்டு அதற்கு ஆளுநரின் ஒப்புதலையும் பெற்றது.

இந்த நிலையில் மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் முகுல் ரோத்தகி, "இந்த வழக்கு மேல்முறையீட்டுக்கு தகுதியற்றது. அப்படி மேல் முறையீடு செய்தால் புதுவை அரசு சென்னை உயர்நீதிமன்றத்தின் கண்டனத்துக்கு உள்ளாகும்" என்று கருத்து தெரிவித்துள்ளார். உண்மையில் இந்த வழக்குகளில் மத்திய அரசு தலைமை வழக்கறிஞர் தலையிட்டு கருத்து தெரிவிக்க வேண்டிய அவசியமே இல்லை என்றும், உச்சநீதிமன்ற விசாரணையிலோ அல்லது மத்திய புலனாய்வுத் துறை விசாரணைக்கோ உட்படாத ஒரு வழக்கில் மத்திய அரசு தனது வழக்கறிஞர் மூலமாக ஏன் தலையிட வேண்டும்? என்றும் மூத்த வழக்கறிஞர்கள் கேள்வி எழுப்பி யுள்ளனர். புதுவை அரசு மேல் முறையீட்டுக்கு முறையான அரசாணை பிறப்பித்தப் பிறகு, மத்திய அரசு வழக்கறிஞரின் கருத்துக்கு எந்த முக்கியத்துவமும் கிடையாது. புதுவை அரசே அரசாணையைத் திரும்பப் பெற்றால்தான் மேல்முறையீட்டை நிறுத்த முடியும் என்று சட்ட நிபுணர்கள் கூறுகிறார்கள்.

கொலை வழக்கில் தொடர்புடையவர், அதிகாரச் செல்வாக்கு மிக்க பார்ப்பனர் என்பதால், தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகளும் இதில் மவுனம் சாதிக்கின்றன. புதுவை அரசு வழக்கை மேல்முறையீடு செய்தால் அதற்கு அனுமதி தரக்கூடாது என்று சுப்ரமணியசாமி பார்ப்பனர், குடியரசுத் தலைவருக்கு முன்கூட்டியே கடிதம் எழுதியுள்ளார். பார்ப்பான் கொலை செய்தால் அதற்கு தண்டனை வழங்கக் கூடாது என்ற 'மனுசாஸ்திரம்' தான் இப்போதும் நாட்டில் சட்ட மாக இருக்கிறது என்பதற்கு இந்த நிகழ்வுகள் சான்று களாகும்.

### இரட்டைக்குவளை: கைது

தமிழ்நாட்டிலிருந்து வியப்பைத் தரும் செய்தி ஒன்று வெளி வந்திருக்கிறது. தமிழகக் கிராமங்களில் தீண்டாமைக் கொடுமைகள் பல்வேறு வடிவங்களில் திணிக்கப்படுவதை எதிர்த்து பெரியார் திராவிடர் கழகமாக இருந்தபோதும், திராவிடர் விடுதலைக் கழகமாக இருக்கும் போதும் தொடர்ந்து பரப்புரை இயக்கங்களையும் போராட்டங் களையும் கழகம் நடத்தியிருக்கிறது. குறிப்பாக 'இரட்டை தம்ளர்' தீண்டாமையைத் திணித்து வரும் தேனீர்க் கடைகளின் பட்டியலை 'புரட்சிப் பெரியார் முழக்க'த்தில் வெளியிட்டு, நடவடிக்கை ஏதும் அரசு எடுக்காதபோது அந்த குவளைகளை உடைக்கும் போராட்டமும் நடத்தப் பட்டது. முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பதுபோல் காவல்துறையின் தீண்டாமை ஒழிப்புப் பிரிவு அப்படி எதுவுமே தமிழகத்தில் இல்லை என்று பொய்யுரைத்து வந்தது. இப்போதுதான் முதன்முதலாக தர்மபுரி மாவட்டத்தில் தேனீர்க் கடைகளில் இரட்டைக் குவளையை வைத்து தீண்டாமையைத் திணித்த 6 தேனீர்க் கடை உரிமையாளர்களான சாதி வெறியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பெண்ணாகரம் வட்டம் தாசம்பட்டியில் சாந்தி, பளிஞ்சார அள்ளியில் சிவலிங்கம், பாலக்காடு வட்டம் நம்மாண்ட அள்ளி பகுதியில் வீரபத்திரன் மற்றும் முருகன், தேவகி, கிட்டம்பட்டி சித்தையன் ஆகியோர் கைது செய்யப்பட்டவர்கள். மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அஸ்ராகார்க் ஆணையின் பேரில் தனிப்படை போலீசார் மாவட்டம் முழுதும் விசாரணை நடத்தி, இவர்களை கைது செய்துள்ளனர். வன்கொடுமை தடுப்புச் சட்டம் இவர்கள் மீது பாயுமானால், அது ஏனைய சாதி வெறியர்களுக்கு எச்சரிக்கையாக இருக்கும். ஆனால், எந்தப் பிரிவில் வழக்கு போடப் போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இது தவிர, தமிழகம் முழுதும் தீண்டாமை பின்பற்றப்படும் 186 கிராமங்களை தமிழக அரசு கண்டறிந் துள்ளது. அந்த கிராமங்களில் கலை நிகழ்ச்சிகள் வழியாக ஜாதி, தீண்டாமை எதிர்ப்புப் பிரச்சாரம் செய்ய அரசு திட்ட மிட்டுள்ளதாக 'தினமலர்' ஏடு செய்தி வெளியிட்டுள்ளது.

### புகுஷிமாவில் பொறியாளர் சுந்தர்ராஜன்

கூடங்குளம் அணுஉலைக்கு எதிரான இயக்கத்தில் தீவிரப் பங்கெடுத்து உச்சநீதிமன்றத்தில் 'பூவுலகின் நண்பர்கள்' சார்பில் வழக்குகளைத் தொடுத்து போராடி வருபவர் இளம் பொறியாளர் சுந்தர்ராஜன். கடந்த பிப்ரவரி மாதம் ஜப்பான் போய் அணுஉலை விபத்து நடந்த புகுஷிமாவையும் பாதிக்கப்பட்ட மக்களையும் நேரில் சந்தித்துத் திரும்பியுள்ளார். புகுஷிமா விபத்துக்குப் பிறகு கதிர்வீச்சு ஆபத்துகளிலிருந்து தப்பிக்க பலரும் ஊரைவிட்டு வெளியேறிவிட்டனர். புகுஷிமாவி லிருந்து 60 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள புடபாபா எனும் நகரில்தான் அந்த விபத்து நடந்தது. இந்நகரத்தின் மேயராக இருப்பவர் கட்சுடாகா இடோகவா. விபத்து நடந்த 10 நிமிடங்களுக்கு முன் தான் அந்த சாலையைக் கடந்து வருந்திருக்கிறார். 10 நிமிட இடைவெளி அவர் உயிரைக் காப்பாற்றி யிருக்கிறது.

ஜப்பான் அரசாங்கமும், அணுஉலையை நடத்திய டோக்கியோ எலக்ட்ரிக் பவர் கம்பெனியும் (டெப்கோ), விபத்து எதுவும் நடக்கவே நடக்காது என்று உறுதி தந்தும் விபத்தை தடுக்க முடியவில்லை. ஜப்பான் அரசு, டெப்போ, நகர நிர்வாகம் மூன்றும் சேர்ந்து இந்த அணு உலையால் எந்த ஆபத்தும் நடக்காது என்று கையெழுத்திட்டு ஒப்பந்தம் ஒன்றையே தயாரித்தார்கள். பொறியாளர் சுந்தர்ராஜனிடம் கையில் வைத்திருக்கும் அந்த ஒப்பந்தத்தைக் காட்டி, "விபத்துக்கு நான்தான் பொறுப்பு ஏற்கவேண்டும்" என்று உள்ளம் உடைந்து பேசினார், அந்த மேயர். "மக்களுக்கான அரசு மக்களைத்தான் முதலில் ஆதரிக்க வேண்டும். ஆனால் எங்கள் அரசோ அணுசக்தியையும், அணுஉலை நிறுவனங்களையும் ஆதரித்தது" என்று அரசை குற்றம் சாட்டினார். அத்துடன் அரசிடம் கலந்து ஆலோசிக்கா மலேயே அந்நகரத்தை மக்கள் காலி செய்ய வேண்டும் என்று முடிவெடுத்து செயல்பட்டார். இந்தத் தகவலை 'தமிழ் இந்து' நாளேட்டில் பதிவு செய்துள்ளார் பொறியாளர் சுந்தர்ராசன்.

கூடங்குளம் அணுஉலை பாதுகாப்பானது என்று உறுதி கூறும் இந்திய ஆட்சியாளர்களே, அணுசக்தி ஆதரவு விஞ்ஞானிகளே! ஜப்பான் நாட்டை விடவா உங்களிடம் பாதுகாப்புக்கான தொழில்நுட்பங்கள் இருக்கின்றன? என்ற கேள்வியை எழுப்ப வேண்டியிருக்கிறது. ✦

## சு.சாமிக்கு எதிர்ப்பு

தமிழக மீனவர்களை சிறை பிடிக்காமல் அவர்களின் படகுகளை சிறை பிடிக்கலாம் என்று இராஜபக்சேவுக்கு ஆலோசனை கூறியதாக சுப்ரமணியசாமி, 'தந்தி' தொலைக் காட்சிப் பேட்டியில் கூறியுள்ளதற்கு தமிழ்நாட்டில் அரசியல் கட்சித் தலைவர்கள் கடும் எதிர்ப்புகளை தெரிவித்துள்ளனர். தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சவுந்தர்ராஜனும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. சுப்ரமணிய சாமியின் உண்மை முகம் அம்பலமாகி வருகிறது. இது குறித்து 'புரட்சிப் பெரியார் முழக்கம்', ஏற்கெனவே 'சுப்ரமணியசாமிகள்' என்ற தலைப்பில் 7.8.2014 இதழில் எழுதியுள்ள தலையங்கம் பல தகவல்களை முன் வைத்துள்ளதை சுட்டிக்காட்டுகிறோம்.

## வினாக்கள்... விடைகள்...!

✦ 'புனித' நகரமான காசியை 'நவீன நகரமாக்க' ஜப்பான் நாட்டுடன், மோடி ஒப்பந்தம்.

**– செய்தி**

அப்படீங்களா... இப்பவாவது இந்தப் புரோகிதர்களையெல்லாம் ஒரு மேல் சட்டையை மாட்டச் சொல்லுங்க! நவீன நகரத்தில் சட்டை இல்லாம திரிஞ்சா, எப்படி?

✦ தமிழக அரசியல் களத்தில் எங்களுக்கு எதிரிகளே இல்லாமல் போய் விட்டார்கள்.

**– முதல்வர் ஜெயலலிதா**

எப்போ, இப்படி சிந்திக்க ஆரம்பிச்சாங்களோ, இந்த சிந்தனையே இவங்களுக் கெல்லாம் மிகப் பெரிய எதிரியா வந்து நிக்கப் போவது உறுதி! வேற எதிரியே வேணாம்!

✦ "இராமஜென்ம பூமி"யான அயோத்தியில் கங்கா பவன் கோயில் தலைமை நிர்வாகியான சாமியார் ஒருவரை கோயில் பார்ப்பன அர்ச்சகர் பாண்டேயும் அவரது சீடர்களும் வெட்டிக் கொலை செய்தார்கள்.

**– செய்தி**

'இராமராஜ்ய'த்தில் 'சம்பூகன் வதை' தொடங்கிடுத்து.

✦ மு.க. ஸ்டாலின் முன் அனுமதி யின்றி, அவரது பெயரில் 'விநாயகர் சதுர்த்தி'க்கு வாழ்த்துச் செய்தி வெளியிடப் பட்டுவிட்டது.

**– தி.மு.க. தலைமைக் கழகம்**

இந்த மறுப்புக்காவது ஸ்டாலின் முன் அனுமதி கிடைத்துள்ளது என்று நம்பலாமா?

✦ கோவா மாநிலத்துக்குள் நுழைய 'சிறீராம்சேனை'க்கு மாநில முதல்வர் தடை.

**– செய்தி**

எதுக்கும் எச்சரிக்கையா இருங்க... ஏதாவது பாலம் அமைச்சுகிட்டு 'ராமன் சேனை' நுழைஞ்சுடப் போவுது!

✦ சமஸ்கிருத கீதையோடு ஜப்பானில் மொழி பெயர்க்கப் பட்ட கீதையையும் அந்நாட்டு பிரதமருக்கு பரிசாக வழங்கினார் மோடி.

**– செய்தி**

ஜப்பான் நாட்டுக்குப் போனா அவுங்க தாய் மொழியை மதிப்பீங்க. ஆனால், எங்கள் மீது மட்டும் சமஸ்கிருதத்தை நேரடியா திணிப்பீங்களோ?

✦ சென்னை புரசையிலுள்ள கங்காதரேசுவரர் கோயில் மூலவரான கடவுள் சட்டப்படி ஒரு தனி நபர். எனவே அவருக்கு சொந்தமான சொத்துகள் குறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பதிலளிக்க முடியாது.

**– அறநிலையத் துறை அதிகாரி**

அப்போ, அந்த சொத்துகள் கொள்ளையடிக்கப்பட்டால் "அந்த தனி" நபர் நேரில் வந்து புகார் கொடுத்தாத்தான் நடவடிக்கை எடுப்பீங்களா, சார்?

DATE OF PUBLICATION 03.09.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

## ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ உறுப்பினர் சேர்ப்பு – கழக கட்டமைப்பு நிதி தொடர்பாக

# கழகப் பொறுப்பாளர்கள் சுற்றுப்பயணம்

திராவிடர் விடுதலைக் கழகப் பொருளாளர் இரத்தினசாமி, செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன், தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் சிவக்குமார் ஆகியோர், ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ உறுப்பினர் சேர்க்கைக்காக மாவட்டந்தோறும் சுற்றுப்பயணம் வருகிறார்கள். ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ நன்கொடை புத்தகங்களையும் உடன் கொண்டு வருகிறார்கள். ஜனவரியில் தொடங்கி டிசம்பர் முடிய ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்துக்கு உறுப்பினர்கள் சேர்ப்பது என்று எடுக்கப்பட்ட முடிவுக்கேற்ப சந்தா சேர்ப்பு இயக்கத்தை துரிதப்படுத்தும் நோக்கத்தோடு இந்தப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அப்போது இயக்க கட்டமைப்பு நிதிக்காக நன்கொடையாளர்களின் பட்டியலை தோழர்கள் தயார் செய்து வைப்பதோடு தமிழ்நாடு மாணவர் கழகத்தில் இணைந்து செயல்படக்கூடிய மாணவர்கள் தொடர்பான விவரங்களையும் தோழர்கள் தயாரித்து வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படு கிறார்கள்.

கழகப் பொறுப்பாளர்களின் சுற்றுப் பயணத் திட்டம் வருமாறு:

09.09.2014 - மாலை - தூத்துக்குடி-தங்கல்
10.09.2014 - காலை - நாகர்கோவில்
10.09.2014 - மாலை - கீழப்பாவூர் (நெல்லை) - தங்கல்
11.09.2014 - காலை - தேனி
11.09.2014 - மாலை - பழனி (திண்டுக்கல் மாவட்டம்) - தங்கல்
12.09.2014 - காலை - தாராபுரம், மடத்துக்குளம், உடுமலை
12.09.2014 - மாலை - பொள்ளாச்சி - தங்கல்
13.09.2014 - காலை - மேட்டுப்பாளையம்
13.09.2014 - மாலை - கோவை - தங்கல்
14.09.2014 - காலை - திருப்பூர்
14.09.2014 - மாலை - திருப்பூர் - தங்கல்
15.09.2014 - காலை - திருச்செங்கோடு
15.09.2014 - மாலை - ஈரோடு (வடக்கு மாவட்டம்)
19.09.2014 - காலை - மதுரை
19.09.2014 - மாலை - சிவகங்கை - தங்கல்
20.09.2014 - காலை - காரைக்குடி பேராவூரணி
20.09.2014 - மாலை - பட்டுக்கோட்டை - தங்கல்
21.09.2014 - காலை - மன்னார்குடி
21.09.2014 - மாலை - மயிலாடுதுறை - தங்கல்
22.09.2014 - காலை - புதுக்கோட்டை மாவட்டம் கரம்பக்குடி
22.09.2014 - மாலை - திருச்சிராப்பள்ளி - தங்கல்
23.09.2014 - காலை - பெரம்பூர்
23.09.2014 - மாலை - கரூர்
26.09.2014 - காலை - ஈரோடு தெற்கு
26.09.2014 - மாலை - தர்மபுரி-கிருட்டிணகிரி - தங்கல்
27.09.2014 - மாலை - வேலூர்
28.09.2014 - மாலை - காஞ்சிபுரம்
29.09.2014 - காலை - விழுப்புரம்
29.09.2014 - மாலை - ஆத்தூர் சேலம்.

**– தலைமைக் கழகம்**

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பின்புறத்தில் விநாயகர் கோயில் ஒன்று கட்டப்பட்டது. அதேபோல் மந்தைவெளி பேருந்து நிலையம் அருகிலுள்ள தேவநாதன் சாலையில் மற்றொரு விநாயகன் கோயில் திடீரென கட்டப்பட்டது. செய்தியறிந்த கழகத் தோழர்கள் களமிறங்கினர். சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ள கோயில்களை அகற்ற வேண்டும் என்று மயிலைப் பகுதி கழகத் தோழர்கள் மாரிமுத்து, இராவணன், 22.8.2014 அன்று பகுதிப் பொறுப்பாளரான வள்ளுவர்கோட்டம் மண்டல மாநகராட்சி பொறியாளரிடம் மனு கொடுத்தனர். ஆனால் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை.

இது குறித்து மயிலாப்பூர் பகுதித் தோழர்கள் சார்பாக காவல்துறை, மாநகராட்சி அலுவலகங்களுக்கு புகார் மனு 22.8.2014 அன்று அளிக்கப்பட்டது. 123 ஆவது வட்டம் உதவி பொறியாளர் சுந்தர்ராஜ் நடவடிக்கை எடுத்ததன் பேரில் ஆக்கிரமிப்புக் கோயில் இடித்து அகற்றப்பட்டது. மந்தைவெளி தேவநாதன் வீதியில் மட்டும் கோயில் கட்டும் பணிகள் தொடர்ந்தன. பொறியாளர் வித்யா நடவடிக்கை எடுக்க மறுத்ததோடல்லாமல், மேல் நடவடிக்கை தொடர்பாக உயர் அதிகாரியை தொடர்பு கொண்டது தவறு என்று கூறி, தோழர்களை தரக்குறைவாகப் பேசினார். இது தொடர்பாக பொறியாளர் அலுவலகத்திற்குச் சென்று மாவட்டச் செயலாளர் உமாபதி, மாவட்டத் தலைவர் ஜான் மண்டேலா, மாவட்ட அமைப்பாளர் சுகுமார், தோழர்கள் இராவணன், மாரிமுத்து, மனோகர், சிவா, மருதமூர்த்தி ஆகியோர் முறையிட்டனர். தோழர்கள் பணி செய்யவிடாமல் தடுப்பதாக காவல்துறையினரையும், கவுன்சிலர் விஜயலட்சுமியையும் அழைத்து அதிகாரி தகராறில் ஈடுபட்டார். தோழர்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட நேர்ந்ததோடு போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்ததன் பேரில் கோயில் கட்டும் வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

### கழகத் தோழர்கள் முயற்சியால் சங்ககிரி அரசு வளாகத்தில் ‘விநாயகன் விழா’ நிறுத்தம்

சேலம் மாவட்டம் சங்ககிரி நகரத்தில் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் விநாயகன் கோயில் அமைக்கப்பட்டு, விநாயகன் சதுர்த்தி விழா நடத்த முயற்சிகள் நடப்பதை அறிந்து கழகத்தினர் நாமக்கல் மாவட்ட செயலாளர் வைரவேல், தமிழ்ப் புலிகள் அமைப்பின் சேலம் மாவட்ட செயலாளர் தலித்குமார் தோழர்களோடு சென்று சங்ககிரி வருவாய் கோட்டாட்சியரை நேரில் சந்தித்து அந்த நிகழ்ச்சியை தடுத்திட புகார் மனு ஒன்றை அளித்தனர். அதன் பேரில் கோட்டாட்சியர் சம்பவ இடத்திற்கு நேரில் வந்து அந்த பந்தல் மற்றும் வாழை மரங்களையும் அகற்றிட உத்தரவிட்டார். கோயிலில் யாரும் திருவிழாக்கள் எதுவும் நடத்தக் கூடாது என்றும் உத்தரவிட்டார்.

**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**
**ஆண்டுக்கட்டணம்**
**ரூ.200**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆9941613535

## “விநாயகனை” கரைப்பதிலும் ஜாதி வெறிக் கலவரம்

# இந்து மத “ஒற்றுமை” இது தானோ?

விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் வட்டத்திற்கு உட்பட்டது மூரார் பாளையம் என்ற கிராமம். இந்த கிராமத்தில் 31.8.2014 அன்று தாழ்த்தப்பட்ட மக்கள் வைத்திருந்த பிள்ளையார் சிலையை ஆற்றில் கரைப்பதற்காக எடுத்துச் சென்றனர். அப்பொழுது பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சார்ந்த சாதி வெறியர்கள், “பற பிள்ளையாரை” எங்கள் பகுதி வழியாக எடுத்துச் செல்லக் கூடாது என்று தடுத்தனர். வேறு வழியில்லை என்ற காரணத்தால் இந்த வழியாகத்தான் செல்வோம் என்று கூறினர். இதனால் ஆத்திரம் கொண்ட ஜாதி வெறியர்கள், தாழ்த்தப்பட்ட மக்களை தாக்கினர். பலபேர் படுகாயத்துடன் மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இந்த சம்பவத்தை அறிந்து விழுப்புரம் மாவட்ட கழக அமைப்பாளர் செ.நாவாப்பிள்ளையுடன் தோழர்கள் பலருடன் சென்று நடந்த சம்பவத்தை விசாரித்தனர். இதற்கிடையே நீர்நிலை மாசுபடுவதால் மீன் வளர்ச்சிப் பாதிக்கப்படும். இரசாயனம் கலந்த பிள்ளையார் சிலையை கோமிகி அணையில் கரைக்கக் கூடாது என்று மீன் உற்பத்தியாளர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இந்த சம்பவத்திற்கு விவசாய சங்கமும் கடுமையான கண்டனத்தை பதிவு செய்தனர்.

# கழகத்தின் சுவரெழுத்துப் பிரச்சாரம்: காவல்துறை மிரட்டல்

மதக் கலவரத்தைத் தூண்டும் பார்ப்பன, பனியா கும்பலின் பிள்ளையார் சிலை அரசியல் ஊர்வலத்துக்கு எதிராக பெரியார் கைத்தடி ஊர்வலம் என்ற வாசகங்களை சுவரெழுத்துப் பிரச்சாரம் செய்யும் பணியில் தோழர்கள் ந. அய்யனார்,




நாத்திகன், செந்தில் ஆகியோர் ஈடுபட்டிருந்தபோது (27.8.2014) இராயப்பேட்டை நெடுஞ் சாலை, பைலட் திரையரங்கு அருகில் ஈ2 காவல் நிலைய ஆய்வாளர் இராஜசேகர், உளவுப் பிரிவினர் மற்றும் சுமார் 15க்கும் மேற்பட்ட காவல்துறையினருடன் வந்து சுவரெழுத்து எழுதக் கூடாது என தடுத்தனர். “நடப்பது பா.ஜ.க. ஆட்சி. நான் ஆர்.எஸ்.எஸ்.காரன் தான். சுவரெழுத்து பணி செய்யக் கூடாது. மீறி எழுதினால் நாங்களே அழித்துவிடு வோம். மீறி எழுதினால் எழுதிய தோழர்கள் மீது வழக்குப் போடுவேன் என்று ஆய்வாளர் மிரட்டினார். அச்சுறுத்தலை புறந்தள்ளி விநாயகன் அரசியல் ஊர்வலத்துக்கு எதிரான கைத்தடி ஊர்வலம் பற்றி தோழர்கள் சுவரெழுத்துகளை எழுதியுள்ளனர்.


(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிளகாய் அரைத்துக் கொண்டிருக்கும் போதே கலைவாணர் அம்மியில் அரைபட்ட மிளகாய்ச் சாந்தில் ஒரு பட்டாணி அளவினை எடுத்துத் தாயாரை வாய் திறக்குமாறு சொல்லி அந்த அம்மையாரின் வாயினுள் போடுகிறார். அவருடைய தாயார் “காரமான மிளகாய்ச் சாந்தை ஏண்டா என் வாயில் போட்டே” என்று கேட்கிறார். “ஆம்மா, அவள் தாழ்ந்த ஜாதிப் பெண் என்று சொல்லித் தனியே ஒதுக்கி வீட்டீர்களே! அவள் தொட்ட மிளகாய் காரம் இல்லாமல் ஆகிவிட்டதா! அவள் தொட்ட மிளகாய் உறைக்கின்றது. அவள் தொட்ட புளி புளிப்பாக இருக்கின்றது. அவள் தொட்ட உப்பு கரிக்கின்றது. அதிலெல்லாம் ஒரு மாறுதலையும் காண முடியவில்லையே. பிறகு ஏனம்மா தாழந்த ஜாதி என்று ஒதுக்க வேண்டும்?” என்று கேட்கிறார். ஜாதிப் பிரிவு அடிப்படையில் உயர்வு தாழ்வு என்ற பேத நிலை கூடாது என்ற கருத்தினைக் கலைவாணர் எவ்வளவு எளிமையாக்கிக் காட்டியுள்ளார் பார்த்தீர்களா?

**(ஆகஸ்டு 30 கலைவாணர் நினைவு நாள். கட்டுரை:மறைந்த பகுத்தறிவுப் பேராசிரியர் ஜி.கலியராஜுலு – ‘உண்மை’ 14.8.1972 இதழில் எழுதியது)**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 4th September 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | செப்டம்பர் 11, 2014 | புரட்சி 13 | முழக்கம் 35 | விலை: ரூ.3.00


## ‘விநாயகனை’ மதவெறி அரசியலுக்கு பயன்படுத்தாதே!

# எதிர் ஊர்வலம்: தோழர்கள் கைது!






விநாயகன் சிலை ஊர்வலம் என்ற பெயரில் மதவெறி அரசியல் ஊர்வலத்தை இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. அமைப்புகள் தொடர்ந்து நடத்தி, பதட்டத்தை உருவாக்கி வருகின்றன. சென்னையில் இதற்காக பெரும் தொகை செலவிடப்படுகிறது. தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப் பட்ட அப்பாவி இளைஞர்கள் இந்த ஊர்வலங்களுக்காக வலைவீசப்படுகிறார்கள். இதில் பெரும்பகுதி இளைஞர்கள் அன்றைய ஒரு நாள் மகிழ்ச்சியை கொண்டாடுவதைத் தவிர வேறு மதவெறி அரசியலில் அவர்களுக்கு ஈடுபாடு இல்லை. ஆனால், ‘இந்துத்துவா’ அரசியலுக்கு மக்கள் ஆதரவு இருப்பதுபோல் ஒரு தோற்றத்தைத் திட்டமிட்டு உருவாக்குகிறார்கள்.

1996 ஆம் ஆண்டு திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து, பெரியார் திராவிடர் கழகம் தொடங்கப்பட்டபோது, அதன் தொடக்க விழாவிலேயே சென்னையை அச்சுறுத்தி வரும் விநாயகன் சிலை ஊர்வலத்துக்கு எதிரான போராட்டம் அறிவிக்கப்பட்டது. விநாயகன் சிலை ஊர்வலம் வரும் பாதையில் அதற்கு நேர் எதிராக பெரியார் சிலை ஊர்வலத்தை நடத்துவோம் என்று தொடக்க விழா நிகழ்விலேயே பெரியார் திராவிடர் கழகம் அறிவித்தது. அப்போது முதலமைச்சராக இருந்த கலைஞர் கருணாநிதி, விநாயகன் சிலை பெயரிலோ, பெரியார் சிலை பெயரிலோ ஊர்வலங்கள் நடத்தி இரத்தம் சிந்த அரசு அனுமதிக்காது என்று கூறினார். விநாயகன் சிலை ஊர்வலங்களை அந்தந்த பகுதியினரே தனித்தனியாக காவல்துறை பாதுகாப்புடன் கடலில் கரைக்க அரசு ஏற்பாடு செய்தது. இதன் மூலம் ஒரே இடத்திலிருந்து அனைத்துப் பகுதி விநாயகன் சிலைகளையும் கொண்டு வந்து ஒரே ஊர்வலமாக செல்லும் முறைக்கு தடைவிதிக்கப்பட்டது. பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் முன்கூட்டியே கைது செய்யப்பட்டனர். அதைத் தொடர்ந்து 1997 ஆம் ஆண்டு விநாயகன் சிலை ஊர்வலங்களை அரசு அனுமதிக்கக் கூடாது என்று பெரியார் கைத்தடி ஊர்வலத்தை பெரியார் திராவிடர் கழகம் அறிவித்தது. சென்னை தோழர்கள் கைது செய்யப் பட்டனர்.

மதவெறி அரசியலைக் கண்டித்து பெரியார் திராவிடர் கழகம் இந்த எதிர்ப்புகளைத் தொடர்ந்து பதிவு செய்து வந்தது. ஒவ்வொரு முறையும் இந்து முன்னணியினர் நடத்தும் விநாயகன் சிலை ஊர்வலத்தின்போது மசூதி இருக்கும் பகுதியில் அந்த அமைப்பின் நிறுவனர் இராமகோபாலன் செல்ல முயல்வதும், பிறகு கைது செய்யப்பட்டு உடன் விடுதலை செய்யப்படுவதும் வழக்கமாக நடந்து வருகிறது. இதன் மூலம் இந்த விநாயகன் சிலை ஊர்வலம் முஸ்லிம்களுக்கு எதிரானது என்பதை உணர்த்தி வருகிறார்கள். இந்து மத ஊர்வலம் என்ற பெயரில் இப்படி மதக் கலவரத்தை உருவாக்கும் மதவெறி அரசியலுக்கு எதிராக திராவிடர் விடுதலைக் கழகம் தொடங்கப்பட்டதிலிருந்து மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து பெரியார் கைத்தடி ஊர்வலங்களை நடத்தி வருகிறது.

அதன் தொடர்ச்சியாக செப்.7 அன்று இந்து முன்னணியினர் ஊர்வலம் நடத்திய அதே நாளில் அதே நேரத்தில் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் பெரியார் கைத்தடிகளை குறியீடாக ஏந்திக் கொண்டு கருஞ் சட்டையுடன் “மதத்தை அரசியலாக்காதே; கடல் நீரில் இரசாயன நஞ்சைக் கலக்காதே; தமிழ்நாட்டை மதக் கலவர பூமியாக மாற்றாதே; வீடுகளில் நடக்கும் மத நிகழ்வுகளை வீதிக்குக் கொண்டு வராதே; போராடும்; போராடும்; மதவெறி அரசியலுக்கு எதிராக பெரியார் படை போராடும்” என்ற முழக்கங்களை எழுப்பி 150க்கும் மேற்பட்ட திராவிடர் விடுதலை கழகத் தோழர்கள் கருப்புடையுடன் புறப்பட்டனர். போராட்டத்துக்கு கழகத்தின் சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி தலைமை தாங்கினார். புதுவையிலிருந்து பெரியாரியல் முன்னணி தோழர்கள், தோழர் தீனா தலைமையிலும் விழுப்புரத்திலிருந்து கழகப் பொறுப்பாளர் பெரியார் வெங்கட் தலைமையிலும், காஞ்சிபுரம் மாவட்டக் கழகத் தோழர்களும் திரண்டு வந்திருந்தனர். மாலை 4 மணியளவில் அய்ஸ்அவுஸ் மசூதி அருகே தோழர்கள் திரண்டு ஒலி முழக்கங்களுடன் ஊர்வலமாகப் புறப்பட்டனர். நேர் எதிர்திசையில் விநாயகன் சிலை ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. பதட்டமான சூழலில் காவல்துறையினர், தோழர்களை தடுத்து நிறுத்தி 110 தோழர்களை கைது செய்தனர். அப்போது மழை கொட்டியது. இலாயிட்சு சாலையிலுள்ள அரசு தொடக்கப் பள்ளியில் அனைவரும் வைக்கப்பட்டு, இரவு 8 மணியளவில் விடுதலை செய்யப்பட்டனர்.

போராட்டத்தில் பங்கேற்ற கழக முன்னணியினர் : தலைமை நிலைய செயலாளர் தபசி குமரன், வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, துரை. அருண், சென்னை மாவட்ட பொறுப்பாளர்கள் சுகுமார், பா.ஜான் மண்டேலா, தட்சணா மூர்த்தி, அருள்தாசு, யேசு குமார், விஜயஇரணியன், காஞ்சி மாவட்ட பொருப்பாளர்கள் தினேஷ், செங்குட்டுவன், தெள்ளமிழுது, வேலூர் திலிபன், விழுப்புரம் மாவட்ட பொருப்பாளர் அய்யனார், வெங்கட் மற்றும் க. இராமர், சி. சாமிதுரை, கோ.சாக்ரடீசு, சா. பரிமளா, புதுச்சேரி பெரியாரியல் முன்னணி தோழர்கள், சென்னை மயிலைப் பகுதி வி.சி.க. செயலாளர் ரூதர் கார்த்திக், திலீபன் மற்றும் தஞ்சை சிவசுப்பிரமணியன், சென்னை செந்தில், அருண், மாரி, இராவணன், மனோகர், நாத்திகன், முழக்கம் உமாபதி உள்பட ஏராளமான தோழர்கள் போராட்டத்தில் பங்கேற்றனர். ஊர்வலத்தில் த. குடியரசு, அ. இளமதி, மூ. ஆயுதன் ஆகியோர் பெரியார் வேடமிட்டு பெரியார் கைத்தடியுடன் வந்தது அனைவரையும் கவர்ந்தது.

**– நமது செய்தியாளர்**

## வினாக்கள்... விடைகள்...!

- ஆடம்பர விழாக்களில் மீதமாகும் உணவுகளை குப்பைத் தொட்டியில் கொட்டுவதைப் பார்த்தால் கோபம் வருகிறது.
  **– ‘தினமணி’ கட்டுரை**

  இதே கோபம் – சிலைகளுக்கு ‘பாலாபிஷேகம்’ யாகங்களில் உணவுப் பொருள்கள் எரிப்பு நடக்கும்போதும் ஏன் வர மறுக்கிறது என்பதை நினைத்தால் இரட்டிப்பு கோபம் வருகிறது.

- சமூகத்தில் சமத்துவமின்மை நீடிக்கும் வரை இடஒதுக்கீடு முறை தேவை.– **ஆர்.எஸ்.எஸ். தலைவர் பாகவத்**

  அப்படி, சமத்துவம் உருவாகும் காலம் வரை மத ஒதுக்குதல் முறையும் தேவை என்பதையும் சேர்த்துச் சொல்லுங்க!

- சென்னையில் ஊர்வலத்தில் விநாயகர் சிலை முன்பு போதையில் நடனமாடிய போலீஸ்காரர் மீது நடவடிக்கை. **– செய்தி**

  ‘நேர்த்திக் கடனாக’ இருந்தாலும் இருக்கும். அவசரப்பட்டு நடவடிக்கை எடுத்துடாதீங்க!

- பெங்களூரு மருத்துவமனையில் உச்சநீதிமன்ற ஆணைப் படி நித்தியானந்தாவுக்கு ஆண்மைப் பரிசோதனை நடந்தது.
  **– செய்தி**

  வேறு வழி இல்லை சுவாமி! ‘காயமே (உடலே) இது பொய்யடா’ என்று சொன்னால், உச்சநீதி மன்றம் ஏற்காது ‘சாமி’; உடனே ‘அவமதிப்பு’ நடவடிக்கை எடுத்து, உள்ளே தள்ளிடுவாங்க!

- பல்வேறு சிக்கல்களில் சிக்கித் தவிக்கும் வேலகவுளம்பட்டி காவல் நிலையத்தில் போலீசார் ஆடு, கோழிகளை பலியிட்டு இரத்தத்தைத் தெளித்து பரிகாரம் செய்தனர். **– செய்தி**

  ஆடு, கோழிகளை தலை கீழாகக் கட்டி தொங்கவிட்டு, கண்களில் மிளகாய் பொடி தூவி, கால்களில் லத்தியால் அடித்து, ‘பலி’ போட்டிருப்பார்களே!

- செப். 8, சர்வதேச எழுத்தறிவு நாள். **– செய்தி**

  இப்படி சொன்னா எப்படி? ‘லோக சரஸ்வதி உத்ஸவ’ என்று புரியும்படி சொல்லுங்க!

- ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்களை நான் சந்திக்கவே இல்லை.
  **– சி.பி.அய். இயக்குநர்**

  இது போதாது! சி.பி.அய். விசாரணையையும் சந்திக்கத் தயார்ன்னு, சவால் விடுங்க, சார்...

# புற்று நோய்க்கு காரணமாகும் அணுக் கதிர் வீச்சு

அணுமின் திட்டங்கள் பாதுகாப்பானவை என்கிறார்கள் அணுசக்தி விஞ்ஞானிகள். கூடங்குளம் அணுமின் நிலையத்தில் மக்கள் எதிர்ப்பையும் மீறி 4 பிரிவுகளைக் கொண்டு வந்துவிட்டார்கள். முதல் இரண்டு பிரிவுகளை ஆதரித்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், தி.மு.க போன்ற கட்சிகளே, 3 மற்றும் 4ஆவது பிரிவுகளை எதிர்க்கத் தொடங்கியிருக்கிறார்கள். இப்போது அணுக்கதிர் வீச்சால் புற்று நோய் பரவி வருகிறது என்ற அதிர்ச்சியளிக்கக் கூடிய செய்திகள் வந்துள்ளன.

1995 ஆம் ஆண்டிலிருந்து 2014 மார்ச் வரை, 19 அணுசக்தி மய்யங்களில் பணியாற்றும் 3887 பேர் மரணமடைந்துள்ளனர். இதில் 70 சதவீத மரணங்களுக்கு காரணம் புற்றுநோய். அதாவது 2600 பேர் புற்றுநோய்க்கு உள்ளாகி மரணமடைந்துள்ளனர். இதே காலகட்டத்தில் இந்த நிறுவனங்களில் தற்கொலை செய்து கொண்ட விஞ்ஞானிகள் மற்றும் அதிகாரிகள் எண்ணிக்கை 258. ஒவ்வொரு மாதமும் சராசரியாக ஒருவர் தற்கொலை செய்து கொள்கிறார். புற்றுநோய் அல்லாமல், இருதயம் பாதிப்பு, ஒரே நேரத்தில் பல உறுப்புகள் பாதிப்பு, ஆஸ்த்மா, காசநோய், கல்லீரல் வீக்கம், மன அழுத்தம் காரணமாக இந்த 19 அணுசக்தி மய்யங்களில் 1287 பேர் மரணமடைந்துள்ளனர். சேட்டன் கோத்தாரி என்ற சமூக ஆர்வலர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் இத் தகவலைப் பெற் றுள்ளார். தகவல்தந்துள்ளது பாபா அணு ஆராய்ச்சி மய்யம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த மய்யம் அணுசக்தித் துறையின் கீழ் இயங்குவதாகும்.

## திருமணத்துக்கு முன் மருத்துவப் பரிசோதனை

திருமணம் நிச்சயிக்கப்படும்போது ஒரே ஜாதிக்குள் மணமகனையோ மணமகளையோ தேடத் தொடங்குகிறார்கள். ஒரே ஜாதிக்குள் தான் தேட வேண்டும் என்று எந்த சட்டமும் இல்லை. அடுத்து 'மணப் பொருத்தம்' சரியாக இருக்கிறதா என்று 'ஜாதகம்' பார்க்கிறார்கள். இப்படி ஜாதகம் பார்த்தாக வேண்டும் என்ற சட்டம் ஏதுமில்லை. ஒரு சோதிடர் நினைத்தால் எந்த திருமணத்தையும் அனுமதிக்கவும் முடியும்; தடைபடுத்தவும் முடியும். இதற்கான காரணங்களை அறிவியல் ரிதியாக விளக்க வேண்டும் என்று சோதிடர்களை நாடுவோர் அவர்களிடம் கேட்பதும் இல்லை. ஆனால், வரதட்சணை வாங்கக் கூடாது என்று தடைச் சட்டம் இருக்கிறது. சட்டத்தை பலரும் மதிப்பது இல்லை. வாங்குவதும் கொடுப்பதும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. 18 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகள் திருமணம் சட்டப்படி குற்றம். ஆனால் சட்டத்தை மீறி குழந்தைகளுக்கு திருமணம் நடக்கிறது. அண்மையில் சமூக நலத்துறை, வருவாய்த் துறை அதிகாரிகள், காவல்துறை உதவியுடன் சிவகங்கை மாவட்டத்தில் 6 குழந்தைத் திருமணங் களையும், இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு குழந்தைத் திருமணத்தையும் தடுத்து நிறுத்தியுள்ளதாக செப்டம்பர் 8 ஆம் தேதி ஏடுகளில் செய்திகள் வந்துள்ளன.

குழந்தைத் திருமணங்கள் இரத்த உறவுகளுக்குள்ளே நடக்கின்றன. மணப்பெண்ணை விட மணமகன் 10 ஆண்டுக்கு மேல் வயது வித்தியாசம் இருக்கிறது. குழந்தைத் திருமணம் பார்ப்பனிய மதத்தின் வழியாக சமூகத்தில் திணித்த ஒரு பழக்கம். இதைத் தடுக்க பிரிட்டிஷ் காலத்தில் சட்டங்கள் வந்தபோது கடுமையாக எதிர்த்தவர்கள் பார்ப்பனர்கள்தான். ஆனால், பார்ப்பனர்கள் குழந்தைத் திருமணங்களை அதன் பாதிப்புகள் கருதி கைவிட்டாலும் பார்ப்பனரல்லாத ஒடுக்கப்பட்ட மக்கள்தான் 'ஜாதிப் பழக்கமாக்கி'க் கொண்டு பின்பற்றுகிறார்கள். ஆனால் இந்தத் திருமணங்கள் வேண்டாம் என்று பார்ப்பனர்கள் கூறுவதே இல்லை. இதுதான் பார்ப்பனர்களின் "சமூக நேர்மை".

திருமணங்கள் குறித்து பல முற்போக்கான கருத்துகளையும் தீர்ப்புகளையும் நீதிமன்றங்கள் முன் வைத்து வருகின்றன. ஜாதி ஒழிப்புக்கு வெவ்வேறு ஜாதிகளுக்கிடையிலான திருமணங்கள் நடைபெற வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கூறியது. இப்போது திருமணத்துக்கு முன், மணமக்களுக்கு மருத்துவப் பரிசோதனையைக் கட்டாயமாக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் நீதிபதி கிருபாகரன் ஒரு முற்போக்கான கருத்தை முன் வைத்திருக்கிறார். மணமுறிவுக்கான காரணங்களில், "ஆண்மையின்மை" என்ற பிரச்சினை அதிகம் இருப்பதை சுட்டிக்காட்டிய நீதிபதி, திருமண சட்டங்களில் மருத்துவப் பரிசோதனையை ஏன் கட்டாயமாக்கக் கூடாது என்று மத்திய மாநில அரசுகளுக்கு விளக்கம் கேட்டு தாக்கீது பிறப்பித்துள்ளார். வரவேற்கத்தக்க சிந்தனை. ஆனாலும், சட்டங்கள் வந்தாலும் ஜாதி, மதங்கள் கட்டமைத்துள்ள மடமையிலிருந்து மக்கள் விடுபட்டால் ஒழிய சட்டங்கள் எந்தப் பயனையும் ஏற்படுத்தப் போவதில்லை. சுயமரியாதை திருமணங்கள் கருத்தரங்குகள் வழியாக பெண்ணுரிமை கருத்துகளைப் பரப்பி வருவது அனேகமாக பெரியார் இயக்கங்களும், வெகு சில சமூக இயக்கங்களுமாகத்தானே இருக்கின்றன?

## பூணூல் போடாத பார்ப்பனர்

"நான் பூணூல் அணிவதில்லை. ஊர் அறிந்த பார்ப்பனருக்கு பூணூல் எதற்கு?" என்று கூறுகிறார் சுப்ரமணியசாமி. 'தந்தி' தொலைக்காட்சி, சுப்ரமணிய சாமியின் நேர்காணல் ஒன்றை கடந்த வாரம் ஒளி பரப்பியது. 'கிழக்கு' பதிப்பகத்தின் உரிமையாளர் சேஷாத்திரி, அவரை கேட்டி கண்டார். "விடியற் காலை நான்கு மணிக்கு எழுந்து சில 'யோகா' பயிற்சிகளை முடித்து, அதன் பிறகு சமஸ்கிருத மந்திரங்களை அன்றாடம் உச்சரிப்பாராம். அப்போதுதான் அவருக்கு புதிய புதிய சிந்தனைகள் உருவாகுமாம்". தனது மனைவி 'பார்சி' சமூகத்தைச் சார்ந்தவர் என்பதால் அந்த சமூகத்தைச் சார்ந்த திறமை வாய்ந்த வழக்கறிஞர்கள் தொடர்பு தமக்கு உண்டு என்றும், தான் தொடரும் வழக்குகளில் அவர்களது ஆலோசனைகளைப் பெறுவதாகவும் கூறிய அவர், தனக்கு சீனா, தாய்லாந்து, மெக்சிக்கன் நாட்டு உணவுகளே பிடிக்கும் என்கிறார். சேது சமுத்திரத் திட்டம் கைவிடப்பட்டுவிட்டது என்று தன்னிடம் மோடி கூறிவிட்டதாகவும், ஈழத் தமிழர் பிரச்சினையில் தனக்கும் மோடிக்கும் ஒரு ஒப்பந்தம் இருக்கிறது என்றும், அதை நேரம் வரும்போது வெளியிடுவேன் என்றும் கூறிய அவர், தமிழக மீனவர்கள் படகுகளை பறிமுதல் செய்யுங்கள் என்ற யோசனையை இராஜபக்சேயிடம் முன் வைத்தது, நான் தான் என்று மீண்டும் இந்தப் பேட்டியில் ஒப்புக் கொண்டுள்ளார்.

தமிழக பா.ஜக.வினர் பற்றி தனக்கு கவலை இல்லை என்றும், மோடியுடன் தான் நேரடியாக தொடர்பு கொண்டு செயல்படுவதாகவும் கூறிய சுப்ரமணிய சாமி, மதசடங்குகளில் மூடநம்பிக்கைகளில் தமக்கு உடன்பாடு இல்லை என்றும், ஆனால் இந்தியாவில் வாழும் அனைவரும் இந்துக்கள் என்றும் கூறினார். முஸ்லிம், கிறிஸ்துவர்களின் மரபணுவிலும் இந்துக்கள் அடையாளமே இருக்கிறது என்று கூறியதோடு தாம் மிகவும் மதிக்கும் சாமியார் தயானந்த சரசுவதி என்றும் அவருக்கு நிகரான அறிவாளி வேறு எவரும் இல்லை என்றும் கூறினார். பா.ஜக.வின் அதிகாரப் பூர்வ பிரதிநிதியாக தம்பட்டம் அடித்து வருகிறார் இந்த பார்ப்பனர். அது உண்மையா இல்லையா என்பதை பா.ஜ.க. தலைமையும் சரி; மோடியும் சரி; தெளிவுபடுத்தாமல் மவுனம் காக்கின்றனர். சுப்ரமணிய சாமி ஒரு பார்ப்பனர் என்பதால் இப்படி எல்லாம் அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொள்ள முடிகிறது.

## பில்லி-சூன்யம் மோசடி

தவ்ஹீத் ஜமா அறாத் என்ற முஸ்லிம் அமைப்பு, பில்லி, சூன்யம், பேய், பிசாசு, மூடநம்பிக்கைகளுக்கு எதிராக அவை இஸ்லாமுக்கு எதிரானது என்று பரப்புரை செய்து, பில்லி சூன்யக்காரர்களுக்கு சவால் விட்டு வருகிறது. திருச்சியைச் சேர்ந்த அகோரி மணிகண்டன் என்ற 'மந்திரவாதி' சவாலையேற்று, 'தவ்ஹீத்' அமைப்பின் தலைவர் பி.ஜே.வுடன் ஒப்பந்தம் போட்டார். 48 நாட்களில் தன்னால் சூன்யம் வைக்கப்பட்ட அவரது உடல்நலம் படிப்படியாக பாதிக்கத் தொடங்கி விடும் என்று 'சூன்யவாதி' ரூ.50 லட்சம் பந்தயமும் கட்டினார். 24 நாட்கள் முடிந்த பிறகும், 'சூன்யம்' எந்த வேலையும் செய்யாத நிலையில், திருச்சியில் மேற்குறிப்பிட்ட இஸ்லாமிய அமைப்பு 23.8.2014 அன்று சூன்ய ஒழிப்புப் பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தி அதன் மோசடிகளை அம்பலப்படுத்தியது. கொட்டும் மழையிலும் ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர். மூடநம்பிக்கைகளுக்கு எதிராக களமிறங்கி செயல்படும் தவ்ஹீத் அமைப்பை பாராட்ட வேண்டும்.

இதேபோல், இந்து மதத்தின் ஆர்வலர்களாக புறப்பட்டிருப்பவர்கள் மக்களிடம் மண்டிக் கிடக்கும் மூடநம்பிக்கைகளை எதிர்த்து விழிப்புணர்வு பிரச்சாரம் செய்யாதது ஏன்? பகுத்தறிவு பிரச்சாரம் செய்யும் பெரியார் இயக்கத்தினரையும் இந்து விரோதிகள் என்றும், பகுத்தறிவு பிரச்சாரத்துக்கு தடை போட வேண்டும் என்றும் அலறுவது ஏன்? மக்களை எப்போதும் மூடநம்பிக்கையிலேயே மூழ்கடித்திருக்க வேண்டும் என்பதால் தானா?

## ஆடம்பர திருமண எதிர்ப்புகள்

பெரும் பொருட் செலவில் நடத்தப்படும் ஆடம்பரத் திருமணங்களுக்கு கடிவாளம் போடக் கூடிய சட்டத்தை கருநாடக அரசைப் பின்பற்றி தமிழக அரசும் கொண்டு வரவேண்டும் என்று திராவிடர் விடுதலைக் கழகம் அதன் செயலவையில் தீர்மானம் நிறைவேற்றியது. 5 லட்சம் ரூபாய்க்கு மேல் செலவிடப்படும் திருமணங்களுக்கு வரி விதித்து, அந்தப் பணத்தை ஏழை மக்களின் திருமணங்களுக்கு உதவிடுவதே கர்நாடக அரசின் சட்டம். சுயமரியாதை திருமணங்களின் நோக்கங் களில், ஆடம்பரமற்ற சிக்கன திருமண முறையும் அடங்கும். இந்தக் கருத்தின் நியாயம் இப்போது மக்களால் வரவேற்கப்படுகிறது என்பதற்கு சான்றாக இராஜஸ்தானிலிருந்து ஒரு செய்தி வந்திருக்கிறது. ஆடம்பரத் திருமணங்களை செய்வதை வழக்கமாகக் கொண்ட மார்வாடிகள், இப்போது அத்தகைய திரு மணங்களுக்கு சமூகத் தடைகளை விதித்துள்ளார்கள். குறைந்தது 100 கோடி ரூபாயை மார்வாடிகள் ஒரு திருமணத்துக்கு செலவிடுவார்களாம். வசதியற்ற மார்வாடிகள், அந்த அளவுக்கு தங்கள் பெண்களை திருமணம் செய்து கொடுக்க முடியாமல் திணறு கிறார்கள். எனவே, திருமணத்துக்கு செலவிடுவது வீண்விரயம் என்று கூறி, இராஜஸ்தானில் தக்கட்கார், பாலி, சத்ரி மாவட்டங்களைச் சார்ந்த மார்வாடி சமூகத்தினர் ஆடம்பரத் திருமணங்களுக்கு சமூகத் தடை விதித்துள்ளனர். தடையை மீறி திருமணம் நடத்தும் மார்வாடிகள் வீட்டுத் திருமணங்களை புறக்கணிப்பதோடு, ரூ.50,000 அபராதம் செலுத்த வேண்டும் என்றும், அந்த சமூகத்தின் மூத்த தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

குறிப்பாக, மாப்பிள்ளை ஊர்வலம், ஆடம்பர விருந்துகளுக்கு செலவிடப்படுவதை குறைப்பதோடு நகரங்களில் நடத்துவதைத் தவிர்த்து சொந்த கிராமங்களிலேயே நடத்தலாம், இரவு நேர வரவேற்புகளை நிறுத்தலாம் என்று மார்வாடிகள் அமைப்பு ஆலோசனை கூறியுள்ளதோடு, மிக ஆடம்பர திருமணங்களை நடத்துவோர் அதில் பங்கேற்போர் குடும்பத்து விழாக்களை 3 ஆண்டுகள் புறக்கணிக்க வேண்டும் என்றும் முடிவு செய்துள்ளது. தமிழகத்தில் ஜாதி சங்கம் நடத்தும் தலைவர்கள் ஜாதி வெறியை உசுப்பி விடுவதற்கு பதிலாக இதுபோன்ற சமூக சீர்திருத்தங்களையாவது சமூகத்துக்குள் கொண்டு வர முயற்சிக்கக் கூடாதா?

## கர்நாடக சங்கீதமும் பார்ப்பனர்களும்

'கர்நாடக சங்கீதம்' பார்ப்பனர்களுக்கான இசையாகவே இருக்கிறது. எனவே, கருநாடக இசை பார்ப்பனர்களிடம் மட்டுமே தங்கிவிடாமல் அனைத்து ஜாதியினருக்கான இசையாக விரிவுபடுத்த வேண்டும் என்று கருநாடக இசைப் பாடகரான டி.எம். கிருஷ்ணன் என்பவர், 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேட்டில் (ஆக. 22) ஒரு கட்டுரை எழுதியிருந்தார். இதற்கு பார்ப்பனர்களிடமிருந்து கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. கோவிந்தராஜன் பார்த்தசாரதி என்பவர், "மேற்கத்திய இசையைப் போன்றது அல்ல கருநாடக இசை. மேற்கத்திய இசையை மதச் சார்பின்மை உள்ளிட்ட பல்வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்த முடியும். ஆனால், கருநாடக இசை 'ஆன்மிக'த்துக்கு மட்டுமே உரியது. கருநாடக இசை "பிரம்மத்தை" அடையும் ஒரு வழியாக உபநிஷத்துகளில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. 'தேவகானம்' என்று அழைக்கப்படும கருநாடக இசையின் நோக்கம், பக்தி மார்க்கம் ஒன்றுதான்" என்று எழுதி, பார்ப்பனர்களின் இசையாகவே இது இருப்பதை நியாயப்படுத்தியிருக்கிறார். "இசையைப் பற்றிய பெரிய அறிவு இருக்கிறது; ஆற்றல் இருக்கிறது என்பது முக்கியமல்ல. இசையுடன் உள்ள ஆன்மிகத் தொடர்பே முக்கியம்" என்று தியாகய்யரே கூறியிருப்பதாகவும் அந்தப் பார்ப்பனர் கூறுகிறார். பார்ப்பன ஆதிக்கத்தை உறுதிப்படுத்தும் கலைகளை பார்ப்பனர்கள் இன்று வரை அப்படியே தக்க வைத்துக் கொள்ளவே விரும்புகிறார்கள். ✦

## ‘முன்னோடி – பின்னோடி’ வாதங்களுக்கு மறுப்பு (8)

# தி.க.–தி.மு.க.வின் வெவ்வேறு நிலைப்பாடுகள்

***தஞ்சை முள்ளிவாய்க்கால் முற்றத்தில் 19.04.2014 அன்று நடந்த உலகத் தமிழ்க் கழகத்தின் அய்ந்தாம் பொது மாநாட்டில் தமிழ்த் தேசிய பேரியக்கத்தின் தலைவர் பெ.மணியரசன் ஆற்றிய உரையில், சுயமரியாதைத் திருமணம், இந்தி எதிர்ப்புப் போர் பற்றிக் கூறியிருந்த செய்திகள் குறித்த நமது மறுப்பை “புரட்சிப் பெரியார் முழக்க”த்தின் முந்தைய (கடைசியாக 21.8.2014) இதழ்களில் எழுதியிருந்தோம்.***

***அதன் தொடர்ச்சியாக தோழர் மணியரசன் அவ்வுரையில் ‘தமிழ்நாடு தமிழருக்கே’ முழக்கம் முதன்முதலில் எழுப்பியது பற்றி பேசியுள்ளதைக் குறித்தும் சில விளக்கங்களைத் தர விரும்புகிறோம்.***

“முதலில் தோழர் மணியரசன் கூறுவதைப் பார்ப்போம். “1938-ல் சென்னையில் நடந்த இந்தி எதிர்ப்புப் பொதுக் கூட்டத்தில் ‘தமிழ்நாடு தமிழருக்கே!’ என்ற முழக்கம் எழுப்பப்பட்டது. அந்நிகழ்வு பற்றி தி.மு.க.வின் முதன்மைத் தலைவர்களில் ஒருவராக விளங்கிய நாவலர். இரா.நெடுஞ்செழியன் எழுதிய ‘தி.மு.க’ என்ற தலைப்பில் உள்ள நூலில் கூறுவதைப் பாருங்கள்.

இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து தமிழகம் தனியே பிரிய வேண்டும் என்ற கருத்து இந்தி எதிர்ப்பின் விளைவாக 1938-ல் உருவாகியது. இந்தியாவின் தேசிய மொழியாகவும், ஆட்சி மொழியாகவும், பொது மொழியாகவும் ஆக்கிடும் நோக்கத்தில் தமிழகத்தில் கட்டாய இந்தி புகுத்தப்பட்ட நேரத்தில், தமிழார்வம் கொண்ட பேரறிஞர்களும், பொது மக்களும் அந்த கட்டாய இந்தியைத் தீவிரமாக எதிர்க்கும் பணியில் ஈடுபட்டார்கள். இந்தி எதிர்ப்பு தமிழகத்தின் பல பகுதிகளிலும் ஓங்கி வளரத் தொடங்கியது.

*1937-ஆம் ஆண்டில் ஆச்சாரியார் முதலமைச்சராக இருந்த காலத்தில் தோன்றிய இந்தி எதிர்ப்பு இயக்கம் மக்கள் உள்ளத்தில் தமிழார்வத்தையும், தமிழனின் பண்டைய பெருமைகளையும், அவன் ஆண்டு புகழ் பெற்ற வரலாறுகளையும், தமிழிலக்கியங்களின் சிறப்புகளையும் தூவியது. வடநாட்டு இந்தி ஏகாதிபத்திய ஆதிக்கம், வடநாட்டு அரசியல் ஆதிக்கத்தையும், பொருளாதார ஆதிக்கத்தையும், வாணிக ஆதிக்கத்தையும் நாளடைவில் தமிழ்ப் பேரறிஞர்களுக்கு உணர்த்திற்று. அதன் விளைவாக 1938 ஆம் ஆண்டு மே திங்களில் சென்னைக் கடற்கரையில் கூட்டப் பெற்ற மாபெரும் இந்தி எதிர்ப்புப் பொதுக் கூட்டத்தில் ‘தமிழ்நாடு தமிழருக்கே ஆக வேண்டும்’ என்ற தீர்மானத்தை முன்மொழிந்தவர் பேராசிரியர் மறைமலையடிகள் ஆவார்கள். அதனை வழிமொழிந்து பேசியவர்கள் பெரியார் இராமசாமி, ச.சோமசுந்தர பாரதியார் ஆவார்கள்.*

நாவலர். நெடுஞ்செழியன் அவர்களின் இந்தக் கூற்று நான் கையில் வைத்துள்ள ‘தி.மு.க.’ என்று பெயர் தாங்கிய நூலில் உள்ளது. அந்நூலை நாவலர் நெடுஞ்செழியன் எழுதியுள்ளார். அந்நூல் 1961 ஆம் ஆண்டு முதல் பதிப்பாக வந்துள்ளது. நான் படித்த பகுதி இந்நூலின் 10, 11 பக்கங்களில் உள்ளது. இந்த இடத்தில் இரண்டு கருத்துகளைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். தனித் தமிழ்நாட்டிற்கான முதற்குரல் கொடுத்தவர்கள் தமிழறிஞர்கள். இக்குரல் அறிஞர்கள் குரலாக மட்டும் சுருங்கி விடாமல் அதனை மக்கள் குரலாகப் பரப்பியவர் பெரியார்.”

இது தான் தோழர் மணியரசன் உரையில் இருந்து இக்கட்டுரைக்கு நாம் எடுத்துக் கொண்ட பகுதியாகும்.

முதலில் தோழர் மணியரசன் ஆதாரமாகக் கையாண்டிருக்கும், நாவலர் இரா.நெடுஞ்செழியன் எழுதியுள்ள ‘தி.மு.க.’ என்ற தலைப்பிலான நூல் குறித்தும், அது எழுதப்பட்ட காலம் குறித்தும் பார்ப்போம்.

*1949-ல் அண்ணாவும், அவருடன் பல முன்னணி தோழர்களும் பெரியாரிடம் இருந்து பிரிந்து சென்று* திராவிட முன்னேற்றக் கழகம் என்ற ஒரு புதிய அமைப்பைக் கண்டனர். தொடக்கத்தில் எங்களுக்கும் தலைவர் பெரியார் தான்; எனவே தி.மு.க.வுக்கு பொதுச் செயலாளர் மட்டுமே இருப்பார்; தலைவர் நாற்காலி காலியாகவே இருக்கும் என்று கூறினார்கள்.

**‘கண்டதைப் படிப்பவன்’**

‘ஆலுக்கு விழுதாக இருப்போமேயன்றி வாழைக்குக் கன்றாக இருக்க மாட்டோம்’ என்றார்கள். அதாவது “பெரியாரின் சமுதாயப் புரட்சிப் பணிகளுக்கு ஆதரவாக (‘ஆலுக்கு விழுதாக’) தி.மு.க. நிற்குமே அன்றி, தங்கள் வளர்ச்சிக்காகத் தங்களை உருவாக்கிய பெரியாரின் இயக்கத்தை அழிப்பவர்களாக (‘வாழைக்குக் கன்றாக’) இருக்க மாட்டோம்” என்றார்கள்.

தி.க.வும், தி.மு.க.வும் ஒரே இலட்சியத்தைக் கொண்ட இரு வேறு இயக்கங்கள்; இலக்கு ஒன்று தான். இயக்கங்கள் தான் இரண்டு என்பதை “தி.க.வும் தி.மு.க.வும் இரட்டைக் குழல் துப்பாக்கி” என்று கூறிக் கொண்டார்கள். என்றாலும், மக்களைக் கூறு போட்டு, மேல் கீழாக அடுக்கி, ஜாதிய அடுக்கின் உச்சியில் அமர்ந்து கொண்டு, அக்கட்டமைப்பைத் தங்கள் தன்னலனுக்காக புனிதம், வேதம், கடவுள், புராணம் என்றெல்லாம் புளுகி, அந்த ஜாதியக் கட்டமைப்பைக் காப்பாற்றத் துடிக்கும் ஆரியருக்கு (பார்ப்பனருக்கு) எதிராக ‘திராவிடர்’ என்ற அடையாளத்துக்குள், ஆரியப் பண்பாட்டால் நசுக்கப்படும் ‘சூத்திரர்களை’ ஒன்று திரட்டி நடத்தி வந்த சமுதாயப் புரட்சிக்கு, பண்பாட்டுப் புரட்சிக்கென பெரியாரும், சுயமரியாதை இயக்கமும் முன்னிறுத்தி வந்த எதிர்வுகளான ஆரியர், திராவிடர் என்பதைப் புறக்கணித்தனர்.

வடக்கு, தெற்கு என, நிலப்பரப்புகளை எதிர்வுகளாகக் காட்டி (வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது) பெரியாரின் பண்பாட்டுப் போரைக் குழப்பியடித்தனர். இப்போக்கைப் பெரியார் கடுமையாக விமர்சித்தார்.

“சும்மா வடக்கு வாழுது, தெற்கு தேயுது என்று கூறித் திரிவது தானா பொதுத் தொண்டு? அடே! பார்ப்பான் வாழ்கின்றான்; தமிழன் தேய்கின்றான் என்று எடுத்துச் சொல்லி, அதற்குப் பரிகாரம் காணுவது அல்லவா பொதுத் தொண்டாகும்” என்றார் பெரியார். (விடுதலை 27.04.1961)

இன்று வாழும் வடக்குக்கு தங்களை, தங்கள் ஊழல் சொத்தைக் காத்துக் கொள்ள வால் பிடித்து நிற்பது வேறு செய்தி.

“திராவிடர் முன்னேற்றக் கழகம் என்று கூறும் பொழுது அதில் திராவிடர் மட்டுமே அங்கம் பெறலாம் என்று எழுப்புவதாக அமைந்து விடுகிறது. இப்போதுள்ள உலகச் சூழ்நிலைக்கு, காலப் போக்குக்கு இது உகந்ததாக எனக்குப் படவில்லை. நம்முடைய கட்சியின் இலட்சியம் திராவிட நாட்டை செழுமையான பூமியாகப் பேணிக் காப்பதாகும். அத்தகைய திராவிட மண்ணில் திராவிடர் மட்டுமே வாழலாம் என்று வரையறை செய்வது குறுகிய நோக்கமாகும். இங்கே திராவிடமும் வாழலாம்; ஆரியமும் ஆளலாம்” -

- 17.09.1949 சென்னை ராபின்சன் பூங்காவில் நடைபெற்ற தி.மு.க. தொடக்க விழா பொதுக் கூட்டத்தில் ‘அண்ணா’ பேசியது.

ஆரியப் பண்பாட்டு நிறுவனமான இந்து மதத்தின் முதன்மைக் கடவுளாக நிறுத்தப்படுவது விநாயகர். ஆரிய அரசியல் கட்டமைப்பான இந்தியாவைக் காப்பாற்ற ‘மொழிவழித் தேசியம்’ என்பதை மறுத்து ‘பண்பாட்டு தேசியம்’ எனக் கூறி திசை திருப்பும் பெரும்பான்மை வாதம் பேசும் இந்து மத வெறியர்கள், சிறுபான்மை மக்களுக்கு எதிரான உளவியல் உருவாக்கத்துக்கு இப்போதும் பயன்படும் முதன்மை விழாவும் விநாயகர் ஊர்வலம் தான்.

இந்து மத அடிமைத் தளையிலிருந்து தாழ்த்தப்பட்டோர் விடுதலை பெற புரட்சியாளர் அம்பேத்கர் தேர்ந்தெடுத்து, 1956-ல் தன்னை இணைத்துக் கொண்ட மார்க்கம் புத்த மார்க்கம் ஆகும்.

இரண்டு செய்திகளையும் இணைப்பது போல 1953 ஆம் ஆண்டு புத்தர் பிறந்தநாள் (27.05.1953) அன்று மாலை 6.30 மணிக்கு ‘ என்னை கீழ் ஜாதியாகப் பிறப்பித்ததற்காக உடைக்கிறேன்; என்னைச் சூத்திரன், வேசிமகன் என்று கற்பித்ததற்காக உடைக்கிறேன்’ என்று கூறியவாறே, தங்கள் செலவில் செய்த/வாங்கிய பிள்ளையார் சிலைகளை உடையுங்கள் என்று பெரியார் அறிவித்தார்.

ஆனால் ஆலுக்கு விழுதாக இருப்போம் என்று சொன்ன தி.மு.க., “நாங்கள் பிள்ளையாரையும் உடைக்க மாட்டோம்; பிள்ளையாருக்குத் தேங்காயும் உடைக்க மாட்டோம்” என்று குதர்க்கம் பேசியது.

அந்த சமயங்களில் தி.மு.க.வே கூட ஆரியராவது திராவிடராவது என்று பேசத் தொடங்கியிருந்த காலம். அதற்குப் பதில் சொல்லும் வகையில் தருமபுரி மாவட்டம் பொம்மிடியில் ஆற்றிய சொற்பொழிவில் பெரியார் விளக்கம் சொன்னார். (விடுதலை 07.09.1953)

அதாவது “இன்றைய தினம் ஆரியர் திராவிடர் என்ற பிரிவினை இரத்தப் பரிட்சையின் பேரில் அல்ல; அல்லாமல் கலாச்சார, பழக்கவழக்க, அனுஷ்டானத்தின் படியாகும் என்பதை அனைவரும் உணர வேண்டும்” என்கிறோம்.

“இந்த காங்கிரசுக்காரர்கள், கம்யூனிஸ்டுகள் என்பவர்கள் மாத்திரம் இந்தப்படி ஆரியராவது, திராவிடராவது என்று கேட்பதுடன், பார்ப்பனர்களை அய்யர்கள் என்று சொல்லிக் கொள்வதோடு, நம்மவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிற, நம்மிடமிருந்து பிரிந்து போனவர்களும் இந்தப் படியே, இந்த நாட்டுப் பார்ப்பனர்கள் ஆரியர்கள் அல்ல என்பதாகச் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். காங்கிரஸ், கம்யூனிஸ்ட் என்ன? சோஷலிஸ்டுகள் எல்லோரும் பார்ப்பன ஆதிக்கத்திலுள்ள கட்சிகள் தான்; இன்னும் கொஞ்ச நாளில் கண்ணீர் துளிகளுக்கும் (தி.மு.க.வுக்கும்) அவனே தலைவனாகி விடுவான்.” என்ற அளவுக்குக் கடுமையாகப் பெரியார் விமர்சிக்கிறார்.

தி.மு.க.வுக்குப் பார்ப்பனத் தலைமை இன்று வரை ஏற்படவில்லை என்றாலும், அதிலிருந்து பிரிந்து போன அண்ணா தி.மு.க.வுக்கு 1980களின் இறுதியில் ஏற்பட்டதை நாமறிவோம்.

அடுத்ததாக, 1953 அக்டோபரில் ஆத்தூரில் நடந்த மாநாட்டில், ஆரியர்கள் தூண்டி விடும் வன்முறைகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள “திராவிடர் கழகத்தவர் அனைவரும் 6 அங்குல நீளத்துக்குக் குறையாத கத்தி வைத்துக் கொள்ளுங்கள்” என தீர்மானித்தது திராவிடர் கழகம். தி.மு.க.வோ “கத்தியைத் தீட்டாதே, தம்பி! புத்தியைத் தீட்டு” என்று குறுக்கு சால் ஓட்டியது. யார் யாருக்கு எது மழுங்கியிருக்கிறதோ அதைத் தீட்டிக் கொள்ளட்டும் என்றார் பெரியார்.

‘கடவுளே இல்லை’ என்ற கொள்கை கொண்ட திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து போனவர்கள் “ஒன்றே குலம்; ஒருவனே தேவன்” என்ற திருமூலரின் வரிகளை, ஒரு திரைப்படத்தின் முடிவில் அண்ணா பயன்படுத்த, அதையே தங்கள் கடவுள் கொள்கை என்பது போல் காட்டிக் கொள்ளத் தொடங்கினர் தி.மு.க.வினர்.

அண்ணா எழுதிய ‘வேலைக்காரி’ நாடகம் ‘ஜமீன்தார் வேதாசல முதலியார்’ மனம் திருந்தி பேசும் வசனத்தோடு நிறைவு பெறும். அந்த வசனம்: ‘பணத் திமிரும் ஜாதித் திமிரும் ஒழிய வேண்டும்’ என்றும் ‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ என்றும் நாட்டு மக்களுக்கு உரைப்போம். “ஒன்றே குலம், ஒருவனே தேவன்” இப்படி முடிக்கப்பட்டது அந்த நாடகம்.

அதற்கு எதிர்வினையாக “கடவுளே இல்லாத கட்சியிலிருந்து பிரிந்த அவன் கண்ட முன்னேற்றம், ஒரு கடவுள் உண்டு என்பது தான்” என்றார் பெரியார். (விடுதலை 10.07.1960)

(மேலும் அடுத்த இதழில்)

DATE OF PUBLICATION 10.09.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# ஜாதி வெறி தாக்குதலைக் கண்டித்து செங்கல்பட்டில் கொட்டும் மழையில் ஆர்ப்பாட்டம்




கொட்டும் மழையில் 05-09-2014 அன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் செங்கல்பட்டு பழைய பேருந்து நிலையம் அருகில் காஞ்சி புரம் மாவட்டத்தில் அத்திப்பட்டு, மதுராந்தகம், நுகும்பல் என தொடரும் தாழ்த்தப்பட்டோர் மீது நடத்தப்படும் ஜாதிய வன்கொடுமை தாக்குதல்களை கண்டித்து திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் தொடர் முழக்க கண்டன ஆர்ப் பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் மற்றும் எஸ்.டி.பி.அய். மாநில செய லாளர் முகமது பிலால், இந்திய தேசிய லீக் கட்சியின் மாநில இளைஞர் அணித் தலைவர் முகமது அசாருதீன், ம.ம.க. மாவட்ட தலைவர் ஷாஜஹான், இளந் தமிழகம் அமைப்பினர் பரிமளா, செந்தில் மற்றும் தோழர்கள், காஞ்சி மக்கள் மன்றம் மகேஷ் மற்றும் தோழர்கள், கழகத் தலைமை நிலைய செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி, கழக வழக்கறிஞர் அருண், அய்யனார், மாவட்ட தலைவர் ஜான் மற்றும் தோழர்கள் 70 பேர் கலந்து கொண்டனர். காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர் தினேசுகுமார் தலைமை தாங்கினார். மாவட்ட அமைப்பாளர் தெள்ளமிழ்து நன்றி கூறினார். கடும் மழை, சூறாவளி காற்றில் துணிப்பந்தல் சரிந்து வீழ்ந் தது; மழை கடுமையாக கொட்டிய நிலையில் ஜாதி, தீண்டாமைக்கு எதிராக முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆9941613535

## தூத்துக்குடி மாவட்ட கலந்துரையாடல்

தூத்துக்குடி மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் 10.08.2014 ஞாயிறு காலை 10 மணியளவில் தூத்துக்குடி சோமா விடுதியில் மாவட்டத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மண்டலச் செயலாளர் கோ.அ.குமார், மாவட்டச் செயலாளர் க.மதன், பொருளாளர் ச.ரவிசங்கர், மாவட்ட துணைத் தலைவர் வே.பால்ராசு, அமைப்பாளர் ச.கா.பாலசுப்பிரமணியன், மாநகரச் செயலாளர் பால். அறிவழகன், ஆழ்வை முருகேசன், இரா. உதயகுமார், செ.செல்லத்துரை, வீரபெருமாள் உள்பட பலர் கலந்து கொண்டனர். இந்திய பொதுவுடமை கட்சியின் தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் அ.மோகன்ராசு மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டு, அக வணக்கம் செய்யப்பட்டது. செப்டம்பரில் பெரியார் பிறந்த நாள் விழா, பரப்புரை பொதுக் கூட்டம் நடத்துவது பற்றி கலந்தாய்வு செய்யப்பட்டது. மத்திய அரசின் சமஸ்கிருத திணிப்பு முயற்சி, தமிழக அரசின் சமஸ்கிருதம் பற்றி வலைதளத்தில் ஏற்றம் பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. பெரியார் பிறந்த நாளை சமூகநீதி - பகுத்தறிவு நாளாக அறிவித்து விடுமுறை அளிக்க வேண்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## உடுமலை மலரினியன்–சுடரொளி கட்டியுள்ள வாஸ்து மறுப்பு இல்லத் திறப்பு விழா



உடுமலை கழக இணையர் க.மா. மலரினியன்-வ.இரா. சுடரொளி மற்றும் அன்புச் செல்வங்கள் சு.ம. தேனிலா, சு.ம. கவின்மலர் ஆகியோரின் புதிய இல்லமான "கருந்திணை"யை 17.8.2014 நண்பகல் 12.15 மணியளவில் (இராகு காலம்) உடுமலையில் கழகத்தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்தார். 'வாஸ்து' விவரிக்கும் கட்டுமான முறைகளுக்கு நேர்மாறாக அழகிய இந்த இல்லம் கழகத் தோழர் அ.ப.சிவா அவர்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது. விழா தொடக்கத்தில் பெரியாரிய பண்பாட்டு வாழ்வுக்கான உறுதிமொழி ஏற்கப்பட்டது. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் வாழ்த்துரை வழங்கினார். கழக வளர்ச்சிக்கு ரூ.5000-மும், கழக ஏட்டின் வளர்ச்சிக்கு ரூ.5000-மும் தோழர் மலரினியன், தலைவர், பொதுச் செயலாளரிடம் வழங்கினார்.

## கருவேப்பம்பட்டி நூலகம்–சிலம்பு பயிற்சியகத்தை மாற்றுவதற்கு எதிர்ப்பு

நாமக்கல் மாவட்டம் கருவேப்பம்பட்டியில் சிறப்பாக இயங்கி வரும், சிலம்பு பயிற்சி மய்யம் மற்றும் நூலகத்தை அகற்றிவிட்டு, அந்தப் பகுதியில் வேறு அரசு அலுவலகம் அமைக்கும் முயற்சிக்கு ஊர் பொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இந்த சிலம்பு பயிற்சியகத்துக்கு 2012 ஆம் ஆண்டு கருவேப்பம்பட்டி பஞ்சாயத்து, இடம் ஒதுக்கி தீர்மானம் நிறைவேற்றியது. இப்படி பஞ்சாயத்து அனுமதியுடன் ஒதுக்கப்பட்ட இடத்தை 'கிரக வாஸ்துப்படி' புதிய அரசு கட்டிடம் கட்ட தேர்ந்தெடுத்துள்ளதாக அதிகாரிகள் கூறும் விளக்கத்தை பொது மக்கள் ஏற்க தயாராக இல்லை. நகர கழகப் பொறுப்பாளர் சதீஷ்குமார் பெயரில் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு அளிக்கப்பட்டது. கழக மாவட்ட செயலாளர் வைரவேல், இளைஞரணி தோழர் நித்யானந்தம், கழகத் தோழர்கள் சீனிவாசன், கார்த்தி, பிரகாசம் ஆகியோர் பொது மக்களுடன் உடன் சென்று மாவட்ட ஆட்சித் தலைவரை சந்தித்து நூலகம்–சிலம்பு பயிற்சிக் கூடத்தை கையகப்படுத்த அனுமதிக்கக் கூடாது என்று மனு அளித்தனர்.

## தமிழ்க் குடியரசுப் பதிப்பகத்தில் தந்தை பெரியாரின் 135ஆவது பிறந்த நாள் சிறப்பு வெளியீடுகள்


1. பொன் மொழிகள் – தந்தை பெரியார் — ப.64, விலை. ரூ.30
2. பெரியாரும் அம்பேத்கரும் – எஸ்.வி. இராஜதுரை — ப. 48, விலை ரூ.25
3. பெரியாரும் கம்யூனிஸ்டுகளும் – எஸ்.வி. இராஜதுரை — ப. 40, விலை ரூ.20
4. ம.பொ.சி.யும் ஆதித்தனாரும் தமிழ்த் தேசியத் தலைவர்களா? வாலாசா வல்லவன் — ப.32, விலை ரூ.15

தந்தை பெரியார் பிறந்த நாள் விழாக்களில் கொடுப்பதற்காக முன்கூட்டியே அனுப்பி வைக்கப்படும். 10 படிகளுக்கு மேல் வாங்குபவர்களுக்கு 30 விழுக்காடு கழிவு அளிக்கப்படும். தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு உள்ளிட்ட மற்ற நூல்களின் விலைப் பட்டியலை தெரிந்து கொள்ள இணையத்தில் www tamizh kudiarasu pathippagam.com பார்க்கவும்.

தொடர்புக்கு : வாலாசா வல்லவன் – 7299214554, 9444321902

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 11th September 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | செப்டம்பர் 18, 2014 | புரட்சி 13 | முழக்கம் 36 | விலை: ரூ.3.00


# போராடிப் பெற்ற உரிமைகளைக் களவாடத் துடிக்கும் ஆபத்துகளை முறியடிப்போம்!

பார்ப்பன வேத மதம் - தீண்டப்படாத பார்ப்பனரல்லாத மக்களுக்கு காலம் காலமாக சம உரிமைகளை மறுத்தும் வர்ணம் - ஜாதியமைப்புகளைத் திணித்தும் அடிமைப்படுத்தியது.

அப்படி மறுக்கப்பட்ட உரிமைகளுக்குப் போராடியவர் பெரியார். அரசியலில் - கல்வியில் - உத்தியோகங்களில் - இந்த மக்களுக்கு உரிய பங்கினை உறுதி செய்ய வேண்டும் என்பதற்காகவே ‘வகுப்புவாரி பிரதிநிதித்துவம்’ என்ற இடஒதுக்கீட்டை வலியுறுத்தினார். காங்கிரஸ் கட்சி ஏற்க மறுத்தது. 1925இல் காங்கிரசை விட்டு பெரியார் வெளியேறினார்.

அதே 1925இல் தான் இந்தியாவை இந்து நாடாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு பார்ப்பனர்கள் “இராஷ்டிரிய சுயம் சேவக் சங்” (ஆர்.எஸ்.எஸ்.) என்ற அமைப்பை நாக்பூரில் தொடங்கினார்கள். “இந்தியா இந்துக்களின் நாடு; இந்துக்களை தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் என்று கூறு போடக் கூடாது” என்ற கொள்கைகளை உருவாக்கி, ஜாதியமைப்பு வர்ணாஸ்ரமப் பிரிவுகளை நியாயப்படுத்தினார்கள்.



தொடர்ந்து, ஆர்.எஸ்.எஸ்.சின் அரசியல் அமைப்புகளான ஜனசங்கமும், அதற்குப் பிறகு உருவான பாரதிய ஜனதாவும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்ற இடஒதுக்கீட்டை உறுதியாக எதிர்த்தன; மண்டல் பரிந்துரையை அமுல்படுத்திய வி.பி.சிங் ஆட்சியை பா.ஜ.க. கவிழ்த்தது.

சுமார் 90 ஆண்டுகாலம் ஆர்.எஸ்.எஸ். சங்பரிவாரங்கள் மறுத்து வந்த இடஒதுக்கீட்டுக் கொள்கையை இப்போது ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன்பகவத் திடீரென உ.பி.யில் ஒரு நிகழ்ச்சியில் ஆதரித்துப் பேசியுள்ளார். தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு தேவை என்கிறார்.

**ஏன் இந்த மாற்றம்?**

இந்துக்களை மதத்தின் அடிப்படையில் ஒன்று திரட்டி, ‘இந்து ராஷ்டிரம்’ அமைக்கும் அவர்களின் முயற்சி வெற்றி பெறவில்லை.

சமூகத்தில் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் உணர்வுகளே மேலோங்கி நின்றன! நிற்கின்றன!

எனவே, தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டை ஆதரிப்பதாகக் கூறி வலை வீசும் முயற்சிகள் தொடங்கப்படுகின்றன. தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்டவர்களை இந்துக்களின் பிரதிநிதிகளாக்கி அவர்களுக்கு எதிராக இஸ்லாமியர்களை கட்டமைத்து, மதக் கலவரங்களுக்கு கூர் தீட்டுகிறார்கள். இந்துமத அணி திரட்டலுக்கு இதுவே சரியான வழி என்பதே இவர்களின் திட்டம்.

காலம் காலமாக இந்து பார்ப்பன தர்மம், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மறுத்த சமவாய்ப்பையும் - சுயமரியாதையையும் - மீட்க வந்த இடஒதுக்கீடு - இப்போது இந்து மத அணி திரட்டலுக்கு பயன்படுத்தப்படுகிறது. இது ஆபத்தானது; இடஒதுக்கீட்டின் நோக்கத்தையே குழி தோண்டி புதைக்கும் சூழ்ச்சியானது!

தமிழ்நாட்டிலோ இடஒதுக்கீட்டை - நேர் எதிர் திசையில் கொண்டு செல்ல முயற்சிக்கிறார்கள்.

இடஒதுக்கீட்டை ஆதரிப்பவர்கள் தங்களை ஜாதித் தலைவர்களாக்கிக் கொண்டு, சொந்த ஜாதியினரை அரசியல் அதிகாரத்துக்கான வாக்கு வங்கிகளாக மாற்றத் துடிக்கிறார்கள். ‘தலித்’ மக்களை எதிரிகளாக்கி கலவரங்கள் தூண்டப்படுகின்றன.

இந்த ஜாதிய அணி திரட்டலுக்கு - சமூக ஜனநாயகம் என்று பெயர் சூட்டுகிறார்கள்.

ஆம்! மதவெறிக்கும் ஜாதி வெறிக்கும் இடஒதுக்கீடு எனும் சமூக நீதி பலி கடாவாக்கப்படுகிறது. ஆபத்திலிருந்து சமூகநீதியை மீட்டெடுக்க வேண்டிய சவால் இப்போது மதச் சார்பின்மை - சமூக நீதி சக்திகள் முன் எழுந்து நிற்கிறது.

இடஒதுக்கீடு நோக்கம் குறித்து பெரியார் கூறுகிறார்:

“நமக்கு இழிவையும் கீழ்த் தன்மையையும் வசதியின்மையையும் கொடுக்கிற இந்த ஜாதிகள் ஒழிந்து மக்களுக்கு சமமான தன்மை வரும் வரை இப்போதைய பிற்பட்ட வகுப்பினருக்கு அறிவு வளர்ந்து நாகரிகமடைந்து அரசியலில் கலந்து கொள்வதற்காகக் கல்வி, உத்தியோகம் முதலியவைகளில் அவரவர்களின் எண்ணிக்கைக்கு தகுந்தபடி விகிதாச்சாரம் அளிக்கப்பட வேண்டும்.”

– ‘விடுதலை’, பெரியார், 9.4.1950

‘மதம்’ குறித்து பெரியார் கூறுகிறார்:

“மனிதனின் உலக வாழ்க்கை நலத்திற்கு மதம் ஏற்பட்டது என்பதாக இல்லாமல் – அதுவும் காலத்துக்கும் அறிவுக்கும், ஏற்ற மாறுதலுக்குக் கட்டப்பட்டது என்பதாக இல்லாமல் – மதத்திற்கே மனிதன் ஏற்பட்டான் என்றும்; அந்த மதத்தைக் காப்பாற்ற வேண்டியதே மனிதனின் கடமை என்றும்; அது எப்படிப்பட்டதானாலும் அதைப் பற்றிக் குற்றம் சொல்லவோ, குறை சொல்லவோ, திருத்தவோ யாருக்கும் உரிமை இல்லை என்றும் சொல்லும்படியான மதம் எதுவாயிருந்தாலும் அதை அழித்துத் தீர வேண்டியது மனித சமூக சீர்திருத்தத்தைக் கோருகிற ஒவ்வொருவருடைய கடமையாகும். ஆகவே, அக்கடமைக்குட்பட்டவைகள்தாம் சமயக் கொள்கை யாகும்.” – ‘குடிஅரசு’ 25.1.1931

“அந்தக் காலத்திற்குத் தோற்றுவிக்கப்பட்ட மதமும் – கடவுளும் அன்றையப் பாதுகாப்புக்குப் போதுமானதாய் இருந்தன. அந்தக் காலத்திய பாதுகாப்புக்கு இன்று யாரும் பயப்படுவதில்லை. அந்தக் காலத்தில் ஒரு 5 ரூபாய் நோட்டை வைத்து அதன் மீது ஒரு பளுவையும் வைத்து, நாலு பக்கங்களிலும் ஏசுநாதர், முகம்மது நபி, சிவன், மகாவிஷ்ணு என்று எழுதிவிட்டுப் போய்விட்டால் ஒருவன்கூட அதை எடுக்கத் துணிய மாட்டான். இன்றையக் காலத்திலோ அதை ஒருவன்கூட எடுக்காமல் இருக்க மாட்டான்.”

– ‘விடுதலை’ 11.3.1948

இதுவே - இன்றைய மதங்களின் நிலை!

சமத்துவத்துக்காக போராடி பெற்றதே இடஒதுக்கீடு எனும் சமூக நீதி

அந்த நீதியை தனியார் துறைகளிலும் வென்றெடுக்கவும் -

ஜாதி ஒழிப்புக் கொள்கையை முன்னெடுக்கவும் -

பொருளியல் சுரண்டலுக்கும்,

பெண்ணடிமைக்கும் எதிராகவும் முன்னெடுக்கவும்,

## பெரியார் பிறந்த நாளில் சூளுரைப்போம்!

## வினாக்கள்... விடைகள்...!

✦ சேது சமுத்திர திட்டத்துக்காக – ‘ராமன் பாலத்தை’ ஒரு போதும் இடிக்க மாட்டோம்.
– ***அமைச்சர் கட்காரி***

ஆனால், ‘ராமன்’ கோயிலுக்காக பாபர் மசூதியை இடிப்பீங்க... நல்லா, இருக்குப்பா, உங்க நியாயம்?

✦ மகாராஷ்டிராவில் தொகுதி பங்கீட்டில் பா.ஜ.க. சிவசேனை மோதல். – ***செய்தி***

‘இந்து ஒற்றுமை’ பேசுற நீங்களே, இப்படி மோதிகிட்டா, எப்படிங்க?

✦ திருப்பதியில் முடி காணிக்கை செலுத்த வரும் பக்தர்கள் நீண்ட நேரம் காத்திருக்கும் குறை தீர்க்கப்படும். – ***நிர்வாக அதிகாரி***

அப்ப, ஒரு ‘யோசனை’ ஊர்தோறும் ஏழுமலையான் சலூன்களை திறந்துடுங்க; காத்திருக்க வேண்டியதில்ல...

✦ அய்தராபாத்தில் காந்தி வேடம் போட்ட பிச்சைக்காரர் சிகரெட் பிடித்ததால் கைது. – ***செய்தி***

அப்ப, காந்தி வேடம் போட்டு பிச்சை எடுக்குறது தப்பில்லை; புகைப் பிடிப்பதுதான் தப்புங்குறீங்க.

✦ ஆஸ்திரேலியா அருங்கட்சியகத்திலிருந்து மீட்கப்பட்டு, தமிழகம் கொண்டுவரப்பட்ட நடராசன் சிலை மதிப்பு ரூ.33 கோடி. – ***செய்தி***

திருட்டு போவதற்கு முன்பு கோயில்ல கடவுளாக இருந்தப்ப நடராஜனுக்கு எவ்வளவு மதிப்பு போட்டீங்கய்யா...

✦ காஞ்சி ஜெயேந்திரன் தனது 80 ஆவது பிறந்த நாளில் சாதனையாளர்களுக்கு விருது வழங்கினார்.
– ***செய்தி***

அடுத்த பிறந்த நாளில் நீதிமன்றத்தில் பல்டி அடித்த சாட்சிகளுக்கும் – ஏதாவது விருது ஏற்பாடு செஞ்சு ‘ஆசீர்வாதம்’ வழங்குங்க சாமி...!

# ஜாதி – மத – சடங்குகள் தகர்ந்தன

# காஞ்சி மக்கள் மன்றத்தின் மணவிழா மாட்சி




காஞ்சிபுரம் புறநகரையொட்டிய செங்கொடியூர் (மேல் கதிர்பூர்) கிராமம், தமிழ்நாட்டின் கவனத்தை ஈர்த்த ஊர். அங்குதான் காஞ்சி மக்கள் மன்றம் இயங்குகிறது. ஒடுக்கப்பட்ட மக்கள் பாதிக்கப்பட்ட பெண்களுக்காகப் போராடும், போர்க் குணமிக்க பெண் தோழர்கள் இந்த மன்றத்தின் செயல்பாட்டாளர்கள், ஆண் தோழர்களும் உண்டு. அதிகார அடக்குமுறைகளுக்கு எதிராக சமரசமற்ற போராட்டங்கள் வழியாக மக்களின் கவனத்துக்கு வந்தது இந்த அமைப்பு. அரசு அமைப்புகளை எதிர்த்து நடத்திய போராட்டத்துக்காக இந்தப் பெண் போராளிகள் கொடுத்த விலை அதிகம். பொய்யாக புனையப்பட்ட கொலை முயற்சி வழக்குகளையும் சந்தித்து சிறை புகுந்தவர்கள். பெரியார் காண விரும்பிய புரட்சிப் பெண்களின் அடையாளமாக களத்தில் நிற்கிறது இந்த அமைப்பு.

செங்கொடியூரில் மக்கள் ஆதரவுடன் இவர்கள் நிறுவியுள்ள மக்கள் மன்றம்தான் இந்தத் தோழர்களின் குடியிருப்பு. குடும்ப உறவுகளை விட்டு விலகி, தங்களுக்கான கொள்கைக் குடும்பத்தை ஜாதி, மதம், பால் வேறுபாடுகளைக் கடந்து இவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். உருவாக்கியது மட்டுமல்ல, பல ஆண்டுகள் அதை வெற்றிகரமாக நடத்தி வருவதுதான் பாராட்டுக்கும் வியப்புக்கும் உரியதாகும். இந்த வாழ்க்கை முறைக்கு, “பொது வாழ்வகம்” எனும் அழகான பெயரையும் சூட்டியிருக்கிறார்கள். வாழ்வகத்தைச் சுற்றி ஒடுக்கப்பட்ட தலித் மக்கள் வாழும் வீடுகள் வரிசையாக அணி வகுத்து நிற்கின்றன. அவை அரசு கட்டித் தந்த குடியிருப்புகள். பொது வாழ்வகத் தோழர்களின் வலிமையே இந்த மக்கள் தரும் பேராதரவுதான். ஒவ்வொரு வீட்டின் சுவர்களிலும் சமுதாய மாற்றத்துக்கான புரட்சியாளர்களின் கருத்துகள் வண்ணங்களில் பளிச்சிடுகின்றன. வாழ்வகத்தில் நுழைந்தாலோ அங்கே புரட்சி சிந்தனைகள் மணம் பரப்பிக் கொண்டிருப்பதைப் பார்க்க முடியும். விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன், பெரியார், மார்க்ஸ், மாசேதுங், சேகுவரா படங்களுடன் அவர்களின் கருத்துகள் பதியப்பட்டிருக்கின்றன.

இந்தப் பொது வாழ்வகம், உலகத் தமிழர்களின் கவனத்துக்கு கொண்டு சென்ற ஒரு நிகழ்வு உண்டு என்றால் அது செங்கொடியின் வீரமரணம்தான். இதே வாழ்வகத்தில் இளம் வயதில் பெற்றோர்களால் ஒப்படைக்கப்பட்ட செங்கொடி, புரட்சிகர சிந்தனைகளை தனக்குள் வரித்துக் கொண்டு, போராளியாக மாறினார். கலை நிகழ்வுகளில் சமூகப் பங்களிப்பை ஆற்றினார். இராஜீவ் கொலை வழக்கில் முறையற்ற விசாரணைகளால் குற்றம்சாட்டப்பட்டு தூக்குத் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்ட 3 தமிழர்களுக்காக அவர்களின் தூக்குத் தண்டனைக்கு எதிராக எரியும் நெருப்புக்கு தன்னை பலியாக்கிக் கொண்டவர் செங்கொடி. உலக வரலாற்றிலே மரண தண்டனைக்கு எதிராக ஒரு பெண் தீக்குளித்து வீரமரணத்தைத் தழுவிய வரலாறு இதுதான். ஜாதி - இனம் - குடும்பம் கடந்த புரட்சிகர சமூக வாழ்க்கை எத்தகைய போராளிகளை உருவாக்குகிறது என்பதற்கு இது உதாரணம்.

**செங்கொடி நினைவகம்**

பொது வாழ்வகத்தின் பின்புறத்தில் மக்கள் ஆதரவுடன் நிறுவப்பட்ட செங்கொடி நினைவிடத்தின் முகப்பில் இருபுறமும் திலீபன், முத்துக்குமார் சிலைகள், தூய்மையான பளிங்கு கற்களில் நடந்து சென்று செங்கொடியின் உருவச் சிலையை நெருங்கும்போது இனம் புரியாத ஒரு உணர்வு; இந்த உணர்வு கோயில்களில் முடங்கிக் கிடக்கும் கல்சிலைகளுக்கு கும்பிடு போடும் எந்திரத்தனமான அனிச்சை நிகழ்வு அல்ல; சமூகத்துக்காக எந்த தியாகத்துக்கும் தயாராக வேண்டும் என்ற உந்துதலைத் தரும் இலட்சிய உணர்வு.

பொது வாழ்கவம் இயற்கையை நேசிக்கிறது. சுற்றிலும் இயற்கை மணம் வீசும் பசுமைகள். பறவைகள் இனிமையான விதம் விதமான ஓசைகளை எழுப்புகின்றன. அருகே பொது நிகழ்வுகளுக்கான மக்கள் கூடும் திறந்தவெளி, அதற்கான எழிலார்ந்த மேடை.

பணிகளை தோழர்கள் திட்டமிட்டு, அதற்கான பொறுப்புகளை சுழற்சி முறையில் செய்து முடிக்கிறார்கள். ஒரே சமையல் கூடம், ஒரே சாப்பாட்டுக் கூடம், உணவுக்கான மணி ஒலித்ததும் கூடுகிறார்கள். ஒன்றாக அமர்ந்து உண்கிறார்கள்!

கிராமத்து மக்கள் தங்கள் வீட்டுப் பிள்ளைகளை இளம் பருவத்திலேயே மக்கள் மன்றத்தின் பொறுப்பில் ஒப்படைக்கிறார்கள். அமைப்பின் மீது இந்த மக்களுக்கு அவ்வளவு நம்பிக்கை. அப்படி இளம் பருவத்திலிருந்தே வாழ்ந்த, வளர்ந்த பல பெண்கள் இப்போது பட்டதாரிகள்; வழக்கறிஞர்கள்.

மக்கள் மன்றத்துக்கு மேலும் ஒரு பெருமை சேர்ப்பது, அவர்கள் நடத்தும் கலைக் குழு. பெரும்பாலும் பெண்களே கலை நிகழ்வுகளை நிகழ்த்துகிறார்கள். பறை அடிக்கிறார்கள்; நடனமாடுகிறார்கள்; நாடகம் நடத்துகிறார்கள்; புரட்சிகரப் பாடல்களைப் பாடுகிறார்கள். மக்களை சமூக மாற்றத்துக்கு அணியமாக்கும் புரட்சிகர கலை நிகழ்வுகள், மக்களின் பேராதரவைப் பெறுகின்றன. ஆண்டுதோறும் மே நாள் பேரணியை நடத்துவது வழமை; இப்போது செங்கொடி நினைவு நாளும் சேர்ந்து கொண்டது.

இத்தனை சிறப்புகளுடன் செயல்படும் காஞ்சி மக்கள் மன்ற பொது வாழ்வகத்தைச் சார்ந்த மூன்று தோழர்களின் வாழ்க்கை இணை ஏற்பு விழா, பொது வாழ்வக வளாகத்தில் கடந்த செப்டம்பர் 7 ஆம் தேதி காலை 10 மணியளவில் மிகச் சிறப்புடன் நடந்தேறியது.

மேகலா-சிவபெருமாள் ஒரு இணையர்; மேகலா-பொது வாழ்வகத்தைச் சேர்ந்த வழக்கறிஞர். சிவபெருமாள்-உடற்பயிற்சி ஆசிரியர்; திராவிடர் விடுதலைக் கழகத் தோழர். மற்றொரு இணையர் உமா-பாலமுருகன். இருவரும் பொது வாழ்வகத்தின் தோழர்கள். மூன்றாவது இணையர் மகாலட்சுமி-தஞ்சைத் தமிழன். மகாலட்சுமி-வழக்கறிஞர். தஞ்சைத் தமிழன்-ஓவியர். இருவரும் பொது வாழ்வகத் தோழர்கள்.

விழாவுக்கு முதல் நாளிலிருந்தே கொள்கைத் தோழர்கள், திரளத் தொடங்கிவிட்டனர். மணவிழா வேலைகள் தொடங்கிய ஒருவாரத்துக்கு முன்பே மக்கள் மன்றத் தோழர்கள் அனைவருக்கும் கிராம மக்களே மகிழ்ச்சியோடு உணவு வழங்கினர். மக்கள் மன்றம் பணியாற்றும் கிராமங்களைச் சார்ந்த பெண்களும் ஆண்களுமாக சுமார் 200 தோழர்கள் இணையேற்பு விழாவுக்கான அனைத்து வேலைகளையும் ஓடி ஓடி செய்தது கண்கொள்ளாக் காட்சி.

காலை 10 மணியளவில் மக்கள் மன்ற கலை நிகழ்ச்சிகளுடன் விழா தொடங்கியது. புரட்சிகரப் பாடல்கள், பறை முழக்கங்களுக்கிடையே வாழ்த்துரை உறுதியேற்பு நிகழ்வுகள் நடந்தன. திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையேற்று உறுதிமொழி கூறி இணையேற்பு நிகழ்வை நடத்தி வைத்தார். தாலி இல்லை; மதச் சடங்குகள் இல்லை; ஜாதிகளைக் கடந்த திருமணம்.

தோழர் சரசுவதி, தோழர் தலித் சுப்பையா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தோழர் ஆர். நல்லக்கண்ணு, ஊடகவியலாளர் டிஎஸ்.எஸ். மணி, பாசறை செல்வராசு, வழக்கறிஞர் பாரிவேந்தன், வேல் முருகன், பயிற்சியாளர் முத்து உள்ளிட்ட தோழர்கள் பலரும் வாழ்த்துரை வழங்கினர். மணவிழா உறுதி ஏற்ற தோழர்கள், மணமகள் கோலத்தில் மாலையுடன் கலை நிகழ்வுகளில் பங்கேற்றதை, தோழர் ஆர். நல்லக்கண்ணு தனது உரையில் வியந்து பாராட்டினார். இப்படி ஒரு காட்சியை வேறு எங்கும் பார்க்க முடியாது என்றார்.

இந்த மண விழாவுக்கும் - மன்றத்துக்கும் தாமாக முன் வந்து ஆர்வத்துடன் உதவி வரும் தோழர்களின் பட்டியலை மக்கள் மன்றத்தின் பொறுப்பாளர் மகேசு நன்றியுடன் படித்தபோது உண்மையான பொதுத் தொண்டுக்கு சமூகத்தின் ஆதரவுக்கரங்கள் நீளவே செய்யும் என்ற நம்பிக்கையை உறுதிப்படுத்தியது. இணையேற்பு நிகழ்வின் அழைப்பிதழ் இந்த இணையர்கள் தேர்வு நடந்த முறையை இவ்வாறு பதிவு செய்தது.

*“தோழர்களே!*

*சாதி, மதம் மறுத்து பெண்ணடிமைத்தனத்தின் சின்னமான தாலியை நிராகரித்து மூடச் சடங்குகளைப் புறக்கணித்து போலி ஆடம்பர பகட்டுகளை ஒழித்து, மனித உறவை வெறும் பண உறவாக மாற்றும் மொய் வசூல் பண்பாட்டினைத் தவிர்த்து நடைபெற உள்ள இச்சுயமரியாதை திருமண விழாவிற்கு உங்களை அன்போடு அழைக்கின்றோம்.*

*இம்மணமக்கள் அனைவரும் தங்கள் வாழ்க்கையை மக்கள் பணிக்கென அர்ப்பணித்துக் கொண்டவர்கள். இவர்கள் தங்கள் வாழ்க்கைத் துணையை தேர்வு செய்தது இவ்வாறு தான்... இவர் நேர்மையும், நற்பண்புகளும் நிறைந்தவரா? நமது சமூக பணிக்கு இடையூறு செய்யாதவரா? உழைப்பை நேசிப்பவரா? கொள்கைகளை எச்சூழலிலும் விட்டுக் கொடுக்காதவரா?*

*இங்கு புற அழகோ, அந்தஸ்தோ, படிப்போ பிரதானமாக பார்க்கப்படவில்லை. மாறாக, அமைப்புத் தோழர்களின் பரிந்துரையையேற்று பெற்றோரின் சம்மதத்தைப் போராடிப் பெற்று அனைத்திற்கும் மேலாக தங்களுடைய விருப்பமும் அதில் அடங்கியிருந்ததால் எடுக்கப்பட்ட முடிவே ஆகும்.”*

ஜாதி கடந்த பொது வாழ்வக வாழ்க்கை முறை சாத்தியமானதே என்பதை நடைமுறையில் சமுதாயத்துக்கு நிரூபித்துக் காட்டி வருகிறது, காஞ்சி மக்கள் மன்றம்.

மண விழாவில் வாழ்த்திய ஒரு தோழர் இவ்வாறு குறிப்பிட்டார்: “இயக்கங்களைச் சார்ந்த தோழர்களின் திருமணத்தில் நாம் வாழ்த்தும்போது இது குடும்பத் திருமணம் அல்ல; இயக்கத் திருமணம் என்று கூறுவோம். ஆனால் இந்தத் திருமணம் இயக்கத்தில் நடக்கும் நமது குடும்பத் திருமணம்”. ஆம்; இயக்கங்களின் உறவுகளே குடும்ப உறவுகளாவதுதான் சமூக மாற்றத்துக்கான திறவுகோல்!

அந்த சாதனையை நிகழ்த்துகிறது இந்த ‘பொது வாழ்வகம்’!

– **இராசேந்திரன்**

### ‘முன்னோடி – பின்னோடி’ வாதங்களுக்கு மறுப்பு (9)

# அண்ணா பொது வாழ்க்கைக்கு வந்தது எப்போது?

**‘கண்டதைப் படிப்பவன்’**

*பெரியார் கொள்கைகளுக்கு நேர் முரணாக செயல்பட்டதே தி.மு.க. என்பதற்கு மேலும் வரலாற்றுச் சான்றுகளை அடுக்கிக் காட்டுகிறார் கட்டுரையாளர்.*

> “1959-ல் கும்பகோணத்தில் நடந்த நிதியளிப்புக் கூட்டத்தில், “ஒரு கடவுள் உண்டு என்றும், அதனைக் கும்பிடுங்கள்” என்றும் பெரியார் கூறியதாக ஒரு தி.மு.க. ஏடு எழுதியது. அதற்குக் ‘கண்ணீர்த் துளி’ (தி.மு.க.) பத்திரிக்கை ஒன்று, “அண்ணா பாதையில் பெரியார் வந்து விட்டார்” என்று ஈனத்தனமான முறையில் சேதி வெளியிட்டுள்ளது.
>
> “கண்ணீர்த் துளிகள் அதுவரை ஒரு கடவுள் என்று கூறினார்களாம்! நான் இல்லை என்று மறுத்து வந்தேனாம்! இன்று தான் தவறை உணர்ந்து ஒரு கடவுள் என்ற அவர்களின் வழிக்கு வந்திருக்கிறேனாம்! பத்திரிக்கைக்காரன் களில் எவனும் யோக்கியன் கிடையாது. எல்லோரும் இப்படிப்பட்ட அயோக்கியனாகத் தான் ஆகிவிடுகிறான். நானும் மானங் கெடத் தான் இவர்களைப் பற்றிப் பேசுகிறேன். ஒருவனுக்காவதுமான ஈனத்தைப் பற்றிக் கவலையே இல்லையே!”

(‘விடுதலை’ 24.11.1959) என்று பெரியார் கடுமையாகச் சாடினார்.

தங்கள் சுயநலத்துக்கே எனினும், அன்றைய இந்து சமுதாயத்தில் நிலவி வந்த உடன்கட்டை ஏறல், குழந்தை மணம், நரபலி, தேவதாசி முறை ஆகிய காட்டுமிராண்டி முறைகளைத் தடை செய்தும், காலங்காலமாகக் கல்வி மறுக்கப்பட்டு வந்த உழைக்கும் மக்களுக்குப் பொதுக்கல்வி முறையைக் கொண்டு வந்தும் இருந்தனர் ஆங்கிலேயர். தங்களின் மதப்பிடி தளருகிறது என்று கருதி தங்கள் வேதகால மேட்டிமைகளை மீட்டு நிறுவும் வஞ்சக நோக்கத் தோடு “விடுதலைப் போராட்டம்” என்ற வேடம் பூண்டு நயவஞ்சகப் பார்ப்பனர்களும், சுரண்டல் பனியாக்களும் நடித்து வந்தனர்.

சமூக சமத்துவம் நோக்கி நகர பெரும்பான்மை உழைக்கும் மக்களுக்கு, அடித்தட்டு மக்கள் போதிய விழிப்புணர்வும், கல்வியறிவும் பெற்று நிலைப் படுத்திக் கொள்வதற்கு முன்பாக, காங்கிரஸ் என்ற பார்ப்பன-பனியா கூட்டத்தார் கைக்கு நாடு போய் விடுவது ஆபத்து என்று கருதினார்கள் பெரியார், அம்பேத்கர் போன்ற மக்கள் தலைவர்கள்.

அவ்வடிப்படையிலேயே ‘சுதந்திர’ நாளை, துக்க நாள் என்றார் பெரியார். அந்நாளை இன்ப நாளாக அறிவித்தார் அண்ணா - அன்று தொடங்கி ஏட்டிக்குப் போட்டியாகவே செயல் பட்டு வந்தது தி.மு.க. இந்தி எதிர்ப்பு, வகுப்புவாரி உரிமை, இராமாயண எதிர்ப்புப் பரப்புரை செய்து வந்த சுயமரியாதை இயக்கத்தை விட்டு வெளியேறியதும், இந்தித் திணிப்பை ஆதரித்து வகுப்புவாரி உரிமையை எதிர்த்து, கம்பராமாயணத்தில் பொதுவுடைமைத் தத்துவத்தைக் ‘கண்டறிந்து’ கம்பராமாயணப் பரப்புரை செய்தார் ஜீவா.

அதேபோல், பணக்காரக் கட்சியான நீதிக்கட்சி யுடன் சுயமரியாதை இயக்கம் உறவு வைத்திருப் பதைக் குறை கூறிவிட்டு, நீதிக்கட்சிக்கிருந்த பார்ப்பனரல்லாதார் உணர்வும், வகுப்புவாரி உரிமை ஏற்பும் இல்லாத பெரும் கொள்ளையடிக்கும் பணக்காரர்கள் நிரம்பிய காங்கிரஸ் கட்சியில் சந்தா உறுப்பினராகி 1937 தேர்தலில் காங்கிரசுக்கு தேர்தல் பரப்புரையும் செய்தார் ஜீவா. அவரைப் போலவே வகுப்புவாரி உரிமை எதிர்ப்பு, இந்தி ஆதரவு, “இது அரசியல் கட்சியல்ல; வருணாசிரம(அ)தர்மம் காக்க வந்த கட்சி” என பெரியாரால் குறிப்பிடப்பட்ட இராசாசியின் சுதந்திராக் கட்சியுடன் உறவு என எதிரும் புதிருமாக எல்லாவற்றையும் பார்க்கவும் பேசவுமாக நடக்கவுமாக இருந்தது தி.மு.க.

பிரிந்து போன 1949 ஆம் ஆண்டிலிருந்து சமுதாய இயக்கமாகவே தொடரும் என்று அறிவித்திருந்த தி.மு.க., 1956இல் நடந்த தனது மாநில மாநாட்டில் தேர்தலில் ஈடுபடுவது என முடிவெடுத்து, 1957-ல் நடைபெற்ற சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டது.

செங்குந்தர் 12ஆவது மாநாடும், செங்குந்தர் 2ஆவது வாலிபர் மாநாடும் 1934 மே மாதம் 20, 21 ஆம் நாள்களில் திருப்பூரில் நடந்தன. இரண்டாம் நாள் மாநாட்டில் பெரியார் ’சமதர்மம்’ என்ற தலைப்பில் உரையாற்றினார். அப்போது நடந்தது தான் அண்ணா-பெரியார் ஆகியோரின் முதல் சந்திப்பு.

“எனக்கு பெரியாரோடு தொடர்பு ஏற்பட்டது 1934 ஆம் ஆண்டில் தான். அப்போது நான் பி.ஏ (ஆனர்ஸ்) தேர்வு எழுதியிருந்தேன். தேர்வு முடிவு தெரியாத நேரம் அது. அப்போது கோவைக்கு அடுத்த திருப்பூரில் ஒரு வாலிபர் மாநாடு நடந்தது. அங்கே தான் நானும் பெரியாரும் முதன்முதலில் சந்தித்துக் கொண்டோம். அவர் மீது எனக்குப் பற்றும் பாசமும் ஏற்பட்டன. அவருடைய சீர்திருத்தக் கருத்துகள் எனக்குப் பிடித்தன. பெரியார் என்னைப் பார்த்து ‘என்ன செய்கிறாய்?’ என்று கேட்டார். ‘படிக்கிறேன், பரீட்சை எழுதியிருக்கிறேன்’ என்றேன். ’உத்தியோகம் பார்க்கப் போகிறாயா?’ என்று கேட்டார். ‘இல்லை, உத்தியோகம் பார்க்க விருப்பம் இல்லை. பொது வாழ்வில் ஈடுபட விருப்பம்’ என்று பதிலளித்தேன். அன்று முதல் அவர் என் தலைவர் ஆனார். நான் அவருக்கு சுவீகாரப் புத்திரன் ஆகிவிட்டேன்” என்கிறார் அண்ணா.

ஆனால் அண்ணாவின் பேச்சுகளில் இருந்தும் எழுத்துகளில் இருந்தும், அண்ணாவின் வளர்ப்பு மகனான பரிமளம் தொகுத்த ‘பேரறிஞர் அண்ணா வின் தன்வரலாற்றின்’ படி அண்ணா, சென்னை கோவிந்த நாயக்கர் உயர்நிலைப் பள்ளியில் ஓராண்டு காலம் வேலை பார்த்த பிறகே பொது வாழ்வில் இறங்கினார். அவரது பொது வாழ்வு தேர்தலோடு தான் தொடங்கியது. “1935 ஆம் ஆண்டில் நான் சென்னை நகரசபை அங்கத்தினர் தேர்தலுக்கு நின்று தோற்றேன்” என அண்ணாவே குறிப்பிட்டுள்ளார். மேலும் “நாங்கள் அந்தக் கிழமை இதழைத் (நவயுகம்) தொடங்கிய நேரம் காங்கிரஸ் கட்சி தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று வீர உலா வந்து கொண்டிருந்த நேரம். நாங்கள் சேர்ந்திருந்த நீதிக் கட்சியோ பிழைத்திருக்கிறதா இல்லையா என்று ஐயுறத்தக்க நிலைக்கு ஆட்பட்டு தத்தளித்த நேரம்” என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆக, அவர் துவங்கிய பொது வாழ்வு என்பது கட்சி அரசியல் வாழ்வு! தேர்தலில் போட்டியிடும் பொது வாழ்வு தான். ஆக, அவரது பொது வாழ்வு தொடக்கம் சுயமரியாதை இயக்கத் திலிருந்து அல்ல, நீதிக்கட்சி யிலிருந்து தான்.

நீதிக்கட்சியின் ஏடான ‘விடுதலை’ பெரியார் பொறுப்புக்கு விடப்பட்டு, அது தினசரி ஆக்கப்பட்டு சென்னையிலிருந்து ஈரோட்டுக்கு மாற்றப்பட்டது. அந்த சமயத்தில் தான் 1937-இல் ‘விடுதலை’ யில் பணியாற்ற அண்ணா ஈரோடு போய்ச் சேர்ந்தார். ‘குடிஅரசு’ம் அங்கு நடந்து வந்தது. அதற்கும் துணை நின்றார் அண்ணா.

பார்ப்பனர்களை உறுப்பினர்களாக சேர்ப்ப தில்லை என்ற கொள்கையோடிருந்த தி.மு.க. பார்ப்பனர்களையும் சேர்த்துக் கொள்வது என்றும் முன்னரே முடிவெடுத்திருந்தது.

அதன் அடிப்படையில் கழகத்தின் சட்ட திட்டக் குழுவில் ஈ.வெ.கி. சம்பத், மு.கருணாநிதி, இரா. செழியன் ஆகிய மூவரோடு, பார்ப்பன வழக்குரை ஞரான வி.பி.ராமனையும் இணைத்துக் கொண்டது தி.மு.க.வின் செயற்குழு. (அவரது மகன் பி.எஸ். இராமன் தான் தி.மு.க.வின் 2006-2011 ஆட்சியின் போது அரசு தலைமை வழக்குரைஞராக நியமிக்கப் பட்டிருந்தார்.) அப்போது பெரியார்,

> “சாதி ஒழிய வேண்டுமெனில் சட்டசபைக்குப் போய் பயனில்லை; கண்ணீர்த் துளிகளை (தி.மு.க.வை)க் கேட்கின்றேன், திராவிட நாட்டுக் கொள்கை என்ன? சட்டசபை போகக் கூடாது என்பது தானே! நீங்களும் இதற்கு முன் சட்டசபை போக வேண்டும் என்று கூறினவர்களைப் பார்த்து பித்தலாட்டம் செய்யப் போகிறார்கள்; வயிறு வளர்க்கப் போகிறார்கள் என்று ஊர் ஊராகப் பிரச்சாரம் செய்தவர்கள் தானே? அப்படிப் பிரச்சாரம் செய்துவிட்டு இப்போது ‘முன்னேற்றம்’ என்று பெயர் வைத்துக் கொண்டு இம்மாதிரி மக்களை ஏமாற்றினால் இது முன்னேற்றமா? பின்னேற்றமா?”

(விடுதலை 12.09.1956) என்று கேட்டார்.

தேர்தலில் போட்டியிடுவதாக முடிவு செய்த பின்னர் தி.மு.க.வின் போக்கில் ஏற்பட்ட மாற்றங் களையும் சுட்டிக் காட்டி சாடி வந்தார் பெரியார். பார்ப்பனர்கள் என்பதைத் தங்கள் இதழ்களில் ’பிரா மணர்கள்’ என்று எழுதத் தொடங்கியிருந்தது தி.மு.க.

> “சட்டசபைக்குப் போக வேண்டுமானால் பார்ப்பானுடைய தயவு வேண்டும். தான் எழுதும் பத்திரிக்கையில் ‘பிராமணர்கள்’ என்று தான் எழுத இயலும். இதைத் தானே காண்கிறோம். இந்த ஈனப்பிறவிகளால் எப்படி நமக்குள்ள உரிமைகளைத் துணிந்து கேட்கவோ, எழுதவோ முடியும்?

(விடுதலை 05.05.1957) என்ற கேள்வியை எழுப்பினார் பெரியார்.

தான் செல்லுகிற இடங்களில் எல்லாம் பொது மக்களிடம் தொடர்ந்து ‘பார்ப்பானை’ பிராமணன் என்று அழையாதீர்கள் என்ற வேண்டுகோளை வைத்து வந்தவர் பெரியார்.

> “உங்களுக்கு உறுதியாக இறுதியாக ஒன்றைக் கூறுகிறேன்; மறந்தும் உங்கள் வாயில் ‘பிராமணன்’ என்று வரக் கூடாது; ‘பார்ப்பான்’ என்று கூறுங்கள். கண்டிப்பாக பிராமணன் என்று கூறக் கூடாது. கண்ணீர்த் துளிகள் (தி.மு.க.) ‘பிராமணன்’ என்பதைத் தவிர வேறு வார்த்தையை உபயோகிக்க மாட்டார்கள்” (விடுதலை 30.06.1957)
>
> “கண்ணீர்த் துளிகள் (தி.மு.க.) நாடு பிரிய வேண்டும் என்று சொல்லுகின்றான் என்றால் அது புரட்டு. எலெக்ஷனுக்கு நிற்கும் போது தேர்தல் விஞ்ஞானம் (அறிக்கை) – எலெக்ஷன் மேனி பெஸ்டோ போட்டான். அதில் நாடு பிரிய வேண்டும் என்ற பேச்சே இல்லை. இராஜாஜி சொன்னதைத் தான் சொன்னான்.”
> (விடுதலை 27.10.1957)
>
> “கண்ணீர்த் துளிகள் பார்ப்பானைப் பற்றி சாமியைப் பற்றி மூச்சு விடுகிறார்களா? பார்ப்பான் தயவில் ஓட்டுப் பிச்சை பெற்றுப் பதவிக்குப் போக வேண்டும் என்றே கட்சி வைத்துக் கொண்டிருக்கிறார்கள்”
> (விடுதலை 07.01.1959)
>
> “இந்தக் கண்ணீர்த் துளிகள் கட்சியையே எடுத்துக் கொள்ளுங்கள்! இராவணனுக்கு எதிராக இராமன் காலடியில் எப்படி விபீடணன் விழுந்தானோ அது போல் இந்தக் கண்ணீர்த் துளிகள் பார்ப்பானின் அடிமை களாக இருக்கிறார்கள். திராவிடர் கழகம் என்றாலே பார்ப்பான் வாசனை இருக்கக் கூடாது.
>
> பெயர் தான் திராவிட முன்னேற்றக் கழகம். பெயர் வைத்துக் கொண்டார்களே தவிர, மற்றபடி பார்ப்பானிடத்தில் பூரணமாக அய்க்கிய மாகி விட்டார்கள். இன்றைக்குக் கண்ணீர்த் துளிகள் கட்சியின் வழிகாட்டியே பார்ப்பான் (இராஜாஜி) தான். அந்தக் கட்சிக்குப் பொதுச் செயலாளராக ஒரு பார்ப்பானைத் தான் கொண்டு வரப் போகிறார்கள். எங்களுக்குப் பயந்து கொண்டு வரலாமா? வேண்டாமா? என்று இருக்கிறார்கள்.”
> (விடுதலை 28.09.1959)
>
> “இந்தக் கண்ணீர்த் துளிகள் உங்களிடம் வந்து நாங்களும் திராவிடர் கழகத்தினர் தான்; முன்னேற்றம் அவ்வளவு தான் என்கிறார்களே! என்ன முன்னேற் றம்? நான் பார்ப்பானைச் சேர்க்கக் கூடாது என்றால் நீ அவனைக் கட்சியில் சேர்த்துக் கொண்டாய்! தேர்தல் கூடாது என்று நான் கூறினால் நீ சட்ட சபைக்கு நிற்கிறாய்! இது சுதந்திரம் இல்லை, ஜனநாயகம் இல்லை என்று நான் கூறினால் நீ இல்லை, இல்லை, இது ஜனநாயகம் தான் என்று கூறி ஓட்டுக் கேட்கிறாய்! இதுவா முன்னேற்றம்!”
> (விடுதலை 28.10.1959)

(4 ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION 17.09.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# ‘திராவிட நாடு’ கேட்ட தி.மு.க.வை கண்டித்தவர் பெரியார்!

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

1938-ல் தமிழ்நாடு விடுதலை பற்றிப் பேசிய பெரியார், அப்போது இருந்த சென்னை மாகாணம் தமிழ்நாடு முழுவதும், தெலுங்குப் பகுதி 7 மாவட்டங்கள், கன்னடப் பகுதி 1 மாவட்டம், மலையாளப் பகுதி 1 மாவட்டம் ஆகியவற்றைக் கொண்டதாகும். இப்போதைய ஆந்திர, கன்னட, கேரள மாநிலங்களில் பிற பகுதிகள் அப்போது கொச்சி, திருவாங்கூர், மைசூர் அரசர்கள், அய்தராபாத் நிஜாம் ஆகியோரின் ஆட்சியில் இருந்தன. பெரியாரும் அதுவரை சென்னை மாகாணம் என்கிற அரசியல் நிலப்பரப்பில் 1956 வரை இருந்து வந்த தெலுங்கு, மலையாள, கன்னடர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு கருதி ‘திராவிட நாடு திராவிடருக்கே’ என்று மாற்றியமைத்துக் கொண்டார்.

மேலும் பெரியார் திராவிட நாடு என்று குறிப்பிட்டது தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா என்ற நான்கு மாநிலங்களும் சேர்ந்த பகுதியை அல்ல; அரசியல் அலகான (Political Unit) சென்னை மாகாணத்தைத்தான் என்கிற போதிலும், பெரியாரைப் பொறுத்த வரை பார்ப்பன-பனியா நலனுக்காக அமைக்கப்பட்டுள்ள அரசியல் கட்டமைப்பிலிருந்து தனியாகப் பிரிந்த தனித் தமிழ்நாடே அவரது இலட்சியமாக விளங்கியது.

1953-ல் சென்னை மாகாணத்திலிருந்த தெலுங்கு மாவட்டங்களை மட்டும் தனியாகப் பிரித்து, நவம்பர் முதல் நாள் ஆந்திர மாநிலம் அமைக்கப்பட்டது. 1956 நவம்பர் முதல் நாளில், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு என மொழி வழி மாநிலங்கள் அமைக்கப்பட்டன. அதன் பின்னர் கோரிக்கையை “தமிழ்நாடு தமிழருக்கே” என திருத்தி அமைத்துக் கொண்டார். அக்கோரிக்கையை தனது இறுதி நாள் வரை உறுதியாகப் பரப்பியும் வந்தார். தனித் தமிழ்நாடு கோரிக்கையை வலியுறுத்தி, 1960 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீங்கலான தேசப்பட எரிப்புப் போராட்டத்தை அறிவித்திருந்தார். தானும், தன் அமைப்பும் அப்போராட்டத்தில் கலந்து கொள்வதாக அப்போது ‘நாம் தமிழர்’ என்ற அமைப்பை நடத்தி வந்த ஆதித்தனாரும் (‘தினத்தந்தி’ இதழ் உரிமையாளர்) அறிவித்தார்.

அப்போராட்டத்தை விளக்கி ஈரோட்டில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் ஆற்றிய உரை, தி.மு.க. மீதும் அவர்களது திராவிட நாடு கோரிக்கை பற்றிய விமர்சனமாக மட்டுமன்றி, இன்று ‘திராவிடர்’ என்பது குறித்த எந்த புரிதலுமின்றி குதர்க்கம் பேசித் திரிகிற சில ’திடீர்’ தமிழ்த் தேசியர்களுக்கும் பெரியாரின் நிலைப்பாட்டைத் தெளிவாக்கும் ஒன்றாகும்.

‘திராவிடர்’ என்ற சொல்லை மட்டும் வைத்துக் கொண்டு தெலுங்கர், கன்னடர், மலையாளிகள் ஆதிக்கத்தை, தமிழ்நாட்டில் உண்டாக்கி வைத்திருப்பதாகக் கூறும் ‘தூய’ தமிழ் தேசியர்களுக்கும் விளக்கமாக அமையும்.

- அப்படி என்ன தான் கூறுகிறார் பெரியார்? பார்ப்போம். “முன்பு திராவிட நாடு கேட்டார். இப்போது அதை விட்டு விட்டார். தமிழ்நாடு கேட்கிறார்” என்று சிலர் சொல்லுவார்கள். இது பெரும்பாலும் குறும்புக்காகக் கேட்கப்படுகிற கேள்வியாகும்.
- தமிழ்நாடு என்பதும் திராவிட நாடு தான். முன்பு தெலுங்கன், மலையாளி, கன்னடியன் எல்லாம் நம்முடன் சேர்ந்து இருந்தான். அவர்கள் எல்லோரும் ஒப்புக் கொள்ளும்படி ‘திராவிட நாடு’ என்று சொன்னோம். இப்போது அவனவன் பிரிந்து அவனவன் தனித் தனி மாநிலம் பெற்று இருக்கின்றான். ‘தமிழ்நாடு’ என்று சொல்லும்படி இப்போது தமிழகம் இருக்கிறது. ஆகவே ‘தமிழ்நாடு’ என்று சொல்லுகிறோம்.
- இப்போது திராவிட நாடுகளான நான்கு நாடுகளும் சேர்ந்து தான் ஆக வேண்டுமென்றால் அவர்களுக்குப் பிரிய வேண்டும் என்ற உணர்ச்சி உண்டா? ஏற்பட்டிருக்கிறதா? என்பது ஒருபுறம் இருக்கட்டும். அப்படியே திராவிட நாடு பிரிந்தால் நமக்கென்ன இலாபம்?
- இன்று எப்படி தமிழ்நாடு பார்லிமெண்டில் மற்ற 14 நாடுகளுக்கும் அடிமையாக இருக்கிறதோ, அதே போல், நாளை மற்ற 3 நாடுகளுக்கும் அடிமையாகத்தான் இருக்க வேண்டி வரும்.
- தமிழ்நாடு 3 கோடி ஜனத் தொகை; மலையாளி ஒன்றே கால் கோடி; கன்னடியன் 2 கோடி; ஆந்திராக்காரன் மூன்றரைக் கோடி. இவர்கள் ஒன்று சேர்ந்தால் என்ன நிலை? மற்றவர்கள் ஆறே முக்கால் கோடி, தமிழன் மூன்று கோடி. நாம் மற்றவர்களுக்கு மைனாரிட்டியாகத் தானே இருப்போம்?
- அவர்கள் மூன்று பேரும் சேர்ந்து பார்லிமெண்ட் மெம்பர்கள் 87 பேர். நம் தமிழ்நாட்டுக்கு 41 பேர் தான். அதே மாதிரி சட்டசபை மெம்பர்கள் அவர்கள் மூன்று பேரும் சேர்ந்தால் சுமார் 600 பேர்கள். நமக்கு 207 பேர் தான்.
- மற்றபடி, கடவுள், மத, சாஸ்திர, இழிவு ஒழிப்பு உணர்ச்சியோ, இந்தியை எதிர்க்கும் உணர்ச்சியோ, அந்த (ஆந்திரம், கேரளம், கன்னடம்) நாட்டுக்காரர் களுக்குக் கிடையாது. அப்புறம் எதற்காக ஒரே இராஜ்ஜியம் (நாடு)? எதற்காகக் கூட்டு வேணும்?
- ஆகவே தான், சும்மா திராவிட நாடு என்று சொல்லுவது நம்முடைய காரியத்தைக் கெடுக்கத் தான் பயன்படுமே தவிர, வேறு எதற்கும் பயன்படாது என்பதை அறிய வேண்டும்.

– 22.05.1960 ஈரோடு சொற்பொழிவு. (விடுதலை 24.05.1960)

அதே நேரத்தில் “ஓட்டுக்காரனே ! உணர்ந்து பார் !” என்ற தலைப்பில் ஓர் அறிக்கையைப் பெரியார் எழுதுகிறார். அதில், “நாடு பிரிய வேண்டியது தான்; அதை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம்; அதற்காகத் தான் சட்டசபைக்குப் போக வேண்டுமென விரும்புகிறோம் என்று சொல்லுகிற சட்டசபை ‘சர்வரோக நிவாரணி’(அனைத்து நோய்களையும் தீர்க்கும் மருந்து)க்காரர்களைப் பார்த்து வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்வதாவது” என்று தொடங்கி, “நீ சத்தியம் செய்து ஏற்றுக் கொண்டுள்ள அரசியல் சட்டப்படி சட்டமன்றம், நாடாளுமன்றத்தில் பிரிவினையைப் பற்றிப் பேச முடியுமா? ஒட்டுமொத்த தமிழ்நாடே ஆதரித்தாலும் நாடாளுமன்றத்தில் இதற்கான தீர்மானத்தை நிறைவேற்ற போதிய பலம் உண்டா?” என்றெல்லாம் கேள்வி எழுப்பிவிட்டு “நாடு பிரிவினையில் அவசரமும் அக்கறையும் உங்களுக்கு இருக்குமானால் உங்கள் ‘இலட்சியமும் மூச்சும்’ அதுவே தான் என்றால் என்ன செய்ய வேண்டும்! சத்தியப் பிரமாணமும், சபாநாயகர் தயவினால் சண்டப் பிரசண்டமும் செய்துவிட்டால் போதுமா? நாடு பிரிந்து விடுமா?” என்பது போன்ற கிடுக்குப் பிடி கேள்விகளைத் தொடர்ச்சியாக எழுப்பி தி.மு.க.வைத் தாக்கி வந்த காலம் தான் 1961.

அது மட்டுமல்ல. பெரியார் பறையர் இனப் பெண்கள் ஜாக்கெட் போடுவதைக் கூட விரும்பவில்லை என்று கலைஞர் கருணாநிதி தனது ‘முரசொலி பொங்கல் மலரில்’ கார்ட்டூன் போட்டு பழி சுமத்தும் அளவுக்குப் போனார்.

இதற்கான பதிலை, பெரியார் தி.மு.க. நிகழ்ச்சி ஒன்றிலேயே, பின்நாளில் கூறினார் என்பது தனிச் செய்தி. ( இதைப் பெட்டி செய்தியில் காணலாம் )

இவை தாம் 1961 ஆம் ஆண்டில் நிலவி வந்த அரசியல் சூழல்; தி.க. தி.மு.க. உறவு (பகைமை)ச் சூழல்.

## பொய் பிரச்சாரம்: பெரியார் தந்த மறுப்பு





- பறையன் என்று சொல்லக்கூடாது என்று ஆரம்பித்தவன் நான். காந்தியார் தீண்டாதவர்களுக்குத் தனியாகப் பள்ளிக் கூடம், தனியாகக் கோயில், தனியாகக் கிணறு வெட்டுவதற்காகக் காந்தி திலக் நிதியிலிருந்து ரூ.55,000 அனுப்பினார். அப்போது நான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவன். நான் இதை இதற்காக செலவிடாமல் அப்படியே வைத்துவிட்டேன். மற்ற மாகாணக் காரர்கள் எல்லாம் செலவழித்து தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனியாக கேணி, கோயில், பள்ளிக்கூடம் கட்டினார்கள். நான் காந்தியாருக்கு எழுதினேன். “நாம் அவர்களுக்கு இவை எல்லாம் தனியாகச் செய்து கொடுப்பதால் ஒருக்காலும் தீண்டாமை ஒழியாது. அதற்குப் பதில் பறையன் கோயில், பறையன் பள்ளிக்கூடம் என்று சொல்லி மக்கள் அதையும் ஒதுக்கி வைத்துவிடுவார்கள். இதை நான் விரும்பவில்லை. நம் மக்கள் தண்ணீர் எடுக்கும் கிணறுகளில் அவர்களும் எடுக்க வேண்டும். நம்மக்கள் படிக்கிற பள்ளிகளில் அவர்களையும் படிக்க அனுமதிக்க வேண்டும். நம்மக்கள் போகிற கோயில்களுக்கு அவர்களும் போக உரிமை வழங்க வேண்டும்” என்று எழுதினேன். அதற்கு அவர் அதுபோல செய்யமுடியாது என்று சொல்லி விட்டார்.
- நான் பறையன் என்று கேவலமாகச் சொன்னதாகத் தாழ்த்தப்பட்ட மக்களிடம் சொல்லியிருக்கின்றார்கள். நான் பலதடவை இந்தச் சொல்லைச் சொன்னாலும் அதை ஒழிப்பதற்காக சொன்னதுதான். எலெக்ஷன் நேரத்திலே இப்படியெல்லாம் செய்வது சாதாரணம். எலெக்ஷன்போது “ராமசாமி நாயக்கர் பறைச்சி எல்லாம் ரவிக்கைப் போட்டுக் கொண்டார்கள் என்று தாழ்த்தப்பட்ட பெண்களைக் கேவலமாக சொன்னார்” என்று விளம்பர நோட்டீஸ் களெல்லாம் போட்டு தாழ்த்தப்பட்ட மக்களே அவர் ஆதரிக்கிற கட்சிக்கு ஓட்டு போடாதீர் என்று வால் போஸ்டர்கள் ஒட்டி இருக்கின்றார்கள். அதைக் கண்டு சிலர் என்னிடம் வந்து நீ எப்படிச் சொல்லலாம் என்று கேட்டார்கள். நான் சொன்னது உண்மைதான். நான் தாழ்த்தப்பட்ட பெண்கள் இதற்கு முன் ரவிக்கைப் போடக் கூடாது, போட்டால் துணியே போடக்கூடாது, அப்படி இருந்த சமுதாயம் காலமாறுபாட்டால் எப்படி ஆகி இருக்கின்றது. இன்றைக்கு ரவிக்கையில்லாமல் பார்க்கமுடியவில்லை என்று சொன்னேன். இதைக் கொண்டு அந்த இனமக்களை எனக்கு விரோதமாகத் தூண்டவும் நான் ஆதரிக்கின்ற கட்சிக்கு ஓட்டுப் போடாமல் செய்வதற்காகக் கிளப்பி விடப்பட்டதே ஆகும் என்பதை விளக்கியதும் அவர்கள் புரிந்துகொண்டனர்.”




–11.12.1968 அன்று தி.மு.க. மேயர் வேலூர் நாராயணனுக்கு நடந்த பாராட்டு விழாவில், சென்னை– அயன்புரத்தில் பெரியார் ஆற்றிய சொற்பொழிவு (‘விடுதலை’ 15.12.1968)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 18th September 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | செப்டம்பர் 25, 2014 | புரட்சி 13 | முழக்கம் 37 | விலை: ரூ.3.00


# கொள்கைப் பரப்பும் பெரியார் விழாக்கள்!

***கழகத்தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்ற பெரியார் கொள்கைப் பரப்பும் நிகழ்ச்சிகள், விழாக்கள் பற்றிய தொகுப்பு.***

அறிவுலக ஆசான் தந்தை பெரியாரின் 136-வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் 20-09-2014 அன்று சென்னை மந்தைவெளி இரயில் நிலையம் அருகில் மாலை 7 மணியளவில் இரா. மாரிமுத்து தலைமையில் நடைபெற்றது. முதல் நிகழ்வாக பள்ளத்தூர் நாவலரசன் கலைக்குழுவினரின் ஜாதி ஒழிப்பு, பகுத்தறிவு பாடல்கள் பாடப்பட்டன. தி. இராவணன், ஆ. சிவா, க. சுகுமாரன் ஆகிய தோழர்கள் முன்னிலை வகித்தனர். ம. மனோகர் வரவேற்புரை ஆற்றினார்.




பெரியாரியலின் பல்வேறு கூறுகளைப் பற்றியும், மக்களை மானமும் அறிவும் உள்ளவர்களாக மாற்ற அயராது தன் வாழ்நாள் முழுவதும் அய்யா உழைத்தது பற்றியும் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழக வழக்கறிஞர் துரை அருண், உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திருமூர்த்தி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். மேலும் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசிகுமரன், சென்னை மாவட்டத் தலைவர் ஜான் மண்டேலா உரையாற்றினர். பெரியாரின் 136-வது பிறந்தநாளை ஒட்டி 14-09-2014 அன்று காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை சென்மேரிஸ் சாலை குருபுரம் விளையாட்டுத் திடலில் நடந்த 2ஆம் ஆண்டு கால்பந்து போட்டியை மா.சுப்பிரமணியன் (முன்னாள் சென்னை மாநகர மேயர்) துவக்கி வைத்தார். அப்போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு தலைவர் கொளத்தூர் மணி பரிசு வழங்கினார். இரு அணிகளுக்கும் கோப்பைகளும் , முதல் இடத்தைப் பிடித்த அணிக்கு ரூ.10,000 பரிசுத் தொகையும் இரண்டாம் இடத்தைப் பிடித்த அணிக்கு ரூ.7,000 பரிசுத் தொகையும், வழங்கப்பட்டது. ஜா. உமாபதி நன்றியுரை ஆற்றினார்.

## குருவரெட்டியூரில் கலை நிகழ்ச்சிகளுடன் நடந்த பெரியார் பிறந்த நாள் விழா

ஈரோடு மாவட்டம் குருவ ரெட்டியூர் பெரியார் திடலில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் பெரியார் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் 17.09.14 அன்று மாலை 6 மணிக்கு துவங்கியது. முன்னதாக ஈரோடு மண்டல செயலாளர் இராம. இளங்கோவன் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்த பின் தோழர்கள் ஊர்வலமாக பொதுக் கூட்ட மேடையை வந்தடைந்தனர். சுயமரியாதை கலை பண்பாட்டுக் குழுவினரின் ஜாதி ஒழிப்பு, அகமணமுறை யின் கேடுகள் குறித்தான விழிப் புணர்வு நாடகங்கள் நடை பெற்றன. புதுகை பூபாளம் குழுவினரின் கலை நிகழ்ச்சி மிக சிறப்பாக நடைபெற்றது.



இப்பொதுக் கூட்டத்திற்கு கு.வேல் முருகன் வரவேற்புரையாற்ற, கா. நாத்திக ஜோதி (மாவட்ட தலைவர்) தலைமை தாங்க, கோபி வேலுச்சாமி முன்னிலை வகிக்க, க. அர்ச்சுணன் முன்னிலை வகிக்க, கொளத்தூர் மணி, (தலைவர் திராவிடர் விடுதலைக் கழகம்), இராம இளங்கோவன் (ஈரோடு மண்டல செயலாளர்) உரையாற்றினர். சோ. திலீபன் நன்றி கூறினார்.

## தருமபுரியில் ஜாதி மறுப்பு மணவிழா

ஜா‘தீ’ காதலைக் கொன்ற தருமபுரி மண்ணில், மக்கள் சனநாயக குடியரசு கட்சி தோழர்கள் இராஜலட்சுமி-அண்ணாமலை (எ) முகிலன் ஆகியோரின் சுதந்திரத் தேர்வு, ஜாதி மறுப்பு (வன்னியர் - தாழ்த்தப்பட்டவர்) சடங்குகள், தாலி அடிமைச் சின்னம் இல்லாத வாழ்க்கை இணையேற்பு விழா 21-09-2014 அன்று பிற்பகல் 2 மணியளவில் மக்கள் சனநாயக குடியரசு கட்சியின் பொதுச் செயலாளர் பழனி தலைமையில் நடைபெற்றது. அந்நிகழ்வில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மக்கள் சனநாயக குடியரசு கட்சி தலைவர் துரைசிங்கவேல், தமிழக மக்கள் புரட்சிக் கழகப் பொதுச் செயலாளர் அரங்க குணசேகரன், தமிழ்த் தேச நடுவம் வழக்குரைஞர் பாவேந்தன், மக்கள் ஜனநாயக இளைஞர் அணி சித்தானந்தம், ஜாதி ஒழிப்பு விடுதலை முன்னணி கருணாநிதி ஆகியோர் வாழ்விணையர்களை வாழ்த்தினர்.

## பெரியாரும் தமிழ்த் தேசியமும்: சென்னையில் கருத்தரங்கம்

20-9-2014 அன்று சென்னை எழும்பூரில் மாலை 4.30 மணியளவில், இளந் தமிழகம் இயக்கம் சார்பாக, பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் 136ஆவது பிறந்த நாள் நிகழ்வாக “பெரியாரும் தமிழ்த் தேசியமும்” என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இளந்தமிழகம் இயக்கத் தோழர் நாசர் வரவேற்புரை ஆற்றினார். அக்கருத்தரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளர் தியாகு, மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் தமிழேந்தி, இளந்தமிழகம் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் செந்தில் ஆகியோர் கருத்துரை ஆற்றினர். பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## ஈரோட்டில் இடஒதுக்கீடு கருத்தரங்கம்

ஈரோடு மண்டல தமிழ்நாடு மாணவர் கழகம் ஏற்பாடு செய்திருந்த இடஒதுக்கீடு பற்றிய விவாத நிகழ்வு ஹோட்டல் ரீஜென்சியில் மாவட்ட மாணவர் கழகப் பொறுப்பாளர் மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இவ்விவாத நிகழ்வில் இட ஒதுக்கீட்டின் வரலாற்றை மாணவர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் தி.வி.க மாநில அமைப்புச் செயலாளர் தாமரைக் கண்ணன், ஈரோடு மண்டலச் செயலாளர் இராம. இளங்கோவன், பொள்ளாச்சி மாவட்டத் தலைவர் விஜய ராகவன் ஆகியோர் விளக்கமளித்தனர் . மேலும் மாணவர்களின் இட ஒதுக்கீடு பற்றிய கேள்விகளுக்கு பதிலளித்தனர். இவ்விவாத நிகழ்வில் கரூர். ஈரோடு நாமக்கல் மற்றும் மேட்டூர் பகுதியை சார்ந்த 60 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் நாமக்கல் மாவட்ட மாணவர் கழகப் பொறுப்பாளர் பிரகாஷ் நன்றி கூறினார்.

**செய்தி : யாழ் மொழி**

### அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜைகளை நிறுத்தக் கோரி

## செப்.29இல் ஆர்ப்பாட்டம்!

அரசு அலுவலகங்களில் மதச் சடங்குகள் - பூஜைகள் நடத்துவதை நிறுத்தக் கோரி அரசாணைகள் இருந்தும் அதையும் மீறி பூஜைகள் நடக்கின்றன.

இந்தியா - ஒரு மதச் சார்பற்ற நாடு. பல்வேறு மதத்தினரும் பணிபுரியும் அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜைகள் நடக்கக் கூடாது.

பூஜைகள் - சடங்குகள் - அவரவர் வீடுகளுக்குள் நடத்திக் கொண்டால் அது அவர்களின் உரிமை. அரசு அலுவலகங்களில் அதற்கு இடமில்லை.

குறிப்பாக, ஆயுத பூஜை காவல் நிலையங்களில் பெரிய கொண்டாட்டமாக நடைபெறுகிறது. இதை அனுமதிக்கக் கூடாது என்று உயர்நீதிமன்றத் தீர்ப்புகள் இருந்தும் அவை மீறப்படுகின்றன.

எனவே, நீதிமன்றத் தீர்ப்புகள் அரசாணைகளுக்கு எதிராக அரசு அலுவலகங்கள் செயல்படக் கூடாது என்பதை வலியுறுத்தி -

செப்டம்பர் 29ஆம் நாள் கழகத் தோழர்கள் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**– தலைமைக் கழகம்**
**திராவிடர் விடுதலைக் கழகம்**

**தலையங்கம்**

# தேசிய சுயநிர்ணய உரிமைக்கு கிடைத்த வெற்றி

ஸ்காட்லாந்து நாட்டில் நடத்திய வாக்கெடுப்பில் (செப். 18, 2014) அந்நாடு, பிரிட்டனுடன் இணைந்து நிற்பதற்கு ஆதரவாக 55 சதவீத மக்களும், தனி நாடாக வேண்டும் என்று 45 சதவீத மக்களும் வாக்களித்துள்ளனர். வாக்கெடுப்பு முறையை ஏற்றுக் கொண்ட பிறகு, அதில் பெரும்பான்மை மக்களின் முடிவே இறுதியானது. சில ஏடுகள் 'பிரிவினை வாதம்' தோற்றுப் போய்விட்டது என்று கொச்சைப்படுத்துகின்றன. உலகில் பல்வேறு தேசிய இனங்கள் சுயநிர்ணய உரிமைக்காக நடத்தும் போராட்டங்களுடன் முடிச்சுப் போட்டு, இனி எங்கும் பிரிவினையே கூடாது என்று தங்கள் நாட்டாமை தீர்ப்புகளை வழங்குகிறார்கள்.

உண்மையில், ஸ்காட்லாந்தில் நடந்த வாக்கெடுப்பு "தேசிய சுயநிர்ணய உரிமை" என்ற கொள்கைக்குக் கிடைத்துள்ள வெற்றி. தங்களுக்கான சுயநிர்ணய உரிமையை 'ஸ்காட்லாந்து' மக்கள், முறையான வாக்கெடுப்பு வழியாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள். முடிவு, பிரிந்து செல்வதாகவும் இருக்கலாம் அல்லது இணைந்திருப்பதாகவும் இருக்கலாம்; பிரச்சினை அதுவல்ல. முடிவெடுக்கும் உரிமை மக்களுக்கே உண்டு!

இதில் முக்கியமாக ஒரு கருத்தை சுட்ட வேண்டும். 650 உறுப்பினர்களைக் கொண்ட பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் ஸ்காட்லாந்து உறுப்பினர்கள் 59 பேர் மட்டுமே. இந்தப் பின்னணியில் பிரிட்டிஷ் பிரதமர், அமைச்சர்கள் ஸ்காட்லாந்து பிரிந்து செல்லக்கூடாது என்று வாக்கெடுப்பின்போது வலியுறுத்தி இயக்கம் நடத்தினர். ஸ்காட்லாந்து மக்களுக்கான தேசிய கட்சி பிரிந்து போக வேண்டும் என்ற கருத்தை அழுத்தமாக முன் வைத்தது. இவ்வளவுக்குப் பிறகு 55 சதவீதம் பேர் பிரிட்டிஷ் ஆட்சியின் கருத்துகளையே ஆதரித்துள்ளனர். வாக்கெடுப்பில் முறைகேடுகள் தலைதூக்கியிருந்தாலோ பிரிட்டன் பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்தி ஸ்காட்லாந்து மக்களை மிரட்டி, அச்சுறுத்தி பணிய வைக்க விரும்பியிருந்தாலோ இப்படி ஒரு முடிவுக்கு அந்நாட்டு மக்கள் நிச்சயம் வந்திருக்க மாட்டார்கள்.

இப்போதும்கூட 45 சதவீத மக்கள் ஸ்காட்லாந்து தனி நாடாவதையே வலியுறுத்தியிருக்கிறார்கள். தங்களது இனத்தின் தனித்துவம்; வளர்ச்சிக்கான தடைகள்; அதிகாரம் மிக்க பதவிகளில் புறக்கணிப்பு போன்ற நியாயமான பிரச்சினைகளை அவர்கள் முன் வைத்தார்கள். வாக்கெடுப்பு முடிவுக்குப் பிறகு ஸ்காட்லாந்து மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்துக்கு பிரிட்டன் தள்ளப்பட்டிருக்கிறது.

கி.பி.1707 இல்தான் அகண்ட பிரிட்டன் உருவானது. அப்போதுதான் இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, வேல்ஸ் ஆகிய மூன்று நாடுகளும் இணைந்தன. அதுவரை இங்கிலாந்தில் குறுநில மன்னர்கள் ஆட்சிகளும், ஸ்காட்லாந்தில் தனித் தனி மன்னர்கள் ஆட்சிகளுமே நடந்தன. ஸ்காட்லாந்து மக்கள் தங்களுக்காக ஒரு வாக்கெடுப்பு நடத்தி, சுயநிர்ணய உரிமையை உறுதி செய்து கொள்ளும் சட்டத்துக்கு வழியமைத்துத் தந்தது, 1998ஆம் ஆண்டு பிரிட்டனின் டோனிபிளேர் அரசாங்கம்தான். அந்த ஆண்டில் 'ஸ்காட்லாந்து சட்டம்' உருவானது.

அதன்படி ஸ்காட்லாந்துக்கு நாடாளுமன்றத்தை நிறுவிக் கொள்ளவும், சுயநர்ணய உரிமைக்கான வாக்கெடுப்பு நடத்தவும் உரிமை கிடைத்தது. 2011 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஸ்காட்லாந்து தேசிய கட்சி, இந்த வாக்கெடுப்பு கோரிக்கையை முன்வைத்துதான் தேர்தலை சந்தித்தது. 2012 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் பிரதமராக பதவிக்கு வந்த டேவிட் கேமரோன், 'எடின்பர்க் ஒப்பந்தம்' வழியாக ஸ்காட்லாந்து நாடாளுமன்றத்துக்கு வழங்கப்பட்ட வாக்கெடுப்பு உரிமைக்கு ஏற்பு வாங்கினார். 2013 டிசம்பரில் பிரிட்டிஷ் அரசியாரின் ஒப்புதலும் கிடைத்தது. அதனடிப்படையில் தான் வாக்கெடுப்பு நடந்து முடிந்துள்ளது.

ஸ்காட்லாந்து மக்கள் ஒரு தனி தேசிய இனம் என்பதும், தங்களுக்கான 'சுயநிர்ணய உரிமையை' தேர்வு செய்து கொள்ளும் உரிமைக்குரியவர்கள் என்பதும், இந்த வாக்கெடுப்பு வழியாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. தங்களுக்கான உரிமைகளை உறுதி செய்யும் அதிகாரங்களுடன் தான் பிரிட்டனுடன் இணைந்திருக்க விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள்.

வாக்கெடுப்பு, 'வெளியக சுய நிர்ணய உரிமை' (External Self determination) என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே நடந்துள்ளது. ஸ்காட்லாந்து நாடாளுமன்றத்துக்கு தங்குதடையற்ற அதிகாரப் பகிர்வுகளுக்கும் பிரிட்டிஷ் நாட்டின் வளங்களை சமமாகப் பகிர்ந்து கொள்வதற்கும் இதன் வழியாக அரசு உறுதி செய்துள்ளது.

அத்துடன் பிரிட்டிஷ் அரசு தனது முடிவுகளைத் திணிப்பதோ நாட்டின் எல்லைகளில் குறுக்கிடுதலோ இயலாது என்பதையும் சுயநிர்ணய உரிமை உறுதி செய்துள்ளது.

ஜனநாயகப் பண்புகள் மற்றும் 'பன்முகத்துவம்' என்ற சமத்துவ அடிப்படையிலான சமூக அரசியல் உறவுகளுக்கு அண்மைக்காலத்தின் மிகச் சிறந்த உதாரணம் இந்த வாக்கெடுப்பு என்று கூறலாம். மேலைநாட்டு மனித உரிமையாளர்கள் இப்படித்தான் பெருமையுடன் கூறுகிறார்கள்.

மக்களின் மாண்பு, சமத்துவம் என்ற நவீன கருத்தியல்களின் உள்ளடக்கம் தான் 'தேசியம்' – 'தேச அரசு' – 'தேசிய சுயநிர்ணய உரிமை' என்பவைகளாகும். பெரும்பான்மையினர் மதம் மற்றும் பெரும்பான்மை மொழியை 'தேச பக்தி' பெயரில் வெறியூட்டி மக்கள் மீது திணிப்பது 'தேசியம்' அல்ல. அதேபோல் பேரரசர் காலத்தின் பெருமிதங்களுக்குள் மூழ்கி, ஜாதி அடையாளப் பெருமைகளில் மிதந்து, இனக் குழு வாதங்களை முன்வைத்து ஒடுக்கப்பட்ட மக்களை பிளவுபடுத்தும் வரையறைகளும்கூட இதே போன்றதுதான். அந்தப் பார்வை சமூகத்தைப் பின்னுக்கு இழுத்துச் சென்றுவிடும்.

ஸ்காட்லாந்து வாக்கெடுப்பை ஈழத் தமிழர் பிரச்சினையோடு நாம் பொருத்திப் பார்க்க வேண்டும்.

சிங்கள பேரினவாத ஆட்சி பிரிட்டிஷ் ஆட்சியைப்போல், ஏன், ஒரு வாக்கெடுப்பை நடத்த முன்வரவில்லை என்ற நியாயமான கேள்விக்கு என்ன பதில்?

இதேபோல் காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக வாக்கெடுப்பு நடத்துவோம் என அய்.நா.வில் உறுதி கூறிய இந்திய ஆட்சி அதை காற்றில் பறக்க விட்டதையும் சுட்டிக்காட்டுகிறோம்.

ஸ்காட்லாந்து நாடாளுமன்றத்தின் அதிகார உரிமைகளில் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் தலையிடாது. இது சட்டத்துக்கு அப்பால், பிரிட்டிஷ் அரசு ஏற்றுக் கொண்டுள்ள நடைமுறை செயல்பாடு (Swell conversion); அதை பிரிட்டன் செயல்படுத்துகிறது. அதே நேரத்தில் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்துக்கு ஸ்காட்லாந்தில் தலையிடும் உரிமை சட்டரீதியாக இருக்கவே செய்கிறது. ஸ்காட்லாந்து சட்டம் 1998இன் 28(7)ஆவது பிரிவு இதை உறுதி செய்கிறது.

ஆனாலும், சட்டங்களைவிட ஏற்றுக் கொண்ட நடைமுறைகளையே பெரிதும் மதிக்கும் உயரிய ஜனநாயகப் பண்புகள் அங்கே நடைபோடுகின்றன. பிரிட்டிஷ் ஆட்சியின் முதலாளித்துவ கொள்கைகளை நாம் ஏற்கவில்லை என்றாலும் இந்த உயரிய மாண்புகளை பாராட்டத்தான் வேண்டும்.

இந்தியாவின் 'பார்ப்பன நாயகத்தில்' இந்த மரபுகளையும் விழுமியங்களையும் கற்பனைகளில்கூட நினைத்துப் பார்க்க முடியுமா?

## வினாக்கள்... விடைகள்...!

✦ முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்து குவிப்பு வழக்கில் முதல்வர் வெற்றி பெற கோயில் களில் சிறப்பு பிரார்த்தனை நடத்த அற நிலையத் துறை சுற்றறிக்கை.

– **தினமலர் செய்தி**

ஓகோ; அப்ப, இந்த வழக்கை ஜெயலலிதா, சசிகலா வுக்காக தமிழக அரசாங்கமே நடத்துதுங்களா... சொல்லவே இல்லையே.

✦ மற்ற மதங்களைவிட கழிப்பறையைப் பயன் படுத்தாதவர்கள் எண்ணிக்கை (41 சதவீதம்) இந்து மதத்தில்தான் அதிகம்.

– **பெங்களூர் ஆய்வு நிறுவனம்**

ஆகமப்படி கோயில்களுக்கு கழிப்பறை கிடையாது. வாஸ்துப்படி வீடுகளுக்கு கழிப்பறை கிடையாது; ஆச்சாரப்படி வாழ வேண்டாங்களா?

✦ 2004இல் போபாலில், 20,000 பேர் சாவதற்குக் காரணமாக இருந்த விஷ வாயுக் கழிவுகள் இன்னும் அகற்றப்படாததைக் கண்டித்து மக்கள் போராட்டம்.

– **செய்தி**

இப்ப, இதுக்குத்தான் அவசரமா? முதலில் கங்கையை சுத்தப்படுத்தி புண்ணியம் தேடு வோம்; அப்புறம் போபால் பிரச்சினை தானாக சரியாகி விடும்!

✦ மாநில அரசுகள் விதவைகளைக் காப்பாற்றும் பொறுப்பை தட்டிக் கழித்து பிருந்தாவன் நோக்கி குவிய அனுமதிக்கக் கூடாது.

– **தொகுதி உறுப்பினர் ஹேமமாலினி**

இதைத் தொகுதிப் பிரச்சினையாகத்தான் பார்ப்பீங் களா? சமூகப் பிரச்சினையாக எப்பத்தான் பார்க்கப் போறீங்க?

✦ குரு பூஜை நடக்கும் இடங்களுக்கு அரசியல் தலைவர்கள் செல்வதை தவிர்த்தால் அதுவே மக்களுக்கு செய்யும் சேவை.

– **மதுரை உயர்நீதிமன்றம்**

தலைவர்களே! இந்த ஒரு சேவையையாவது செய்வதற்கு முயற்சியுங்களேன்!

✦ அனைவருக்கும் தெரிந்த பிரபலமானவரை தமிழக காங்கிரசுக்கு தலைவராக்க வேண்டும்.

– **ப. சிதம்பரம்**

சரி; ஆக்கிடலாம். பிரபலத்தை எந்தக் கட்சியி லிருந்து, எந்த நாட்டிலிருந்து தேடிப் பிடிக்க வேண்டும் என்பதையும் சொல்லுங்க.

✦ சுப்பிரமணியசாமி, மீனவர் படகுகளை விடுவிக்க வேண்டாம் என்று இராஜபக்சேயிடம் பேசியதை வெளியே சொல்லியிருக்க வேண்டாம்.

– **'துக்ளக்'கில் சோ**

இப்படி சோ, வெளியே சொல்லியிருப்பதைவிட, சு.சாமி வெளியே சொன்னது, எவ்வளவோ மேலானது!

✦ காந்தி பிறந்த நாளில், 'காந்திய வழியில் அம்மா ஆட்சி' என்ற தலைப்பில் மாணவிகளுக்கு கட்டுரைப் போட்டி.

– **கல்வித் துறை உத்தரவு**

இந்த தலைப்பில் ஒருவர் கட்டுரை எழுதி விட்டால் அதற்கு நோபல் பரிசுகூட கொடுக்கலாம்! தப்பே இல்லை!

## சந்திரபோசு வாழ்விணையர் நினைவு நாள்

19.9.2014 மாலை 5 மணியளவில், தியாகி இமானுவேல் பேரவையின் பொதுச் செயலாளர் பூ.சந்திரபோசு வாழ்விணையர் ஆசிரியர் சரசுவதியின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு எமனேசுவரத்தில் நடந்தது. நினைவிடத்தை பொறியாளர் மு.ஊர்காவலன் தலைமையில் மூத்த வழக்குரைஞர் பொ. ரெத்தினம் திறந்து வைத்தார். சரசுவதியின் படத்தை மருத்துவர் சு.காளி ரெத்தினம் திறந்து வைத்தார். "வழிகாட்டும் ஒளிவிளக்கு" நினைவு மலரை அருட்பணி அந்தோணிராஜ் வெளியிட்டார். வை.தேவதாசு தலைமையில், "குடும்பமும் அரசியலும்" என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி, தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் பொதுச் செயலாளர் சாமுவேல்ராசு, ஆவணப்பட இயக்குநர் பூங்குழலி மற்றும் முதுகலை ஆய்வு மாணவர் கிருஷ்ண ஜோதி ஆகியோர் கருத்துரை ஆற்றினர்.

## ‘முன்னோடி – பின்னோடி’ வாதங்களுக்கு மறுப்பு (10)

# பெரியாருக்கு எதிரான ‘முனை மழுங்கும்’ ஆதாரங்கள்!

**‘கண்டதைப் படிப்பவன்’**

‘**த**மிழ்நாடு தமிழருக்கே’ என்ற தீர்மானத்தை முன் மொழிந்ததே மறைமலைஅடிகள் என்றும், பெரியார் பின் தொடர்ந்தார் என்றும் நாவலர் நெடுஞ்செழியன் எழுதிய ‘தி.மு.க.’ என்ற நூலிலிருந்து தோழர் பெ.மணியரசன் ஆதாரம் காட்டுகிறார். இது, திராவிடர் கழகத்துக்கும் தி.மு.க.வுக்கும் இடையே ‘முரண்பாடுகள்’ நிறைந்த காலகட்டத்தில் எழுதப் பட்ட நூல். இது குறித்து மேலும் சில வரலாற்றுத் தகவல்களைப் பார்ப்போம்:

1956-லிருந்து 1960 வரை நாவலர் இரா.நெடுஞ்செழியன் தி.மு.க.வின் பொதுச் செயலாளராக இருந்தார். 1961இன் தொடக்கம் தி.மு.க.வில் ஈ.வெ.கி. சம்பத், கலைஞர் கருணாநிதி ஆகியோரிடையே தொடங்கிய உரசல் உச்சத்தை அடைந்த காலகட்டம். பொதுச் செயலாளராக வர எண்ணியிருந்த கலைஞர் வரக் கூடாது என்பதற்காகப் பதவியில் இருப்பவர்கள் (அப்போது கலைஞர் சட்டமன்ற உறுப்பினர்) பொதுச் செயலாளராகக் கூடாது என்ற தீர்மானத்தைத் தீர்மானக் குழு தலைவராக இருந்த ஈ.வெ.கி.சம்பத் கொண்டு வந்தார் (அப்போது ஈ.வெ.கி.சம்பத் நாடாளுமன்ற உறுப்பினர்).

எனவே சம்பத் மதியழகனை நிறுத்த, கலைஞர் சி.பி.சிற்றரசை நிறுத்த முடிவு செய்தனர். குழப்பம் வேண்டாமென அண்ணாவே (அவரும் சட்ட மன்ற உறுப்பினர் தான்) விதிகளைத் தளர்த்தி பொதுச் செயலாளர் ஆனார்.

இந்த உள்கட்சிப் பூசல் தொடங்கியிருந்த காலகட்டத்தில், தி.மு.க. தொடங்கப்பட்டபோது தி.மு.க.வுக்குப் போய், போன வேகத்தில் மீண்டும் பெரியாரிடம் வந்துவிட்ட புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 15.03.1960இல் தனது ‘குயில்’ இதழில் கீழ்க்கண்டவாறு எழுதினார்.

“பெரியார் கழகத்துக்கு சேர்த்து வைத்த பெருந்தொகையே, அவரைச் சுற்றிக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் அதை சுருட்டிக் கொண்டு ஓட சிந்திக்க வைக்கிறது”, என்றெல்லாம் எழுதிவிட்டு “இன்று பெரியாரின் நிலையை நோக்குவோர் கண்ணீர் விடுவார் என்பதில் அய்யமில்லை.” குருசாமி (குத்தூசி), பொதுச் செயலாளர், விடுதலைக்கு ஆசிரியர். அவர் அந்த இரண்டு ஆயுதங்களையும் வைத்துக் கொண்டு செய்யும் வேலை என்ன தெரியுமா? அண்ணாத்துரை வேலை செய்கிறார். கிளைக் கழகங்கள் எல்லாவற்றிலும் பிரிவினையை ஏற்படுத்திவிட்டார் காலிப் பசங்களை எல்லாம் கையில் பிடித்துக் கொண்டு இழிசெயல்கள் அனைத்தையும் செய்து வருகிறார்.

இந்த நிலையில் சம்பத் அவர்கள், “கண்ணீர்த் துளிக் கட்சியை உதறித் தள்ளிவிட்டுத் திராவிடர் கழகத்தைச் சேர்ந்து அதைக் காப்பாற்றித் தர வேண்டும்” என்று எழுதினார்.

1961 தொடங்கிய சமயம், சம்பத்தை மறைமுகமாகத் தாக்கி, ‘திராவிட நாடு’ இதழில் ‘எல்லோரும் இந்நாட்டு மன்னர்’ என்ற தொடர் ஒன்றை எழுதினார். அதில் ‘புயலார்’ என்றொரு கதைமாந்தன். அது சம்பத்தைக் குறித்ததே.

அதற்கு எதிர்வினையாக ‘அண்ணாவின் மன்னர்’ என்ற தலைப்பில் சம்பத், கண்ணதாசனின் ‘தென்றல்’ ஏட்டில் தொடர் எழுதத் தொடங்கியிருந்தார். அது, செயற்குழுவில் சம்பத்தும், கண்ணதாசனும் தாக்கப்படும் நிலையை உருவாக்கியது. சம்பத் மறுநாள் தனது விலகல் கடிதத்தைக் கொடுத்து விட்டார். சம்பத்தின் அவைத் தலைவர் பதவிக்கு நாவலர் இரா.நெடுஞ்செழியன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதற்கு முன்பாகவே, 1961 ஜனவரி 31ஆம் நாளிட்ட ‘குயில்’ ஏட்டில் புரட்சிக் கவிஞர் மீண்டும் ஒரு தலையங்கத்தை எழுதினார். அதில், “திரு. சம்பத்து தி.மு.க.வை விட்டு வந்து விடவில்லை; ஆனால், அவர் தி.மு.க.வில் இருக்கிறார் என்றும் சொல்லிவிட முடியாது. தி.மு.க.வில் உள்ள பொல்லாதவர்கள் எங்குமுள்ள பொல்லாதவர்கள் போல் அல்லர். கடைந்தெடுத்த பொல்லாதவர்கள். தாம் கொண்டிருந்த நல்ல கொள்கைகளை அவர்கள் தலைகீழாக மாற்றிக் கொண்டவர்கள். தமிழரின் தாலி அறுப்பதையே நோக்கமாகக் கொண்ட ஆச்சாரியிடம் (இராஜாஜி) கூட்டு சேரவும் ஒப்பிவிட்டார்கள். அந்த தி.மு.க. பசங்கள் எதிர்வரக் கண்டால் முடிச்சுமாறிப் பசங்கள் எதிர்வந்தது போல் தோன்றுகின்றது எனக்கு!” என்று எழுதினார்.

இறுதியில், 19.04.1961 அன்று சம்பத் ‘தமிழ்த் தேசியக் கட்சி’ என்ற புதிய கட்சியை அறிவித்துவிட்டார். தனிக்கட்சி தொடங்கிய சம்பத் பெரியாரை நேரில் சந்தித்தார். “இவ்வளவு காலம் கழித்தாவது என் மகனுக்கு என் புத்தி வந்ததே என்று எண்ணி மகிழ்கிறேன்” என்றார் பெரியார்.

அப்போதுதான் சம்பத் வகித்து வந்த அவைத் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த இரா. நெடுஞ்செழியன் பெரியாரின் கூற்றுக்குப் பதிலடியாக “அன்று திராவிடர் கழகம் பிரிவதற்குத் தந்தை காரணமாக இருந்தார். இன்று திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவதற்குத் தமையன் காரணமாக இருக்கிறார்” என்று குறிப்பிட்டார். இது தான் 1961ன் தொடக்கக் காலாண்டில் நிலவி வந்த தமிழக அரசியல் சூழல்; தி.க.- தி.மு.க. உறவுச் சூழல்.

இப்படிப்பட்ட அரசியல் சூழல் நிலவிய 1961 ஜூலையில் நாவலர். இரா. நெடுஞ்செழியன் எழுதி வெளியிட்ட நூல் தான் தோழர் மணியரசன் குறிப்பிடும் ‘தி.மு.க.’ என்ற நூல். இந்த பகைமைச் சூழல் ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்ற முழக்கத்தை முதலில் எழுப்பியது பெரியார் தான் என்பதைக்கூட நாவலர். இரா.நெடுஞ்செழியன் ஏற்றுக் கொள்ள முடியாமல் செய்திருக்குமோ? நாமறியோம்.

எப்படியிருப்பினும் நாவலர். இரா.நெடுஞ்செழியனின் கூற்றை மீண்டும் ஒரு முறை பார்ப்போம். “1938 ஆம் ஆண்டு மே திங்களில் சென்னை கடற்கரையில் கூட்டப்பெற்ற மாபெரும் இந்தி எதிர்ப்புப் பொதுக்கூட்டத்தில் “தமிழ்நாடு தமிழர்க்கே ஆக வேண்டும்” என்ற தீர்மானத்தை முன்மொழிந்தவர் பேராசிரியர் மறைமலை அடிகள் ஆவார்கள். அதனை வழிமொழிந்து பேசியவர்கள் பெரியார் இராமசாமி, ச.சோமசுந்தர பாரதியார் ஆகியோர்கள் ஆவார்கள்” என்பதே முதற்பகுதி.

முதலில் ஒரு மாநாட்டில் முன்மொழியப்படும் தீர்மானங்கள், முன்மொழிந்து பேசியவரால் தான் கொண்டு வரப்பட்டது என்பது எவ்வளவு உண்மை என்பது மாநாடு நடத்திய அனுபவம் உள்ள அனைவருக்கும் நன்கு தெரியும். முன்னதாகவே வரையப்பட்டு தயார் நிலையில் இருக்கும் தீர்மான வரிகளை ஒருவர் வாசிப்பார். அதுவே முன்மொழிந்தார் என்று கூறப்படும். நாம் கருதிப்பார்க்க வேண்டியவற்றில் இதுவும் ஒன்று.

அடுத்ததாக நாவலர். இரா.நெடுஞ்செழியன் பதிவிட்டுள்ளவாறான சென்னை கடற்கரையில் 1938 மே திங்களில் ஏதேனும் கூட்டம் கூட்டப்பட்டதா என்பதை ஆய்வோம். திருச்சி உறையூரில் 01.08.1938 அன்று புறப்பட்டு 42 நாட்கள் இந்தி எதிர்ப்பு விளக்கங்களையும், போராட்ட ஆதரவையும் திரட்டியவாறு வந்த இந்தி எதிர்ப்புப் பிரச்சாரப் படை வரவேற்புக் கூட்டம் 11.09.1938 அன்று தான் நடைபெற்றது. அக்கூட்டத்தில் தான் “தமிழ்நாடு தமிழருக்கே” என்ற முழக்கம் முதன்முதலாக எழுப்பப்பட்டதாக பல்வேறு வரலாற்று பதிவுகள் கூறுகின்றன.

ஆனால் நாவலர் இரா.நெடுஞ்செழியன் 1938 மே திங்கள் என்கிறார். நமக்குக் கிடைத்துள்ள தரவுகளின் படி, 26.06.1938 அன்று கான் பகதூர் கலிபுல்லா தலைமையில் 50,000 பேர்கள் கூடிய இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடந்துள்ளது. அதில் பெரியார், அண்ணா, கி.ஆ.பெ. விசுவநாதம், கே.எம். பாலசுப்பிர மணியம் ஆகிய நால்வர் மட்டும் பேசியுள்ளனர். அடுத்ததாக 31.07.1938 அன்று சென்னை கடற்கரையில் 60,000 பேர் கூடிய இந்தி எதிர்ப்புக் கூட்டம் சர். பி.டி.ராசன் தலைமையில் நடந்துள்ளது. அதில் என்.வி. நடராசன், டாக்டர். தருமாம்பாள், மறை. திருநாவுக்கரசு முதலியோர் உரையாற்றியுள்ளனர்.

ஆனால், இரா.நெடுஞ்செழியன் நூலில் உள்ளது போல் 1938 மே மாதம் எந்த இந்தி எதிர்ப்புக் கூட்டமும் சென்னை கடற்கரையில் நடைபெறவில்லை. ஆனால் 28.05.1938 அன்று திருச்சியில் இந்தி எதிர்ப்பு வாரியங்களின் மந்திராலோசனைக் கூட்டம் என்பதாக ஒரு கூட்டம் நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் கூடியுள்ளது. அதில்தான் சென்னை மாநில இந்தி எதிர்ப்பு வாரியம் (The Anti-Hindi High Command) அமைக்கப்பட்டது. அதிலும் தனித் தமிழ்நாடு தீர்மானம் எதுவும் நிறைவேற்றப் பட்டதாகத் தெரியவில்லை.

ஆனால் தோழர் மணியரசன் பெரும் உற்சாகத்துடன் குறிப்பிட்டிருப்பது போன்றதொரு சொற்பொழிவும், தீர்மானமும் வேறு சில கூட்டங்களில் பேசப்பட்டுள்ளன.

1937 அக்டோபரில் சென்னை பொதுக் கூட்டமொன்றில் பேசிய சோமசுந்தர பாரதியார் தமிழ்ப் பண்பாட்டைக் காப்பதற்காகத் தமிழ் மாநிலம் அமைக்கப்பட வேண்டும் என்றும் இந்தி எதிர்ப்புப் போராட்ட காலம் தான் இதற்கு உகந்த தருணம் என்றும் பேசியுள்ளார்.

அது போலவே 12.10.1937 இல் திருநெல்வேலி தமிழ்ப் பாதுகாப்புச் சங்கத்தின் சார்பில் தமிழறிஞர் எம்.எஸ்.பூர்ணலிங்கம் பிள்ளை தலைமையில் சோமசுந்தர பாரதியாரும், அண்ணாவும் உரையாற்றிய பொதுக் கூட்டத்தில் “தமிழ் மாநிலம் அமைக்கப்பட வேண்டும்” என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ( தினமணி 18.10.1937/17.10.1996 )

12.11.1937 அன்று திருவையாறு செந்தமிழ்க் கல்லூரி சார்பில் உமாமகேசுவரம் பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் பேசிய சோமசுந்தர பாரதியார் “ஆந்திர மாகாணத்தைக் காங்கிரசார் பிரித்துவிடத் தீர்மானித்திருப்பது போல் தமிழ் மாகாணத்தையும் பிரித்துவிட தீர்மானத்தைக் கொண்டு வருவது அவசியமென்று” வற்புறுத்தினார். (குடிஅரசு 21.11.1937)

ஆனால் இவையெல்லாம் தமிழ் பேசும் மாவட்டங்களைப் பிரித்து தனி மாநிலம் அமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தவேயன்றி தனித் தமிழ்நாடு கோருபவை அல்ல.

தோழர் மணியரசன் நெடுஞ்செழியனின் எந்த நூலைப் பெரியாரின் அரசியல் பெருமைகளைக் குறைத்திட வேண்டும் என்ற ஆர்வம் பொங்க - ‘தி.மு.க.’ என்ற நூலில் 10, 11ஆம் பக்கங்களிலிருந்து எந்த பத்திகளை எடுத்துக் காட்டினாரோ, அதற்கு முந்தைய பத்தி ஏனோ தோழர் மணியரசன் கண்ணுக்குப் படாமல் மறைந்து போய்விட்டது. அப்பத்தி பின்வருமாறு:-

“தமிழ்நாடு தமிழர்க்கே ஆக வேண்டும் என்ற எண்ணம் இப்பொழுது தான் புதிதாகத் தோன்றியிருக்கிறது என்று யாரும் எண்ண வேண்டாம். அந்தக் கருத்துக்கு 1938ஆம் ஆண்டில் முதன் முதலாக வித்திட்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னைய பரம்பரையினர் ஆவர். தமிழ்நாடு தனி நாடாகப் பிரிய வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்று வளர்ந்து சில ஆண்டுகளில், அனுபவ அறிவின் விளைவாகவும், வளர்ச்சியின் அறிகுறியாகவும் “திராவிட நாடு திராவிடருக்கே” என்ற கருத்தாக மாறிற்று. “தமிழ்நாடு தமிழர்க்கே” என்ற கருத்தை உள்ளடக்கிக் கொண்டு வளர்ந்த கருத்து தான் “திராவிட நாடு திராவிடருக்கே” என்பது.

இது தான் மணியரசன் காணத் தவறிய / எடுத்துக் காட்டத் தவறிய முன் பத்தியாகும். அதில் குறிப்பிட்டுள்ளபடி “தமிழ்நாடு தமிழர்க்கே” என்பதற்கு வித்திட்ட தி.மு.க.வின் முன்னைய பரம்பரையினர் யார்? காங்கிரசுக்காரரான சோமசுந்தர பாரதியாரா? அல்லது சைவப் பழமான மறைமலை அடிகளா? இருவரும் அன்று; பெரியார் தான் என்பது

(4 ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION 24.09.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# 1929லேயே வடநாட்டாரை-வெளிநாட்டார் என கூறியவர், பெரியார்!

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசியலின் அரிச்சுவடி அறிந்த எவர் ஒருவருக்கும் புலப்படுமே? மணியரசனுக்கு மட்டும் ஏன் புலப்படவில்லை? விடையை எங்களிடம் சொல்ல வேண்டிய தில்லை; நீங்கள் புரிந்து கொண்டால் அதுவே போதும்.

அதோடு, முன்னைய பரம்பரையினர் என்று எழுதிய நெடுஞ்செழியனால், பெரியார் என்று எழுதமுடியாமல் போனதற்கான காரணத்தையும் இதனுடன் சேர்த்து யோசித்துப் பாருங்கள்.

முதலாவதாக, நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் 'தி.மு.க.' என்ற நூல் நினைவுகளிலிருந்தே எழுதப்பட்டிருக்க வேண்டும். எனவே தான், 1938 செப்டம்பர் 11ஆம் நாளன்று நடைபெற்ற இந்தி எதிர்ப்பு வழிநடை பிரச்சாரப் படையை வரவேற்று, சென்னை கடற்கரையில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வின் மாதமே 1938 மே என மாற்றிப் பதியப்பட்டுள்ளது. இரண்டாவதாக, அவ்வாறே ஆயினும் தோழர் மணியரசன் மேற்கோள் காட்டும் பத்திகளுக்கு முந்தியதாக உள்ள பத்தியில் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கம் முதன்முதலாக தி.மு.க.வின் முன்னைய பரம்பரையினரால் முன்வைக்கப்பட்டது என்றும், பின்னர் அம்முழக்கம் 'திராவிடநாடு திராவிடருக்கே' என்று மாற்றியமைக்கப்பட்டது என்றும் கூறியிருப்பதில், முன்னைய பரம்பரையினர் என்பது பெரியாரைக் குறிப்பதே என்பதை எவர் ஒருவரும் எளிதில் உய்த்துணர முடியும்.

அக்காலக்கட்டத்தில் பெரியாருக்கும் தி.மு.க.வுக்கும் இடையே இருந்த கடுமையான முறுகல் நிலையே, நெடுஞ்செழியனால் நேரடியாக 'பெரியார்' என்று குறிப்பிட முடியாமல் 'முன்னைய பரம்பரையினர்' என்று சுற்றி வளைத்து கூறச் செய்திருக்க வேண்டும். இவை ஒருபுறம் இருக்க, நாவலர் நெடுஞ்செழியன் எழுதியது இது ஒரு நூல் மட்டுமே அல்ல.

1996ஆம் ஆண்டில் 'திராவிட இயக்க வரலாறு' (முதல் தொகுதி) என்ற நூலினையும், 2000ஆம் ஆண்டில் 'வாழ்வில் நான் கண்டதும் கேட்டதும்' என்ற இயக்க வரலாறு தொடர்பான இருநூல்களை எழுதியுள்ளார். 'திராவிட இயக்க வரலாறு' என்ற நூலின் இருபதாம் பக்கத்தில் "1938-இல், இந்தி எதிர்ப்புப் படை, திரு.கே.வி.அழகர்சாமி அவர்களைப் படைத் தலைவராகக் கொண்டு, திருச்சியி லிருந்து புறப்பட்டு சென்னை வந்து சேர்ந்தபோது, அதனை வரவேற்பதற்காகக் கூட்டப்பட்டிருந்த கூட்டத்தில் நானும் பார்வையாளனாகக் கலந்து கொள்வதில் பெருமிதங் கொண்டேன்" என்று குறிப்பிட்டுள்ளார். அதே நூலின் 707, 708 ஆகிய பக்கங்களில் "படையினர் 1938 ஆகஸ்டு 1 ஆம் நாள் புறப்பட்டு 234 ஊர்களின் வழியே வந்து, 87 பொதுக்கூட்டங்களை நடத்தி, 43 நாட்களுக்குப் பிறகு, 1938 செப்டம்பர் 11 ஆம் நாளன்று சென்னைக்கு வந்து சேர்ந்தனர். அப்போது கல்லூரி மாணவனாக இருந்த நான், தமிழர் பெரும்படை இறுதிக் கூட்டமாக கோடம்பாக்கத்திலிருந்து புறப்பட்டுக் கடற்கரையை நோக்கிச் செல்லும்போது, அதனுடன் இணைத்துக் கொண்டு இந்தி எதிர்ப்பு முழக்கங்களை முழங்கிக் கொண்டே சென்றேன். சென்னைக்கு வந்தடைந்த தமிழர் பெரும்படையினரை வரவேற்க, திருவல்லிக்கேணி கடற்கரையில் பேராசிரியர் மறைமலை அடிகளார் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. அந்த கூட்டத்தில் பெரியார் இராமசாமி, பேரறிஞர் அண்ணா, நாவலர் சோமசுந்தர பாரதியார், சர்.பி.டி. இராசன், தவத்திரு சண்முகானந்தா அடிகளார், திருமதி மீனாம்பாள் சிவராசு, டபிள்யூ.பி.ஏ. சௌந்தர பாண்டியன், பரவஸ்து இராஜகோபாலாச்சாரியார், பட்டுக்கோட்டை கே.வி. அழகர்சாமி ஆகியோர் விரிவுரைகள் ஆற்றினார்கள். அந்தக் கூட்டத்தில் இறுதி வரை இருந்து சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழும் வாய்ப்பினை நான் பெற்றேன்" என்று குறிப்பிட்டுள்ளார். அதன்படி முழுமையாகக் கேட்கும் வாய்ப்பில் நடந்தது என்ன என்பது அந்நூலில் எங்கும் காணோம்.

ஆனால், அதனைத் தொடர்ந்து நெடுஞ்செழியன் எழுதி 2000ஆம் ஆண்டு வெளியான "வாழ்வில் நான் கண்டதும் கேட்டதும்" என்ற நூலின் 46ஆம் பக்கத்தில் பதியப்பட்டுள்ள செய்தி: அவர் முழுமையாகக் கேட்டதில் "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற முழக்கம் முதன்முதலில் யாரால் எழுப்பப்பட்டது என்பதற்கு நாவலர் நெடுஞ்செழியனின் சாட்சியமே நமக்கு அழுத்தமாகக் கூறுகிறது. "சென்னை கடற்கரையில் இந்தி எதிர்ப்புப் பெரும்படைக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்தக் கூட்டத்தில் நான் மாணவனாகக் கலந்து கொண்டேன். பெரியார் அவர்கள் இலட்சக்கணக்கான மக்கள் மத்தியில் வீரமுழக்கமிட்டார். அந்தக் கூட்டத்தில் பேசிய பெரியார், இந்திய அரசியல் அமைப்பில் தமிழர் நலம் தனியாகப் பாதுகாக்கப்பட உறுதி ஏதும் இல்லை என்றும், எந் நாளும் பார்ப்பனரும் வடநாட்டாரும் மட்டும் தான் ஆதிக்கம் செலுத்தி வருவர் என்றும், அதற்கான பரிகாரம் தமிழ்நாட்டின் ஆட்சி தமிழர் கைக்கு வருவது தான் என்றும் கூறி "தமிழ்நாடு தமிழர்க்கே" என்ற கொள்கை முழக்கத்தை முதன்முதலாக அறிமுகப்படுத்தினார்" என்று தெளிவுபடக் கூறியுள்ளார்.

இதுவரை கூறப்பட்டவை அனைத்தும் நாம் எடுத்துக் கொண்ட பொருளுக்கு இன்றியமையாதவை அல்லவெனினும் தோழர் மணியரசன் நெடுஞ்செழியனின் 'தி.மு.க.' என்ற நூலிலிருந்து மேற்கோள் காட்டிய காரணத்தாலேயே நாமும் விளக்கத்துக்காக இவ்வளவும் எழுத நேரிட்டது.

தமிழறிஞர்கள் கூறிய பின் தான் பெரியார் தனித் தமிழ்நாடு குறித்துப் பேசினார் என்னும் தோழர் மணியரசனின் கூற்று குறித்துப் பார்ப்போம். பெரியாருக்கு எப்போதிருந்து நாம் வேறானவர்கள், வடநாட்டார் வேறானவர்கள்; அன்னியர்கள் என்ற எண்ணம் இருந்து வந்துள்ளது என்பதை நாம் அறிய 1929-இல் இருந்து தரவுகள் உள்ளன. அவை தாம் எவை?

முதலாவது தரவு 'குடிஅரசு' ஏட்டில் 12.05.1929 அன்று வெளிவந்துள்ள "மலையாளமும் மாளவியாவும்" தலையங்கத்தில் உள்ளது. அப்படி என்ன தான் உள்ளது என்று பார்ப்போமே. "தென்னாட்டுப் பார்ப்பனர்கள் அரசியலிலாவது, மத இயலிலாவது, சமுதாய இயலிலாவது தங்கள் புரட்டுக்கள் எல்லாம் வெளியாய் விடுவதன் மூலம் செலவாகிவிட்டால் வடநாட்டிலிருந்து யாராவது ஒருவரைக் கொண்டு வந்து பித்தலாட்டப் பிரச்சாரம் செய்வது வழக்கம். அது மாத்திரமல்லாமல் தாங்களாக தனித்து வெளியில் புறப்பட்டு பிரச்சாரம் செய்ய முடியாத பட்சத்திலும் வெளிநாட்டிலிருந்து யாரையாவது பிடித்து வந்து அவர்கள் மதிப்பின் மறைவில் மேடை மேலேறிப் பேச இடம் சம்பாதித்துக் கொள்வது வழக்கம்" என்கிறார்.

அவ்வாறு வெளிநாட்டிலிருந்து அழைத்து வரப்பட்டவர்களை அதே தலையங்கத்தில் பட்டியலிடுகிறார் பெரியார். "அதாவது சென்ற வருஷத்திற்கு முன் திரு.காந்தியைக் கூட்டிக் கொண்டு வந்து அவர் சாயமும் வெளுத்து..............." பிறகு, "திரு.பஜாஜ் (ஜமன்லால் பஜாஜ் என்னும் இவர் அனைத்திந்திய காங்கிரஸ் கட்சியின் பொருளாளராக இருந்தவர். பஜாஜ் குழுமத்தின் நிறுவுநர்) அவர்களைத் தருவித்து அவர்களுடன் திரிந்ததில் உள்ள யோக்கியதையும் போய் ......................." "இந்த வருஷத்திற்கு திரு. பண்டிட் மாளவியா அவர்களைத் தருவித்து..................."

ஆக, இந்தத் தலையங்கத்தில் பெரியார் யார் யாரை **வெளிநாட்டினர்** என்கிறார். குஜாராத்தில் பிறந்த காந்தி; இராஜஸ்தானில் பிறந்த மார்வாரி பஜாஜ்; உத்திர பிரதேசத்தில் பிறந்த பண்டித மதன்மோகன் மாளவியா ஆகியோரைத் தான். 1929-இல் பெரியார் பார்வையில் குஜராத்தும், இராஜஸ்தானமும், உத்திர பிரதேசமும் வெளிநாடுகள்.

அடுத்தது, 25.08.1929-இல் குடிஅரசு ஏட்டில் "சுயமரியாதை இயக்கம்" என்ற தலைப்பில் எழுதிய தலையங்கம். சுயமரியாதை இயக்கத்தின் வீச்சான செயல்பாடு களில் அதிர்ந்து போன மதவாதிகள் வர்ணாசிரம மாநாடுகள், சைவ மாநாடுகள் நடத்தியும், தேசிய மேடைகளிலும், சமய மாநாடுகளிலும் சுயமரியாதை இயக்கம் மதத்தைப் பாழ் பண்ணி வருகிறது; அதை ஒழிக்க வேண்டும் என்று கூவிப் பார்த்தார்கள் என்றெல்லாம் எழுதிய பின் பெரியார் கீழ்க்கண்டவாறு தொடர்கிறார். "இவ்வளவும் போதாமல் வெளிநாடு களிலிருந்து, திருவாளர்கள் காந்தி, மாளவியா, மூஞ்சே ஆகியவர் களைக் கொண்டு வந்து இதற்கு (சுயமரி யாதை இயக்கத்திற்கு) எதிரிடையாக பிரச்சாரம் செய்தும் பார்த்தார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார். ஆக, முந்தைய வெளிநாட்டினர் பட்டியலில், புதிதாக இன்றைய சட்டீஸ்கர் மாநிலத்தில் உள்ள பிலாஸ்பூரில் பிறந்த பாலகிருஷ்ண சிவராம் மூஞ்சேவையும் சேர்த்துக் கொள்கிறார் பெரியார்.

(தொடரும்)

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆9941613535

## மருத்துவர் சவுந்தரபாண்டியன் நடத்தும் இலவச தோல் நோய் மருத்துவ முகாம்

ஓய்வு பெற்ற அரசு மருத்துவரும், பெரியாரியலாளருமான மதுரை மருத்துவர் சவுந்தரபாண்டியன், குத்தூசி குருசாமி இலவச தோல் நோய் மருத்துவ முகாம்களை தமிழகம் முழுதும் நடத்தி வருகிறார். கடந்த ஆண்டு 15 முகாம்களை நடத்தி, இவ்வாண்டு மாதம் இரண்டு ஊர் வீதம் 20 முகாம்களை நடத்த திட்டமிட்டு செயல்பட்டு வருகிறார். ஒவ்வொரு முகாமிலும் பகுத்தறிவு அறிவியல் கருத்துகளை துண்டறிக்கைகளாக அச்சடித்து, பல்லாயிரக் கணக்கில் இளைஞர்களிடையே பரப்பி வருகிறார். தனது சொந்த பொருட்செலவில் மக்கள் சேவை செய்துவரும் மருத்துவரிடம் மதுரையை சுற்றியுள்ள தோழர்கள் தொடர்பு கொண்டால் இலவசமாக முகாம்களை நடத்துவதற்கு தயாராக உள்ளார்.

செப்.21 ஆம் தேதி இராசபாளையம் நாடார் மேனிலைப் பள்ளியலும், செப்.28 ஆம் தேதி காலை எம்.புதுப்பட்டி டார்லிங் செல்லத் துரை கலையரங்கிலும், காலை 10 மணி முதல் மதியம் ஒரு மணி வரை இலவச தோல் நோய் மருத்துவ முகாம்களை நடத்துகிறார்.

தொடர்புக்கு : 0452-2521976

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 25th September 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN